# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன்; நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை - II ஐப்பசி 1925 காசு - 7

## *ஸர்வ ஜன ஜபம்

என்னும்

## அனைவரும் வேண்டல்.

எவ்வெந் நாட்டினர், எவ்வெவ் இனத்தினர்,
எவ்வெம்†மதத்தின ரெனினும் ஆண் பெண்ணெனும்
இருபா லார்க்கும் ஏற்ற பிரார்த்தனை

—•(::)•—

ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C., வெள்ளக்கால்.

நன்மையை நினைகுவார் நவிலுவார் புரிவார்
நற்பய னைத்தாம் நண்ணிடு வதுவும்
தீமையை உன்னுவார் செப்புவார் செய்வார்
தீப்பயன் உறுவதும் திண்ணமா மென்னும்

---

* சம்பத்து ராய சயினரின் "எதிரிடைகள் இணக்கிசேதல்" (Confluence of Opposites) என்னும் நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக்கொண்டு வேண்டிய வேறுபாடுகளுடன் இயற்றியது.

†மெய்யர் இவர்,பொய் வேடத் தினர்இவர்
என்ன ஐயுற வின்றி அறியுமா
றுள்ளத் துள்ளதை உணரவல் லார்க்கலால்,
மற்றவர் உண்மை மதம் அறிவரிதால்;
மனிதனை மதத்தால் மதிக்கா தொழுக்கால்
மதித்தலே உண்மை மதிப்பா கும்மே.

உண்மையை உறுதியா உளத்தினுள் ஊன்றி
எண்ணுதல் இயம்புதல் இயற்றுத லென்னும்
முச்செயல் களினும் முயலுவே னாக.

பசுக்கொலை செய்தப்பசுத்தோ லாற்செய்
செருப்பினைத் தானம் செய்குதல் போலத்,
தீயஎவ் வகையினும் தேடிய பொருள்கொடு
செய்யும் எத்தருமமும் திண்ணமா அதர்மமே;
அதனால்,
அறமுறை திறம்பி அறம்செயே னாக;
அறநெறி வழிஇப்பொருள் ஆக்கே னாக;
அறவழி யன்றி இன் படையே னாக.
என்றும்,
நல்லோர் இணக்கமே நான்இணங் கிடுக;
நல்லோர் நினைவே நான்நினைந் திடுக;
நல்லோர் நடையே நான்நடந் திடுக;
பிறர்நன் முறைகளைப் பேணிஎன் முறைகளா
ஆக்குதற் காசை அடைவே னாக;

உயிர்களை வருத்திடல் ஒழிகுவே னாக;
அயலவர் பொருளினை அவாவே னாக,
அவருடை வாழ்வுகண் டழுக்கறே னாக;
அவர் செயும் நன்றியை அயர்த்திடே னாக;
எனைக் கெடுத் தவர்க்கும் நன் றியற்றுவே னாக;
வைதவர் தம்மையும் வாழ்த்துவே னாக,
வெறுத்தவர் தம்மையும் விரும்புவே னாக,
ஒறுத்தவர் தமக்கும் உதவுவே னாக;
பகைவர்க்கும அன்புசெய் பண்பினே னாக;
வாழ்க்கைத் துணையா லன்றிமற் றவர்பால்
காதலை அடைதலைக் கடிகுவே னாக;
இத்தனை நல்லொழுக் கியைந்துளே மென்று
பெருமைபா ராட்டும் பிழையிலே னாக:

செய்தற் குரிய சிறிய கடனையும்,
எய்தற் குரிய பயனைஎண் ணாமல்
அப்பயன் அடைந்திட அவாவுவர் யாரினும்,
விருப்பொடு செய்யும் விழுமியே னாக:

எனைஉல கத்தோர் இகழினும் புகழினும்,
செல்வம் என்னைச் சேரினும் தீரினும்,
இன்றே இறக்கினும் என்றும் இருக்கினும்,
எவ்வெவ் இன்மையும் எய்துதற் கெனினும்
எவ்வெத் துன்பையும் இரித்திடற் கெனினும்,
உண்மை தவறி ஒழுகே னாக:

உயிர்போ மெனினுமெய் உரைப்பே னாக;
ஒளித்திடல் செய்திடா துள்ளொடு புறம் ஒத்
தியற்றுகா ரியமெலாம் இயற்றுவே னாக:

எவ்வுயிர் துன்புறக் காணினும் இரங்கி
அவ்வுயிர்க் குதவியை ஆற்றுவே னாக;
என்னுடை நன்மைபோல் யாவர்நன் மைக்கும்
இரவினும் பகலினும் இடையற வின்றி
உழைத்திட ஊக்கம் உடையே னாக;
என்வாழ் நாளெலலாம் இடையறா தினிதே
பிறர்க்குநன் றாற்றிப் பெற்றிடும் இன்பால்
என்மனம் நிறைவினை எய்துவ தாக:

எனைஇகழ் வலியரை இறைஞ்சிடே னாக;
ஆருயிர் போவதற் கஞ்சிடேன் ஆக;
அவ்வுயிர் வாழ்வதை அருவரேன் ஆக;
வஞ்சகர் தீயர்தீ வழியினிற் பிறரால்
செனுத்திடப் பட்டவர் திறத்தும்என் நெஞ்சம்
கோபம்ஓர் சிறிதுமே கொண்டிடா தாக;
இச்சிறு தன்மைய ரெவருட னேனும்
எச்செய லெனினும்யான் இயற்றிட நேருமேல்
என்மனம் அமைதியை இழந்திடா தாக:

வருத்தம் என் மனத்தினை வருத்திடா தாக;
கடல் மலை வனம் இடு காடுகள் முதலா
வெருவிடு தனியிடம் மேவினே னாயினும்,
பாய்புலி பிடிக்கினும் பாமபு கடிக்கினும்
என்மனம் நடுக்கினை எய்திடா தாக;
அலையா உறுதியுற் றசைக்கவொண் ணுதாய்,
வச்சிர வெற்பென வற்பினை உற்று,

விருப்புறு பொருள்கள் விட்டு விலகினும்,
வெறுப்புறு பொருள்கள் மேவிச் சேரினும்;
ஒழுக்கம் வழுக்கா உளத்தே னுக.

ஒருயிரி ருந்துன் புற்றிடச் செய்யாப்
பேரறம் புவியெலாம் பெரிதும் பரவுக.
துன்பம் எவ் வுயிரையும் துன்று தொழிக.
பகையும் துயரும் பயமும் நீங்கி
எல்லா உயிர்களும் இன்பினை எய்துக.
அனைத்துயிர் களும்மன அமைதியை அடைக.
நன்மை எங் கெங்குமே நண்ணி மலிக.
தீமை எவ் வெவருமே செயவொணு தாக.
அறிவைப் பெருக்கலால் அருஞ்செயல் செயலால்
பெறுதற் குரியநற் பேறுக ளெல்லாம்
யாவரும் செய்குவா ராகி வாழ்க.

உடற்றுன் புளத்துயர் உயிரைவிட் டொழிக.
பஞ்சமும் நோய்களும் பாரைவிட் டகல்க.
வேண்டிய பொழுதினில் வேண்டிய அளவினில்
மிகா அது குறையாது விண்மழை பொழிக,
ஆள்வார் முறைபிறழாமே ஆள்க.
நீதி பதிகள் நெறியில் நின்று
பேத மின்றி நீதி செய்க.
பற்பல மக்கட் பகுதியும் பகை அற்
றொற்றுமை உற்றுநன் புடையராய் வாழ்க.

கொலைகளவாதிய குற்றமல் லாத
எந்தத் தொழிலும் இழிவில தென்றும்,
தொழில்புரி பவர்மனத் தூய்மைக் கியையத்
தொழில்தான் உயர்வினைத் துன்னிடு மென்றும்,
அவரவர் தமக்கிசை வாய்தொழில் செய்தல்
அறமா மென்றும் திறமா நம்பிக்,
கல்வித் துறையிலோ கைத்தொழில் முறையிலோ
எதனி லெனினும் இடைவிடா துழைத்துப்
பிறந்த நாடு பெருமை அடையச்
சிறந்த செயல்கள்தம் திறமைக் கியன்றவா
றனைவரும் செய்குவா ராகி வாழ்க.

*மண்முழு வதும்ஒரு மனையா, மண்வாழ்*
*மக்கட் டொகுதியும் மனைவளர் குடியா,*
*குணிப்பரு நாடர்அக் குடியிலுள் ளாரா,*
*ஒருகுடி உள்ளவர் ஒருவரோ டொருவர்*
*சண்டைசெய் திடுதலைத் தவிர்த்திட லன்றி*
*அன்பொடு வாழ்குதல் அறநெறி ஆதல்போல்,*
*ஒருநாட் டினர்மற் றொருநாட் டினரோ*
*டமர்புரி வதுதவிர்த் தன்பராய் வாழ்தல்*
*அறநெறி யெனஅறிந் தடைகநல் வாழ்வே.*

---

# வாழ்க்கையின் வெற்றியும் தோல்வியும்*.

திவான்பகதூர் ஸ்ரீ ச. பவானந்தம்பிள்ளை, I.S.O., சென்னை.

உலகத்தில மனிதர்க்கு நேரிடும் கஷ்ட நஷ்டங்கள், சில சமயங்களில் அதிக கொடுமையாகவும், அவைகளின் காரணங்கள் மெத்த விநோதமாகவும் இருக்கின்றன. ஆகையால் அவர்கள், எல்லாம அதிர்ஷ்ட லக்ஷ்மியால் ஆவது என்னும் குருட்டு நம்பிக்கைக்கு இடங்கொடுத்துக் கெடவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்; மூடரும் விசாரணையில்லாக் குருட்டு நம்பிக்கைக்காரரும் இந்த விஷயத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும், அப்பேர்ப்பட்ட வஸ்து ஒன்று இப்படிப்பட்ட விஷயங்களிற் பிரவேசிக்கிறதென்பதையும், அல்லது, உண்மையாகவே அப்பேர்ப்பட்ட வஸ்து உலகத்தில் உள்ளது என்பதையும் நம்புவதற்கு ஞான சாஸ்திரங்களில் இதுவரையில் சரியான ஆதாரம் இல்லை. ஆனால், எப்போதும் எல்லா யுகங்களிலும், மாந்தர், இம்மானத தேவதையாகிய அதிர்ஷ்ட லக்ஷ்மிக்கு அதிக அபசாரம செய்துவருகிறார்கள் என்பதையும், அவளுக்குக் கொஞ்சமேனும் சம்பந்தம இல்லாத விஷயங்

*காலஞ்சென்ற திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் 8-5-1925 அன்று, நீலகிரி ஜகத் மித்திர சங்கத்தில், "சோதிடம் என்பது என்ன?" என்பதைப்பற்றிப் பேசியபொழுது, அவைத்தலைவராயிருந்து ஆங்கிலத்தில் கூறிய சொற்பொழிவின் தமிழ்ப் பெயர்ப்பு இது. ஸ்ரீ. ச ப. பிள்ளையவர்களே மொழிபெயர்த்துதவியது.— பா, ப-ம்.

களைக்கொண்டு, அவள்மேற் குற்றஞ் சுமத்துகிறார்கள் என்பதையும், எல்லார்க்கும் நன்றாய் விளக்கிக் காட்டலாம். இப்படி அவர்கள் தங்கள் துரதிர்ஷ்டத்திற் சிலவற்றிற்காக அம்மானது தேவதையின் மேல் தகாபபழி சுமத்திக் குற்றவாளிகளாகிறபடி, நல்லதிர்ஷ்டம் என்று அவர்கள் சொல்லுகிற சிலவற்றிற்கும், அவளுக்குக் கொஞ்சமேனும தகாத அவளுடைய பெருந்தன்மையே காரணமென்று, உபசாந்தி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். வல்லமைந் திருடர் வளம் பெறுவதையும், நல்ல குணமுள்ள மூடர் துயர் உறுவதையும, உலகஞான மார்க்கத்தைவிட்டு, தங்கள் உள்ளத்தில் ஓங்கியுள்ள பேராசைக் குருட்டு மார்க்கத்தைப் பின்பற்றி, அறிவுடையோர் அலைவுக் கிடமபண்ணிக்கொள்வதையும் காணும் பொழுது, மாந்தர் அதிசயம் அடைந்து கலவரமாய், அதிர்ஷ்டலக்ஷ்மியின் திருவுள்ள மாற்றமே இந்த வேறுபாடான விஷயங்களுக்குக் காரணமென்று தம்மையும அறியாமல் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

'அழகிருந் தென்ன பண்ணும்?
அதிர்ஷ்ட மிருந்தால் உண்ணும்' என்பது அவர்கள் கோட்பாடு.

ஆனால், எல்லாம் அதிர்ஷ்டத்தால் ஆகிறதென்று குருட்டாட்டமாய்ச் சொல்லுகின்ற இந்தச் சாதாரண இயற்கைச் சம்பவங்கள், சாதாரணமாய் தவறுதலில்லாத ஒழுங்கான இயற்கைப் பிரகிருதியின் அளவாய் நேரிடுபவைகள் என்று நியாயமாகவும் சந்தேக மில்லாமலும் என்பித்துக்காட்டலாம். மாந்தர்தம் வாழ்நாட்களில், அதிர்ஷ்ட தேவதையின்மேல் குற்றஞ் சுமத்துகிற ஆபாசத்திற்கும், நன்றாய்ச் சதுரங்கமாடமாட்டாதவன் தன்னுடைய அதிர்ஷ்டவீனத்தைக்குறித்து முறையிடுவதற்கும், வித்தியாசமே இல்லை. இதுபற்றியே பின்வரும் செய்யுட் குறையாகிய

அநதத் தேவனால் ஆமென்ற மூடர்கள்
அதோகதி அடைவாரே, என்பதையும் கவனித்துக்காண்க.

வாழ்வை, மற்ற வித்தைகளைப்போல, உலக மேடைமேல் நடித்துக் காட்டும் நாடகவித்தையென்று சொல்லலாம். அதில் நேரிடும் பெருஞ்சம்பவங்கள் சாதாரண இடையூறுகளாய், சிற்ப வேலைதீர்ந்த நிலைப்பதுமை அல்லது பெருங்காவியத்தின் பற்பல அங்கங்கள் அல்லது பாகங்களைப் போலிருக்கின்றன. 'பெருஞ்செல்வமானது கூத்தாடுமிடத்திற்குக் கூடியுள்ள கூட்டத்தைப் போன்றது. அது போவதும (வறுமை வருவதும) அந்தக்கூட்டம பிரிந்து

போவதற்குச் சமானமாகும்" என்னுங்கருத்துள்ள பின்வரும் குறள் வெண்பாவைக் கவனிக்க:

கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று.

இங்கே பெருஞ்செல்வமென்றது, அந்தச் செல்வத்தால் வாழும் வாழ்வைக்குறித்ததாகும். எவனொருவன் இன்னொருவனை அதிர்ஷ்டமுள்ளவன் அல்லது அதிர்ஷ்டமில்லாதவன் என்று துணிந்து சொல்லுகிறானோ அவன், ஒரு சிற்பியை அல்லது கவிராயனை அவனுடைய வேலையை முடிப்பதில் அதிர்ஷ்டமுள்ளவன் அல்லது அதிர்ஷ்டமில்லாதவன் என்று சொல்லும் மற்றொருவனைப்போலப் பொருத்தமில்லாப் பொய்யுரை கூறுங்குற்றவாளியாகிறான். எந்த விஷயத்திலும் இடையறா ஊக்கமும் தொழின் முயற்சியுமே வெற்றியை விலைகொடுத்து வாங்கக்கூடியன. அதிர்ஷ்டத்துக்கு அதிற்கொஞ்சமேனும் சம்பந்தமே இல்லை.

தேச சரித்திரங்கள், இதிகாசங்கள், வாழ்நாள் வரலாறுகள் (ஜீவிய சரித்திரங்கள்) முதலிய எழுத்து மூலங்களில் நாம் என்ன வாசிக்கிறோம்?—வாணிபத்தில், கல்வியில், கைத்தொழிலில், சாஸ்திரத்தில, செய்திறமையில, செய்தொழிலில், மனஞ்சோராமல் முடிப்பதில வெற்றிபெற்ற விதத்தைப்பற்றியே வாசிக்கிறோம். அவைகளில் நூற்றுக்குத்தொண்ணூற்றொன்பதுவிஷயம், கடத்தற்கரிய பேரிடையூறுகளைக்குறித்தும், அவைகளைக் கடப்பதற்காச் செய்த விடாமுயற்சிகளைக் குறித்தும் கூறியுள்ள பழம்பாட்டிக்கதைகளாகவே யிருக்கும். விடாமுயற்சி செய்தால் விதியை வெல்லும் வல்லமையும் உண்டாகும். அதற்கு, உலகத்தாரெல்லாருமே அறியும்படி, பதினாறு வயதில் தாம் இறக்கவேண்டும் என்னும் விதியைவென்று, எமனுக்கு எமனாயிருந்து அவனைக்கொன்ற மார்க்கண்டேயமாமுனிவரே போதுமான சாக்ஷியாவார் என்றுங் கருத்தமைந்த

'உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர் குடித்த
கான்முளையே சாலுங் கரி' என்னும் செய்யுளையும்

'தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்' என்னுந் திருக்குறட்பாவையும் இங்கே

உய்த்துணர்ந்து காண்க.

'போசிக்கும் வேளையில், பசித்திரவுண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்னும் ஆன்றோர் வாக்கை ஆழ்ந்து கவனித்தால், எல்லா மாந்தரும் விடா முயற்சியின்மையில், சரிசமானமாய் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தார் அப்படி என்னுகிறதில்லை. விடாமுயற்சி என்பதுதான், வாழ்நாளின் எந்நிலைக்கும் முன்னிலையாயுள்ள உயர் குணத்தின் சாரமாயிருக்கிறது. அதுவே எல்லாவித நல்லொழுக்கங்களும் மேன்மைகளும் நன்னியிருக்க நாடும் பரவெளியாகும்.

விடாமுயற்சியைக் கெடுக்கவும் குறைக்கவும் சில சமயங்களில் இயற்கை வல்லமையும் கால இயல்பும் கருவிகளாயிருக்கின்றன. இவைகளைப் பெற்றுள்ள மாந்தர் உழைத்து ஒழுங்காய்ப் பாடுபடுவதை அசட்டைசெய்ய நேரிடும். அப்படியானால் இது, மற்றக் குற்றங்களைப்போல அவமானம் உண்டாக்கும். இதற்கு, விடாமுயற்சி செய்து நடந்த ஆமை நடை, வேகமான முயல் ஓட்டத்தை இறுதியில் வென்றதே சான்றாகும். பின்வரும் திருக்குறள் நீதிவெண்பாவைக் கவனித்துக்கொள்க:

'தூங்குமுயல் ஆமைக்குத் தோற்றதனால் மானம்போய்
ஏங்கி யிருந்ததை நீ எண்ணிப்பார்—ஓங்கும்
முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்'

சாதாரணக் குடிமக்களிலிருந்து பேர்பெரிய பற்பல மாந்தர் கிளம்பின தேசமென்று பெருமை பாராட்டிக் கொள்ளக்கூடிய தேசம், இங்கிலந்து ஒன்றேயாகும். ஆகையால் அந்நாட்டாரே உலகில் எந்நாட்டாரினுஞ் சிறந்தோராவார். கல்வி மூலம், அரசு மூலம், வாணிகமூலம், சாஸ்திரமூலம், கைத்தொழில் மூலம் முதலிய எல்லா மூலங்களிலும் முழுவதும் தமது சுயமுயற்சியினாலேயே தம்மைத் தாம் உயர்த்து நிறுத்திப் போபோன அங்கில மக்கள் அநேகர். அவர்களுக்குப் பிறவி யனுகூலமுங் கிடையாது; பொருள் உதவியும் இல்லை; நட்பு வன்மையும் இல்லை. இதுபற்றிய பின்வரும் நாலடிச் செய்யுளை நன்கு கவனிக்க:

'நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும் வன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.'

இதனால், 'நல்ல நிலையில் தன்னை நிறுத்துபவனும், தாழ்ந்த நிலையில் தன்னை நிறுத்துபவனும், அந்நன்னிலையிலிருந்து தன்னை

மேலும் மேலும் உயர்த்தி உச்சத்தில் நிறுத்துபவனும், அவ்வுச்ச நிலையில் தன்னைத் தலைவனாகச் செய்து கொள்பவனும் எல்லாம் தானே யாகும்' என்று பெறுப்படுவது காண்க.

இப்படி அதிர்ஷ்டத்தையும் புகழையும் வென்று தமதாக்கிக் கொண்டு, நிலையற்ற அதிர்ஷ்ட தேவதைகளைத் தமது திருவுளப்படி அடக்கி ஆட்படுத்தி யுள்ள ஆங்கில மக்களின் நாமாவளியை நாம் கவனித்துப் பார்க்கையில், அவர்கள் நம்போலியர்கள் அன்று; நம்மினும் வேறான சிருஷ்டி பேதம் உடையவர்கள்; நமக்கு எட்டாத உபகரணங்கள் அவர்களுக்கு எட்டியிருந்தன என்று அடிக்கடி நாம் எண்ணிக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இந்தத் தீர்மானம் இயற்கையானதுதான், ஆனாலும் சுத்தத் தவறு, காரியசித்தி, நிலையற்ற விதியின் பயனா? அல்லது உலகத்திலுள்ள மற்றெல்லாவற்றையும் போலத் திறமைக்கேற்ற கூலி, உழைப்புக் கேற்ற பிழைப்பல்லவா? காரியசித்தி பெற்ற பெருமக்களின் பொதுக் குணங்குறிகளைக் கொஞ்சநேரம் ஆலோசித்துப் பார்த்தால், நமக்கு இந்தக் கேள்விகளுக்கு விடை கூற வல்லமை உண்டாகும். அவ்விடைகளால், வாழ்க்கை ஓட்டத்தில் மனவுறுதியற்றலைபவர்களுக்குத் தைரியம் பிறக்கும். 'உரோமபுரி ஒரு நாளிற் கட்டியதல்ல' என்னும் அங்கிலப் பழமொழியை இங்கே உய்த்துணர்க.

காரியசித்தியின் முக்கியாம்சம், மூன் நாம் குறித்ததுபோலவே, அந்தக் கண்ணுக்கெட்டாத ஒன்று, அதாவது அதிர்ஷ்டம்" என்று எண்ணுகிறார்கள். அது இல்லாதபோது, முன்னுக்கு வரவேண்டுமென்று இவ்வுலகில் நாம் செய்யும் முயற்சிக ளெல்லாம் பயன் அற்றவை யென்றும், அது இருக்கும்போதும் அவைகள் வீண் என்றும் அநேகர் மதிக்கிறார்கள். இதுபற்றியே பின்வரும் செய்யுளும் ஔவையார் பாடியதாக வழங்குகிறது.

'ஈட்டும் பொருள் முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும்படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணு மகிலத்திர் என்றும்
தரியாது காணும் தனம்.'

இதற்கு, 'விதியின்படி அல்லாமல், முயற்சிகள் எத்தனை செய்தாலும், பொருள் சித்திக்காது. அப்படி அது கிடைத்தாலும் நிலைத்து நில்லாது. ஆகையால் அதைத் தேடாமல், என்றும் நிலைத்து நிற்கக்கூடிய கௌரவமாகிய

நல்லொழுக்கத்தைத் தேடிக்கொள்ளுங்கள்' என்று பொருள்படுவது காண்க. இந்த எண்ணம் உண்டாவதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா என்று வாக்குவாதஞ் செய்வது பெருங் கஷ்டமாய் முடியும். ஆனால், காரியசித்தி பெற்ற பெருமக்களின் ஆதி ஒழுக்கத்திற்கனுகூலமாயிருந்த காலதேச வர்த்தமானங்களை நாம் விசாரிக்கையில், இந்த மறைபொருளான அதிர்ஷ்டம் அல்லது விதிவசம் என்னும் பெயரே காணோம். அது இல்லாமலிருந்ததே விளக்கமாயிருக்கிறது. இப்பெரியோர், அனுகூலமான காலதேச வர்த்தமானங்களால் அல்ல, தமக்கவைகள் பிரதிகூலமாயிருந்தும் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். இதற்கு மாறாக, காரியசித்தி பெறாத ஒருவனைப்பற்றிப் பிறர் "ஐயோபாவம், அதிர்ஷ்டமில்லாதவன், விதி அவனுக்கு விரோதமாயிருந்தது" என்று சொல்ல நாம் பலமுறை கேட்கிறோம். ஆனாபோதிலும், அப்படிப்பட்டவனுடைய வரலாற்றை நாம் கூர்ந்து விசாரிக்கையில், அவன் காலதேச வர்த்தமானங்களைக் கவனித்துக் காரியம்புரிந்தவன் அல்லன்; விதியையும் அதிர்ஷ்டத்தையுமே பெரிதாக மதித்து வீண் காலம் போக்கியவன் என்று நிச்சயமாய் விளங்கும். காரியசித்தி எய்தாதவனுடைய சரித்திரத்தை ஒன்று சேர்த்து வாசித்துப்பார்; அதில் வேறொன்றும் இராது; அவன் சமயத்தைத் தப்பவிட்டானென்றிருக்கும், அவன் தன் வல்லமையை வீணாக்கினானென்றிருக்கும், காலத்தை வீண் போக்கினா னென்றிருக்கும்; நாளுக்குநாள் வளர்ச்சிக்கிடம் பண்ணாமல் விட்டானென்றிருக்கும். காரியசித்தி பெற்றதில் முதன்மையானவர்களுடைய சரித்திரம் இப்படி இல்லை. வாட்ஸ்சுகளென்ன! ஸ்டிவென்ஸ்களென்ன! பாரடேகளென்ன! இன்னும் எத்தனையோ பிறரென்ன!—எல்லாரும் வினோதமான எதிரிடையான காலதேச வர்த்தமானங்களுக்கிடையில் இருந்திருக்கிறார்கள். எந்தப் பக்கந் திரும்பினாலும் அவர்களுக்கெதிரிடையான தடைகளே ஏற்பட்டிருந்தன. அவர்களைத் தரித்திரம் ஒரு பக்கம்வாட்டிற்று. *தனிமை ஒருபுறம் வீட்டிற்று. அப்படியிருந்தும் அவர்கள் இடையூறுகளை எதிர்த்து வெற்றிபெற்றார்கள். அவர்கள் எதற்கும் பின்னடையாத திடசித்தம் பெற்றிருந்தார்கள், சளையாத பொறுமையும் இளையாத ஊக்கமும் உற்றிருந்தார்கள். ஆகையால் 'நாம் சபல சித்த முடையவர்களையும், வெற்றி பெறுவதில் நம்பிக்கை யற்றவர்களையும் நோக்கி என்ன சொல்லவேண்டும்? நீவிர் எல்லீரும் போமின், இப்படிச் செய்மின்,

*யாரும் இவர்களைச் சேராமல் ஒதுக்கினதால் ஒன்றியாய்த் தவித்தல்,

விதியிலும் அதிர்ஷ்டத்திலும வீண் நம்பிக்கை வைத்து நடக்கும் குருட்டு வழியைவிட்டு விலகுமின். வெற்றிபெற வேண்டுமென்று ஒரே பிடிவாதமாய் மேலும் மேலும் (உங்கள்) பிடிவாதம் பலப்பட வேண்டும்.

'தாமம் விற்றும் சேய்விற்றும் தன்னைவிற்றும் பொய்யாத
வாரம் வைத்தான் முன்னிலகோர் மன்னனென்பார்'

என்ற ஆன்றோர் வாக்கின்படி, முற்காலத்தில் அரிச்சந்திரன் தனக்கு எத்தனையோ இடையூறுகள் எய்தியும் சத்தியத்தைக் காக்க வேண்டுமென்று தான்கொண்ட பிடிவாதத்தை விடாமல சாதித்ததை இங்கே கவனிக்கவேண்டும்.

காரியசித்தி யெய்தாதவர்களும் வாழ்நாள் வெற்றியில் நம்பிக்கை யற்றவர்களும் எப்போதுஞ் சொல்லுகிற இன்னொரு சமாதானம உண்டு. காரிய முடிக்கும் வன்மையின்மை என்பதே அது. இதுவே அதுவானால எலலாரும் முதன்மையாயிருந்து அரசாள வேண்டும். எல்லாரும அரசாண்டால், குடிகளாயிருபபா யாவா? வாழ்நாள் வெற்றி யென்று சொல்வதற்கு அர்த்தம முதன் மந்திரியாயிருககவேண்டும் என்பதலல, உனக்குத் தெரிந்தவர்களுக்குள் நீ முதன்மையான கீர்த்தி பெற்றிருக்கவேண்டும் என்பதும அல்ல. வாணாள் வீணாளாக்காதவன் எவனோ அவனே வெற்றிபெறுபவன். காலதேச வர்த்தமானங்களைத் தப்பவிடாமல் தக்கபடி ஒழுகுபவன் எவனோ அவனே காரியசித்தி யெய்துபவன். நாமனைவரும் நாட்டரசராவதென்றால், முன்னிங்குக் குறித்தபடி நடவாத காரியம். சேனைத்தலைவர்கள் ஆவதென்றாலும் அப்படியே. விருத்த சபை வித்தியாலய சபைகளில் முதன்மை பெறுவதென்றாலும் முடியாத காரியம். ஆனால் இது மட்டும் நாம் செயயலாம்; நன்றாய் உழைக்கலாம், நமமுடைய வல்லமையைக்காட்டி உண்மையாய்ப் பாடுபடலாம், இதனால் நமக்குப் பெருமை வரும். நம்மைச் சூழ்ந்துள்ளவர்கள் நாம இறநதபின்பும மறவாமல அருமை பாராட்டிக்கொண்டாடுவார்கள். செத்துஞ் சாகாதவர்கள் என்பவர்களில நாமும் ஒருவராவோம். எந்தக் காலததிலும் அறிவின் திறத்தில் மாந்தர் அனைவரும் வேறுபாடின்றி ஒருபடித்தாய்க குறைந்திருக்கமாட்டார்கள். மாந்தரிற் சிலருடைய செய்கைகள் மற்றவர்களுக்குக் காலாந்தரம் வரையில் அற்புதங்களாகவும் அதிசயங்களாகவும்

இருக்கும்; ஆனால் மிகக் *குறைந்த அறிவின் திறமுடையோன், ஐந்தறிவுள்ளவனைக்கண்டு அழுக்கறுத்துச் சும்மா இருந்துவிடாமல், தனது ஓரறிவையே உயர்நிலைக்குக்கொண்டு வரலாம், அல்லது கொண்டு வரவேண்டும். வேட்டைநாய்களைக்கண்டபோது பல்லறிவுடைய நரிபட்டபாட்டையும், ஓரறிவுடைய பூனைமரமேறித்தப்பின தன்மையையும் இங்கே சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அன்றியும் அறிவாயிரத்தன் செத்ததையும், ஓரறிவன் என்னு மீன் உயிர் தப்பினதையும் உற்று நோக்குக.

என்ன வந்தாலும் வரட்டும் என்று எடுத்த காரியத்தை முடிப்பதற்கு வைராக்கிய சித்தமும் விடாப்பிடிவாதமும் கொண்டிருப்பதே, நிச்சயமான காரியசித்தி யெய்வதற்குமுதன்மையான பரமரகசியமாயிருக்கிறது.

‘ உறுதி பயப்ப கடைபோகாவேனும்
இறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால் அல்லனபோல்
ஆவதும் முண்டு சில ’

பெரியோர், நற்கருமங்கள் விரைவில் முடியாவேனும் அவைகள் முடியுமட்டும் விடாமல் முயற்சி செய்வார்கள். ஏனென்றால் இறக்குந் தறுவாயி லுள்ள உயிர்க்கும் ஆயுள் மருந்து (கண்டாமிழ்தம்) கொடுத்தால் பிழைக்குமென்றெண்ணிச் செய்தல் தப்பன்று. (அது போல), முடியாதனபோற் றோன்றும் சில காரியங்கள் முடிவதும் உண்டு, என்னுங் கருத்தமைந்த மேலைச்செய்யுளைக் கவனித்தால் மேற்கூறிய விஷயம் நன்கு விளங்கும்.

ஒருவன் பணஞ்சம்பாதிக்க வேண்டு மென்று தீர்மானிக்கிறான், மற்றொருவன் புகழ்பெற வேண்டுமென்று துணிகிறான், இன்னொருவன் ஒரு பெருஞ்சிக்கான விஷயத்தை விளக்க வேண்டுமென்று நிசசயிக்கிறான். ஒவ்வொருவனும் தான் மேற்கொண்ட காரியத்தை விடாமற் செய்யும் வைராக்கியத்தினளவாய்க் காரியசித்தி யெய்துகிறான்.

‘அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.’

* ஓரறிவு, ஈரறிவு என்னும் கணக்கிற் குறைந்த (அதாவது) ஒரே அறிவுடைய

'ஒரு காரியம் செய்தற்கு அருமையானதென்று எண்ணிப் பின்னடையாதிருக்க வேண்டும். என்றும் விடாமுயற்சியானது காரிய சித்தியாகிய சிறப்பை உண்டாக்கும், என்னும் மேலைத்திருக்குறள் வேதத்தைச் சீராய்க் கவனித்துணர்க.

இன்னும், காரியசித்தியின் உண்மைக்குத் தாரமாக, அதிக முக்கியமான விஷயம் ஒன்றுண்டு : காரிய முடிக்கு நேர்மை, அதாவது மனத்தூய்மை (கபடின்மை என்பதே அதுவாகும்.) இதை ஒவ்வொருவரும் தமது துரதிர்ஷ்டத்தால் அடிக்கடி மறந்துவிடுகிறார்கள். ஆயினும், எந்தவிதத்திலும், * "நேர்மையே சிறந்த நிருவாக சாதுரியம்" என்பது முழுவதும் நிச்சயமாயிருக்கிறது. கபடு மோசங்களாலான காரியசித்தி ஒருக்காலும் உண்மையான காரியசித்தி ஆகாது ; மிகவும் ஆபத்தான அபஜயமாய் முடியும். அதிகமாய் நெருக்கிப் பணம் பறிக்காதவுலகமாகிய தாழ்ந்த இடத்திலிருந்து நாம் நோக்கினும், கேள்விக்கிடமான (சந்தேகமான) வழிகளில் முழுக் காரிய சித்தி பெய்துவது முழுவதுங் கூடாத காரியம். சிலகாலம், எல்லாம் ஒழுங்காயும் அநுகூலமாயும் தோன்றும். ஆனால், சீக்கிரத்திலோ அல்லது கொஞ்சம் பொறுத்தோ அழிவுவருவது நிச்சயம். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான மோசததில் கட்டடம் நிலைதிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு † ஆபத்தான அபஜயம் நேரிடும். வியாபார வுலகத்தையும் அதைச சேர்ந்ததினால் எங்கும் பேர்போன சில மாந்தருடைய சரித்திரத்தையும் கவனித்து நோக்குவதுதான் தாமதம். நாம் சின்ன முழுக்காரிய சித்திபெற்று உன்னதமான முன்னேற்ற நிலையில் நின்றதெல்லாம் இகழ்ச்சிக்கிடமான ‡ அபஜயத்துக்குட்பட்டு முடிவடைந்ததை நிதரிசனமாய்க் காணலாம். அப்படிப்பட்ட முன்னேற்ற நிலைகளால் நாமறியும் நீதிபோதம் சிறிதும் தவறுனதன்று. ஆகையால் வியாபார தோரணையில் சம்பாதப்பட்ட ஒவ்வொருவனும் அதை வாசிக்கலாம். சந்தேகோபாயங்களால் முன்னுக்குவர நாடுகிறவர்களை எச்சரிக்க, அப்போலி உன்னத நிலைகள் கலங்கரை விளக்கம்போல உபயோகப் படுகின்றன.

---

* சில்லாண்டுகளுக்கு முந்தித் திடீரென்று பிரதிகூலமடைந்து பிழைத்துப் போன அர்பத்னட் வியாபாரக் கம்பெனியைக் காண்க.

† தன்னைத்தானே மதித்திருத்தல்.

‡ Honesty is the best policy.

உண்மைக் காரிய சித்தி யடைவதற்கு, லீஸர் மீனவிளைய போலச் சந்தேகத் துட்படாதிருப்பது முக்கியமானது.

ஆகையால், இவ்வுலகில் ஒருவன் முன்னுக்கு வரமுயல்வனதை யும், காலப்பத்திரங்களில் அவனுடைய உத்தம அடையாளங்களைப் பொறித்து வைப்பதையும் தடுக்க யாதொன்றும் இல்லை; ஆனால் உழைப்பை உற்சாகப்படுத்த எல்லாம் இருக்கின்றன. அடக்கமற்ற இறுமாப்பைப்போல் ஒருவனுக்குத் துன்பந் தருவதும் அதைப் போல பிறர் வெறுப்பதும் தடுப்பதும் வேறொன்றும் இல்லை. அதனால் ஒருவனுடைய வல்லமை, பிறர் மதிப்பிற் குறைவதுமின்றிச் சமயங்களையும் தப்பிவிடாரிடும்.

*காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூ உங்கில்லை உயிர்க்கு
அடக்கத்தையே ஒருவன் பெருஞ்செல்வமா மதித்துக் காக்கக்கடவன்.

தன் கையே தனக்கு உதவி என்றெண்ணும் பொறுமையுள்ள தன்னம்பிக்கையும், தன் வல்லமைகளில் முழு நம்பிக்கையும் ஆகிய இரண்டும், முழுவதும நியாயமானவைகள் என்பதுமட்டும் அன்று, எல்லார்க்கும உரிமையானவைகள் என்பதும் ஆகும். போதுமென்ற மனமே பொன்செய் மருந்து என்றபடி, செயற்கையற்றிருக்கவேண்டுமென்று சிலர் வாதிக்கும் அந்த மந்தமான சோம்பற் குணம் மிகவும் கெடுதி விளைப்பது; அப்படி யிருக்கவேண்டும என்பதற்கு எங்கும் பிரமாணமும் கிடையாது. நந்நிலைமையை நம்மாலான வரையில் சரிப்படுத்தியும், நம் மெண்ணப்படி காலதேச வர்த்தமானங்களைத் திருப்ப மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி முயன்றும், நாம் அடைய வேண்டுமென் றெண்ணியிருந்த காரியசித்தி நின்றவேறுதேல், அதற்காகச் சலிப்படையா திருப்பது நமது உண்மையான கடமையாகும. ஆனால், தமது கைகளைக் கட்டிக்கொண்டு, அதிர்ஷ்டலக்ஷ்மி என்ன சாதிக்கிறாளோ, சாதிக்கட்டும் என்று பொறுமையோடு காத்துக்கொண்டிருப்பவர்களுடைய அநத மந்தமான, உணர்ச்சியற்ற நிலைமைக்கு, இது முழுவதும் மாறாயிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை, போதும் என்பதின்பாற் பட்டதன்று மந்தமும் சோம்பலுமுள்ள தூக்கத்தின் (ஊக்கம் இன்மையின்,

* மோசக்கட்டடம் இடிந்துவிழுவதால் ஆபத்தாகு மென்க.

ப்ாற்பட்டதாகும். இதுபற்றியே, "தெய்வம் காட்டும், ஊட்டுமா?" என்று பழமொழியும் வழங்குவது காண்க.

உலகத்தில் உயர முயல்வதற்கும், காரியசித்தி யெய்துவதற்கும், தக்க சமயங்களுக்காக உறுதியாய்க் காப்பதும், அவைகள் நேரும்போது, காரியம் முடித்துக்கொள்ள ஆயத்தமா யிருப்பதும் அதிமுக்கியமாகும்; ஏனென்றால் இதில் தான் காரியசித்தியின் இரகசியம் அடங்கியிருக்கிறது. அடியில் வருகிறபடி. நமக்குப் புத்தி புகட்டிப்பாடிய ஷேக்ஸ்பியர் மகாகவி, சந்தேகமறச் சரியாய்ச் சொல்லி யிருக்கிறார்.

'உலக மாந்தர் உஞற்றுங் கருமத்
திலகும் பெருக்கொன் றிருப்பதால் அதனை
வெள்ளத்திற் கொண்டால் விசேஷ வாய்ப்பிற்
செலுத்து மென்பது திறமாம். விட்டால்
அவர்கள் வாழுட் பயண மனைத்தும்
திடர்நீர் தன்மேற் செல்லும் அம்பிபோல்
இடர்கட் குட்பட் டிருக்க
வேண்டு மென்று விளப்பலாமே'

வெள்ளம் வருகையில் பெருக்கையறிந்து கொள்ளும் விவேகத்திலும் வல்லமையிலும்தான், காரியசித்தியெய்து மனிதன் அதை எய்தாதவனிடத்திலிருந்து வேறுபடுகிறான்.' இதுபற்றியே பின்வரும் நீதி வெண்பாக்களைக் கவனித்துக்கொள்க:

அடக்க முடையார் அறிவில ரென்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா-மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு (மூதுரை.)
கொக்கொக்க கூம்பும் பருவத் ததனின்
குத்தொக்க சீர்த்த விடத்து (குறள்)

இங்கு அடக்க முடையார் என்றது வெள்ளப் பெருக்கின் சமய மறிந்து காரியசித்தியெய்தும் விவேகமுடையாரை என்க.

—(::)—

# "கோபாலன் விஷயம்"
# ஒரு சிறு கதை*.

ஸ்ரீ. A. அரங்கசாமி ஐயங்கார், B. A., B. L., நாமக்கல்.

இனி, கோபாலன் தொல்லை என்றால் பொறுக்கமுடியாது. இதென்ன இம்சை! சாயந்திரம் பொழுது போக்கிற்காக 'ரீடிங் ரூமு"க்குப் போனால், அங்கும் வந்துவிடுகிறான். எதிரில் உட்கார்ந்து கொண்டு,பேபரிடுக்கால் என்னையே கெஞ்சின பார்வையாக உறுத்து நோக்குகிறான் "அடே கோபு! நீ என் கவலைப்படுகிறாய்? நான் உன் ரகஸ்யத்தை வெளியிடுகிறதில்லை" என்று எவ்வளவுதரம் உறுதி கூறினேன்! அவனுக்கு நம்பிக்கையில்லை, சதா காலமும், வாயைத் திறவாமல் கண்களாலேயே என்னைக் கெஞ்சிக்கொண்டேயிருக்கிறான். எனக்குச் சித்தப் பிரமை பிடித்துவிடும் போலிருக்கிறது. அவன்பொருட்டு எவ்வளவு சௌகர்யங்களைக் குறைத்துக்கொண்டேன். அவன் சந்தேகத்திற்குப் பயந்து, அவனில்லாமல் ஓரிடத்திற்கும் போகிறதில்லை. கதரும், தேசியக்கல்வியும் முழங்குகிற நாளில் அவன்மட்டும் சராய் தரித்தால் ஏதாவது சம்சயமும் அனுமானமும் ஏற்படுமென்று பயந்து, நானும், காந்தி மகாத்மாவால் "பிளந்த ஆடை" என்று (Bifurcated garment) இகழப்பட்ட இஜாரைப் போட்டுக்கொண்டு, கிராமாந்தரங்களில், "சுரக்கல்பட்டு துரை அப்பொழுதுதான் கப்பலிலிருந்து இறங்கி வந்தாராக்கும்" என்று சிறுவர்கள் கேலி செய்யத் திரிகிறேன். சிலநாள் முன், மேரி கொரிலி (Marie Corelli) தன் நாவலொன்றில் "இந்த நாகரீகப் பெருமை கொண்ட ஐரோப்பியரின் உடையென்னே! யானையின் கால் போன்று, அந்த மிருகத்திற்கு இருக்கும் இயற்கைப் பொருத்தமுமில்லாத, இந்த 'ட்ரௌசர்' (Trousers)ஐக் காட்டிலும் அவலக்ஷண ஆடையுமுளதோ" என்று சொல்லியிருப்பதைப் பார்க்க எனக்கு வெட்கமாயிருந்தது. எல்லாம கோபாலன் பொருட்டே. அவனுக்கு மட்டும் நம்பிக்கையில்லாமல் எப்பொழுதும் இரக்கமாக என்னையே

*Adapted from H. G. Well.

வெறித்து வெறித்து நோக்கி உருக்கிவிடுகிறான். பாதி நித்திரையில் அவன் வங்கின முகத்தைக் காணுவதுபோல் பிரமை கொண்டு, "அடே, என்னை அந்தப் பார்வையோடு வதைக்காதே. உன் விஷயத்தை நான் வெளியிடுவதில்லை" என்று, கத்திக்கொண்டு எழுந்திருக்கிறேன். "என்ன? என்ன?" என்று விழித்துக்கொண்ட என் மனைவிக்கு, சமாதானம் சொல்லுவதற்குள், நான் படும்பாடு சொல்லி முடியாது.

கோபாலனும் நானும் குழந்தை முதல் சேர்ந்தே வளர்ந்தவர்கள். ஒவ்வொரு வகுப்பாக நாங்கள் ஜோடியாகவே வந்தோம். பி. ஏ. யிலும் சேர்ந்தே தேறினோம். அப்புறமும், நாங்கள் இணைபிரியவில்லை. முன்னோர்கள் தேடிவைத்த ஆஸ்தி இருவருக்குமிருந்தது. சேவகா விர்த்திக்குப் போகவும் மலிந்து கிடக்கும் வக்கீல் தொழிலுக்கும் போகவும் மனமில்லாமல், ஊரோடேயே சுகவாசிகளாக அமர்ந்தோம். வேறு வேலை யில்லாததோடு, செலவிற்கும் குறைவில்லாமல் பணமிருந்ததால், பேபர்களையும், பத்திரிகைகளையும், புஸ்தகங்களையும், கணக்கில்லாமல் வரவழைத்துக் கொண்டு, வினோதமாகக் காலம் தள்ளினோம். புதிதாக எந்தப் புஸ்தகம் வந்தாலும் உடனே அனுப்பிவிடும்படி ராமய்யர், ஹெக்கின் பாதம், தாக்கர் ஸ்பின்க், கம்பெனிகளுக்கு அறிக்கை. புது மருந்து தினுசுகள் எது வந்தாலும், நாங்கள் உடனே பரீக்ஷை செய்து விடுவோம். ஹோமியோபதி, பையோகெமிஸ்ட்ரி, எல்லாம் பார்த்து விட்டோம். ஜுரம் வந்தால் உடனே இன்ஜெக்ஷன்தான். இம்மாதிரி, கேவலம் பொழுது போக்கிற்காக, கண்டபடி விஷமப் பரீக்ஷை செய்ததில்தான் கோபாலனுக்கு அந்த சம்பவம் நேர்ந்தது.

மருந்து மட்டுமில்லை, மந்திரம், தந்திரங்களையும், நாங்கள் பரீக்ஷை பார்த்து விடுகிறது. அப்பா! எத்தனை கவசங்கள், தாழ்த்துக்கள், எங்கனை நம்பித்தான் பேபர்களில் விளம்பரங்கள் போடுகிறார்கள். அதிருக்கட்டும்; என் பாட்டனார் ஓர் பெரிய மாந்திரீகர். அவர் இரும்பைத் தங்கமாக மாற்றும் தந்திரம அறிந்த சித்தராம். அந்த வித்தையினால்தான் எங்கள் குடும்பத்திற்கு சொத்து சேர்ந்ததெனக் கூடசிலர் சொல்லுகிறார்கள்; அவர் இறந்தபோது ஓர் பீரோ நிறைய ஜாடிகளும், சீசாக்களும் வைத்திருந்தார். ஆனால் அதன் கிட்டே நாங்கள் போகிறதில்லை. என் தகப்பனார் ஒரு தரம் அங்கே ஏதோ விளையாட்டாகக் கையாடினதில், பெருத்த ஆபத்து நேரிட்டு அதன் பிறகு அந்த பீரோவில் யாரும் கை வைக்கிறதில்லை, கோபாலனுக்கு

மட்டும் அந்த ஜாடிகளிலிருக்கும் மருந்தைப் பரீக்ஷிக்கவேணுமென்று வெகு நாளையக் கோரிக்கை.

அந்த விசேஷம் நடந்து ஐந்து வருஷங்களாகின்றன. எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ஆடியீ 18௳ இரவு ஒன்பது மணியிருக்கும், கோபாலன் சித்திரான்னங்களையும் திண்டிகளையும் தன்வீட்டில் வேறு, அய்யங்கார் ஆத்துப் புளியோதரை நன்றாயிருக்குமென்றுரங்காச்சாரி வீட்டில் வேறு, வயிறு வீங்கத் தின்றுவிட்டு, நடக்க முடியாமல் தள்ளாடிக்கொண்டு வந்தான். "அப்பா, தேகம் கனமாயிருக்கிறது" என்று சோபாவில் சாய்ந்தான். "மூன்று மாதமாக ஒயாமல் கல்யாணச் சாப்பாடு; ஆடிப்பண்டிகை; 18-ம் பெருக்கு; உன் உடம்பு இலேசாகவா இருக்கும். ஒருசேர் விளக்கெண்ணெய், சுக்கு கஷாயத்தில் போட்டுக் குடித்து, ஒருமாதம் புது மோஸ்தரில் 'உபவாச சிகிச்சை' தான் உனக்குத் தேவை" என்று, நான் சொன்னேன். கோபு "இல்லை, இல்லை, இன்றைக்கு உங்கள் தாதா மருந்தைப் பரீக்ஷிக்கிறதென்று தீர்மானம். மூன்றாவது தட்டு மூலையிலிருக்கிற ஜாடியில், "சரீரம் இலேசாவதற்கு," என்று குறித்த மருந்தைப் பார்த்துவிடுகிறேன்" என்றான். உடனே அரைச்சேர் மருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். நான் காலை 3-மணி ரயிலில் என் மச்சினி சீமந்தத்திற்காக, மதுரைக்குக் கிளம்பினேன்.

மூன்றும் நாள் திரும்பினபொழுது கோபாலன் வேலைக்காரன் வாசலில் நின்றுகொண் டிருந்தான். "ஐயா! யஜமானரை வந்து பாருங்கள்" என்று கதறினான். விசாரித்ததில், இரண்டு நாளாக கோபாலன் அறையைவிட்டு வரவில்லையாம். சாப்பாட்டை கூரையில் வெளிச்சக் கண்ணாடியை உடைத்து, அந்தச் சந்தின் வழியாக உத்திரத்தின்மேல் நின்று வாங்கிக்கொண்டானாம். அடிக்கடி நான் வந்தேனா என்றும், உடனே அழைத்து வரும்படிக்கும் கத்திக்கொண் டிருக்கிறானாம்.

உடனே கோபுவிடம் போனேன். ரூம் தாளிடப்பட்டிருந்தது. கதவை பிடித்ததும், கோபாலன் குரல் கேட்டது. "யார் நீயா? எல்லாரையும் தூர விலக்கச் சொல்லு. நான் தாழ்ப்பாளை யிழுத்ததும், நீமட்டும் உள்ளே நுழைந்து, உடனே கதவைப் பூட்டிவிடு." பிறகு கோபாலன் பெருமூச்சுவிட்டு வெகு பிரயாசையுடன் தாழ்ப்பாளைத் தள்ளினதும், உடனே, 'விர்ர்' என்று விசேஷ ஒரு வஸ்து உயரக் கிளம்புவது போலும், சப்தம் உண்டா

யிற்று. உள்ளே நுழைந்து பார்த்தேன். கோபாலனைக் காணவில்லை. "கோபு" என்று அழைத்தேன். "மேலேபார்" என்று கேட்டு, அண்ணாந்து பார்த்தேன்—கோபு, உயர, வௌவால்போல் தொத்திக்கொண்டிருந்தான். ஆனால் தலை கீழாக இல்லை. அவன் தலை, கூரைமோட்டை பிடித்துக்கொண்டு, இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. கால்கள் அந்தரத்தில் துழாவிக் கொண்டிருந்தன. எனக்கு ஒன்றும் தோன்றாமல் திகைத்து விழித்தேன். "என்னப்பா விழிக்கிறாய். அந்தப் பாழும் மருந்தின் வேலையிது. அதோ ஏணியின் மீதேறி, என் கால்களைப் பற்றி யிழுத்து, நாற்காலியோடு என்னைப் பிணைத்துக்கட்டு" என்று கோபாலன் சொன்னதைக் கேட்டு, அந்தப்படியே செய்தேன். அவனைக் கீழே யிழுப்பது வெகு சிரமமாக இருந்தது. நான் இழுக்க இழுக்க அவன் மேலேயே பறந்து கொண்டிருந்தான். கடைசியில் அவனைக் குறிச்சியின்மீது தள்ளி இருகக் கட்டினேன்.

எல்லாம் அப்புறம் தெரிந்தது. தேகம் பளுவாயிருக்கிறதென்று கோபாலன் சாப்பிட்ட என் பாட்டனார் திராவகம், ஓர் சித்த ஔஷதம் போலும்! ஜாடியின் மேல் குறித்திருந்தபடியே அவன் சரீரம் பஞ்சிலும் இலேசாகி விட்டது. ஓர் சிறு துரும்பு போல அவனுடல் மேலேயே பறந்துகொண்டிருந்தது. முதலில் அவன் பட்ட அவஸ்தை கொஞ்சநஞ்சமல்ல. மருந்தைக் குடித்த ஐந்து நிமிஷத்திற்குள், அவன் சரீரத்திற்குள், மரண வேதனையான குடைச்சலுண்டாயிற்றாம். உடனே திடீரென்று அவன் தேகம் ஆகாயத்திலெழும்பி கூரையில் போய் பலமாக முட்டிற்றாம். நல்ல வேளையாக வீட்டிற்குள்ளே யிருந்தான். இல்லாவிடில் ஆகாயத்தில், காற்றிலெங்கு அடித்துக்கொண்டு போகப்பட்டிருப்பானோ. கூரையிலிடித்தகாயம் ஒருபக்கம், விஷயம் தெரியாத திகைப்பும் திகிலும் ஒருபக்கம். அவன் சரீரம் அவன் ஸ்வாதீனத்திலில்லாமல் காற்றிலடிப்பட்ட பஞ்சுபோல் பறந்ததும் அவன் பயத்தையும் துன்பத்தையும், சொல்லிமுடியாது. விபரமின்னதென்று தெரியாமல் அவன் தேகத்தை ஸ்வாதீனத்திற்குக் கொண்டுவரச் செய்த முயற்சியினால் அவன் இங்குமங்கும் சுவரிலும் கூரையிலும் உத்திரங்களிலும் மோதப்பட்டு, அதிக அவஸ்தையை அடைந்தான். கொஞ்ச நேரமாகிப் புத்தி நிதானத்திற்கு வந்தபிறகு, என் பாட்டனார் மந்திர சித்தி மூலிகை சித்தியுடையவரென்பதும் ஜாடியின்மீது "சரீரம் இலேசாவதற்காக" என்று எழுதியிருந்ததும், ஞாபகத்திற்கு

வந்து மர்மம் புரிந்தது. அவன் சரீரம் வெகு கனக் குறைவாக இருந்ததினால், தூசிபோல மேலேயே பறந்தது. அவன் அந்த அறைக்குள்ளேயே மேல் பறந்துகொண்டு சாப்பாடு முதலியவை வேலைக்காரர்களைக் கூரையின் வழியாகக்கொண்டுவரச் சொல்லி,என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். நான் உள்ளே நுழையுமுன் அவன் கதவைத் திறக்கும்பொருட்டுக் கீழேவரப்பட்ட பிரயாசைகொஞ்சமல்ல. அவன் தன் சரீரத்தைக் கீழேயே கொண்டுவர முடியவில்லை. கூரையில்லாவிட்டால், மேலேயே கிளம்பிப் போயிருப்பான். அப்புறம், சுவரின் மேல் சாத்தியிருந்த ஏணியைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டு, அதை யசைத்துக் கீழேதள்ளி, அதன் கனத்தில் கீழே வந்துசேர்ந்தானாம்.

இனிமேல் நடக்க வேண்டியவைகளைப் பற்றி யோசனை செய்ய ஆரம்பித்தோம். ஒன்றுமட்டும் முதலிலேயே நிச்சயம் செய்து கொண்டோம். என்னவானாலும் சரி. என் பாட்டனார் பீரோவிடத்தில் மறுபடியும் போகிறதில்லை. நாற்காலியைவிட்டு அவனை அவிழ்த்துவிட்டால்,அவன்மேலே பறக்கவேண்டியதுதான். எத்தனை நாள் கட்டிவைக்கிறது. இததோடு கோபாலனுக்கு இந்தவிஷயம் வேறு ஒருவருக்கும் தெரியக்கூடாதென்று கவலை. சாயந்திரம் வரையில் யோஜனை செய்தும் ஒன்றும் தோன்றவில்லை. இராத்திரி சாப்பாடான பிறகு, அவனைக் கட்டிலின்மீது வெகு கஷ்டப்பட்டு—அவன் தேகம் என்கட்டைவிட்டு மீறி மேலே பறக்கும்போலிருந்தது—படுக்கவைத்துக் கயிறுகளைப்போட்டுக் கட்டிவிட்டு, வீட்டிற்குத் திரும்பினேன்.

இராத்திரி முழுவதும் எனக்கு நித்திரை வரவில்லை. இந்தக் கஷ்டத்தில் "என் தூங்கவில்லை? உங்களுக்கு என்ன உடம்பு? பிரயாணம் போய்வந்தால் மூன்றுநாள் கும்பகர்ணவதாரம் எடுப்பீர்களே" என்ற என் மனைவிகேள்களுக்கு பதில் வேறு சொல்லியாக வேண்டும். அவளை 'நீ தூங்கினால் நான் தூங்காதது எப்படித் தெரிந்தது. நான் தான் பிரயாணம் போய்வந்து தூங்குகிறவன், நீ தினம தூங்குகிறவளாயிற்றே. உனக்கு எனன உடம்பு' என்று திருப்பிக்கேட்டு, அவளை ஒருவாறு அடக்கிவிட்டு, கோபாலனைப்பற்றி யோஜனை செய்துகொண்டேருந்தேன். நாங்கள் சிறுபிள்ளைத்தனமாக அந்த வஸ்துவின் சக்தியும் குணமும் தெரியாமல் சாப்பிட்டதற்கு வருந்தினேன். வீண்கிலேசத்தி

ஞல் என்ன பிரயோஜனம்? கோபாலன் எப்படி வெளி யில் வருவான்? கல்லைக் காலில் கட்டிக்கொண்டு வருவதா? எப் படியாவது அவன் நடமாடினல் போதும். தேகம் இலேசாகப் போனதைத் தவிர, மற்றப்படி அவனுக்கு வேறு மாறுதல்களாவது அசௌக்கியங்களாவது ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சாப்பாட் டில் ஒன்றும் குறைவில்லை. என்றைக்கும் சாப்பாட்டு ராமன்தான். இந்தத் துன்பத்தில் முன்னைக் கிரண்டபங்கு சாப்பிட்டானே தவிர, அந்த விஷயத்தில் ஒன்றும் குறைவில்லை,

காலை எட்டுமணி யிருக்கும். காபி சாப்பிட்டுவிட்டு, பேபர் பார்த்துக்கொண் டிருந்தேன். குழந்தை ருக்மணி, "அப்பா, இந் தத் தடிக்குள் வெள்ளிக்கட்டை யிருக்கிறது. இதென்ன? கோவில் வாகனத்தை அன்றைக்குப்பார்த்தபோது, உள்ளே மரத்தால்செய்த குதிரையின்மேல் வெள்ளித் தகடு அடித்திருக்கிறார்கள் என்று சொன்னய். இதில் மரத்திற்குள்ளே வெள்ளி எதற்காக வைத் திருக்கிறார்கள்" என்று, நான் கசரத் பழகும் பாறைத் தடிகளில் முறிந்த தொன்றைக் கயில் வைததுக்கொண்டு நின்றாள். அந்தத் தடி பளுவாயிருக்க வேண்டுமென்று துளைசெய்து, ஈயத்தை ஊற்றி யிருந்ததை, வெள்ளி யென்று சொன்னள். அதைக்கண்டதும், என் மனதில் பளிச்சென்று ஒரு யுக்தி தோன்றிற்று. கோபாலன் பிழைத்தான் என் றெண்ணிக்கொண்டு, அவன் வீட்டிற்கு விரை வாகச் சென்றேன். கோபாலனுக்கு என் யோசனையைக் கேட்ட தும், முகமலர்ந்தது. அவன் இனி வெள்ளைக் காரர்கள் மாதிரி ஜிஜார் கோட்டோடு இருக்கவேண்டியது. நல்ல 'டுவீட்' துணியை வாங்கி உள் துணிக்கும் மேல் துணிக்கும் நடுவில் காரீயத் தகடுகளைக் கொ டுக்கவேண்டும். தகடுகளின் கனம் அவனை மேலே போகவொட்டா மல் கீழே யிருத்திக் கொண்டிருக்கும். மேலும் உள்ளே தகடிருக் கிற விஷயமாவது, கோபாலன் அவஸ்தையாவது, வேறொருவருக் கும் தெரியவேண்டிய அவச்யமுமில்லை.

என்யோசனை கனக்காகப்பலித்தது. கோபாலன் இப்பொழுது எல்லாரையும்போல சகஜமாக உலாவிக்கொண்டிருக்கிறன். ஆனல் அவனுக்குக் காரணமில்லாத திகில் உண்டாகி, அதே ஏக்கமாயிருக்கி றன். அதாவது, அவன் ரகஸ்யத்தை நான் வெளியிட்டுவிடுவேன் என்பதே. நான் என்ன தேறுதல் சொல்லியும், உறுதி கொடுத்தும், நம்பிக்கையில்லை. அவன் மட்டும் சூட் போட்டால் ஏதாவது அனு மான மேற்படுமோவென்று பயந்ததனல், நானும் சூட் தரித்துக்

கொள்ளுகிறேன். எல்லாம் சரியாகத் தான் நடக்கிறது. கோபாலன் மட்டும் என்னிடத்தில் நம்பிக்கை யில்லாமல், என்னை சதாகாலமும் கண் பார்வையால் கெஞ்சிக் கொண்டேயிருக்கிறான். எப்படித்தான் ஒருவன் இந்த வாய் திறவாக் கெஞ்சுதலை சகிக்கிறது! இதுவே எனக்குச் சித்தப் பிரமை பிடித்துவிடும் போலிருக்கிறது.

அதோ பாருங்கள்! ஏங்கின முகத்தோடு, என்னையே வெறித்துப் பார்த்துக்கொண் டிருக்கிறான்.

(::)

## எங்கள் அயர்லாந்து வாழ்க்கை ஞாபகங்கள்.

ஸ்ரீ T. ஆதிநாராயண செட்டியார், பாரிஸ்டர், M. L. C, சேலம்.

(அவர் மனைவியாரின் உதவிபெற்று எழுதியது.)

(470-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

### ஐந்தாவது அதிகாரம்.

அயர்லாந்து தேசத்தின் துக்ககரமான நீண்ட சரித்திரத்தில் நாம் இந்த அத்தியாயத்தில் விவரிக்கும் பாகம்தான் புகழ்பெற்றதாக சொல்லக்கூடும். அத்தேசத்தில் தோன்றிய பலவீரர்களும் சிறந்த தேசாபிமானிகளும் இக்காலத்தில் அருமையான தேசத் தொண்டைச்செய்து வந்தனர். 1782 முதல் 1800 வரையுள்ள இக்காலத்தில்தான் "தேசீயவாதிகள்" என்னும் கூட்டத்தார் தோன்றி, ஆங்கில ராஜாங்கத்தினின்று கஷ்டப்பட்டு அனேக மூலாதார சுதந்திரங்களையும், கடைசியாக சுயராஜ்யத்தையும் கைப்பற்றினர். பூண்டைய காலத்திலிருந்து வந்தபடி, அயர்லாந்து உலகத்தில் ஒரு கவுரவத்தை வகித்த சிறந்த தேசமாக விளங்கிற்று. கைத்தொழில்களுக்கும் வியாபாரத்திற்கும் ஒரு புது உயிர் கிடைத்தது. வெளிநாடுகளுக்குக் குடியேறுதல் நின்றுவிட்டது. தேசத்தின் முக்கிய நகரத்தில் சில்பசாஸ்திர நிபுணர்களால் அனேக மாளிகைகளும்

பொதுக் கட்டடங்களும் நிர்மிக்கப்பட்டன. பிறகு நடந்த சுதந்திரப் போராட்டங்களில், போஸ்டாபீஸ், இறக்குமதித் தீர்வை வசூலிக்கும் ஸ்தலம் (Custom House,) ஹைக்கோர்ட்டு முதலியவை இடிக்கப்பட்டுப் போனபோதிலும், பார்லிமெண்டு கட்டிடம்போன்ற அனேக சிறந்த கட்டிடங்கள், அயர்லாந்தின் அக்காலத்திய உன்னத ஸ்திதிக்கும் செல்வநிலைக்கும் அத்தாக்ஷியாக இப்போதும் விளங்குகின்றன.

அயர்லாந்தின் பார்லிமெண்டுசபை முன்னொரு காலத்தில் எல்லா அதிகாரத்தையும் வகித்திருந்த தென்பதையும், எப்படி படிப்படியாக அவ்வதிகாரத்தை இழந்துவந்து, கடைசியாக ஒரு அலங்கார சபையாகவோ அல்லது ஆங்கிலேய கவர்ன்மெண்டின் உத்திரவுகளை 'ஊர்ஜிதப்படுத்தும் கருவியாகவோ ஆய்விட்டதென்பதையும் நாம் கவனித்து வந்தோமல்லவா? உதாரணமாக, உவில்லியம் என்னும் ஆங்கில அரசர் அயர்லாந்துடன் லிமரிக் நகர ஒப்பந்தம் செய்தபோது, அவ்வுடன்படிக்கைப்படி அயர்லாந்துக்கு அனுகூலமாயிருந்த சில நிபந்தனைகளை, அயர்லாந்தின் பார்லிமெண்டே, அத்தேசத்தின் ஜனங்களுக்குப் பாதகமாகவே, வியாக்யானம் செய்துவிட்டதைக் கூறலாம். அயர்லாந்தின் பார்லிமெண்டில் ஸ்தானம் வகித்தவர்களில் பெரும்பான்மையோர் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்களாகவும், பெரிய மனிதர்களுடைய இஷ்டப்படி வோட் கொடுக்கும்பொருட்டு அவர்கள் தயவால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாகவுமிருந்தார்கள். இதுவுமன்றி அச்சபைக்கு இத்தனை காலம்தான் ஆயுளென்று குறிப்பிட்டிருக்கவில்லை. பண விஷயமாக அச்சபைக்கு ஓர் அதிகாரமுமில்லை. சிலகாலம் கழித்து, பணவிஷயத்தில் பார்லிமெண்டுக்குச் சில அதிகாரம் கிடைத்தது. எப்படியென்றால்;—பதினெட்டாவது நூற்றாண்டின் துவக்கத்தில், ஒருவருஷம் செலவுக்குமேல் வரவு ஏற்பட்டு, மிகுந்தப் பண மிருந்தது. இதைப் பார்லிமெண்டு கேட்டும் கொடுக்காமல், (ஆங்கில) அரசர் சொந்தமாக்கிக் கொண்டார். வேண்டிய அளவுக்கு அதிகமாகப் பட்டாளத்தை ஏற்படுத்தி, அதற்குச் செலவுகளை அயர்லாந்தின் தலையில் சுமத்தியது மலலாமல், அயர்லாந்துக்கு ஒரு நன்மையையும் செய்திராத நபர்களுக்கு, அயர்லாந்தின் செலவில் பென்ஷன்கள் வழங்கப்பட்டன. இராஜாவின் ஜர்மன் தேசத்திய வைப்பாட்டிக்குக்கூட வேதனம் அயர்லாந்தின் செலவில்தான் கொடுக்கப்பட்டது. அயர்லாந்தின் பார்லிமெண்டில் ஏதாவது மசோதா (சட்டம்) கொண்டுவந்து

நிறைவேற வேணுமென்றால், இங்கிலாந்தின் பிரிவி கவுன்சிலின் முன் அநுமதியைப் பெற்றிருக்க வேண்டும். இவ்வளவு அவலட்சணங்களைக் கண்ட பார்லிமெண்டு சபையினிடத்தில் ஜனங்களுக்குத் திருப்தி யுண்டாகாமலிருந்தது ஒரு ஆச்சரியமல்ல. 1698ம் வருஷத்தில் சாமிவேல் மாலிநியூக்ஸ் (Samuel Molyneux) "அயர்லாந்தின் விவாதம்" என்ற புஸ்தகத்தில் அயர்லாந்தின் பார்லிமெண்ட் சுய அதிகாரம் பெற உரிமையுண்டென்று எழுதியதற்காக, ஆங்கில கவர்ன்மெண்டார், அப் புத்தகத்தைப் பகிரங்கமாக அக்கினிக்கு இரையாக்கினார்கள். ஆகிலும் அயர்லாந்தில் உதித்திருந்த தேசிய உணர்ச்சியை அவ்வளவு சுலபமாக நசுக்கி விட முடியவில்லை. "தேசிய வாதிகள்" (National Party) என்னும் கூட்டத்தார் பார்லிமெண்டில் சுதந்திரப் போராட்டத்தை தீவிரமாக நடத்தி வந்தார்கள். இக் கட்சியாரின் முக்கிய நோக்கம் என்னவெனில், இங்கிலாந்தில் ஜனங்கள் ஆண்டு அநுபவித்து வரும் மூலாதார சுதந்திரங்களை அயர்லாந்து தேசத்து ஜனங்களும் பெற வேண்டுமென்பதே. இக் கட்சியில் என்ரிப்ளட் (Henry Flood) என்பவரும், கிராட்டின் (Grattan) என்பவருமே புகழ் பெற்றவர்கள். வரி விதிக்கும் விஷயத்திலும் வரவு செலவு திட்டத்திலும், முழு அதிகாரத்தையும் கைப்பற்றுவதற்காகவும், பார்லிமெண்டின் காலத்தை நிர்ணயிக்கவும், இங்கிலாந்திலிருப்பது போல், அயர்லாந்திலும் நியாயாதிபதிகளை நியமிக்கும் அதிகாரமும் நீக்கும் அதிகாரமும் அதிகார வர்க்கத்தினிடமிருந்து எடுத்து விடவேண்டுமென்றும தீவிரமுயற்சி செய்துவந்தார்கள். இந்தக் கூட்டத்தாருக்கு இங்கிலாந்தினிடத்தில் துவேஷமில்லை.ஏனெனில் இங்கிலாந்துஅமெரிக்காவுடன் போர் புரிந்து வந்தபோது, தங்களாலியன்ற மட்டில் இங்கிலாந்துக்கு உதவி புரிந்தே வந்தார்கள். ஆனால் இவர்கள் இவ்வளவு ராஜவிசுவாசத்துடன் முயன்று வந்தும் (வியாபார) லாபத்திலேயே கண்ணுகவுள்ள இங்கிலாந்தின் பேராசையால், இந்தப் பிரயத்தனங்களெல்லாம் இங்கிலாந்தின் மனோபாவத்தை மாற்றச் சக்தியற்றவையாயின. ஏராளமான லஞ்சங்களைக் கொடுத்துப் பட்டாள விஷயமாக அயர்லாந்தின் பார்லிமெண்டுக்கிருந்த அதிகாரத்தை இங்கிலாந்து கைப்பற்றிவிட்டது. இவ்வாறு இங்கிலாந்து சூழ்ச்சிகள் செய்து வந்தபோதிலும், அமெரிக்கர்கள் வெற்றி யடைந்தார்கள். எனவே, அயர்லாந்தின் தேசியவாதிகளுக்கு ஒரு புது தைரியம் பிறந்தது. அது சமயம் இங்கிலாந்துக்கு அபஜயத்துக்கு மேல் அபஜயமாக நேர்ந்தது. இங்கிலாந்தின் கப்பல்

படைகள் ஓய்வில்லாமல் பூமியின் பல பாகங்களில் சண்டை புரிந்து கொண்டே யிருந்தன. எதிரிகள் அயர்லாந்தின் பேரிலேயே படையெடுத்து வருவார்களோ வென்னும் பயமும் ஒருபுறமிருந்தது. இந்தப் பயத்தை முன்னிட்டு "இச்சா சேவகப்படை" (Volunteer Corps) ஏற்படுத்தப்பட்டு, இவ்வியக்கம் சீக்கிரத்தில் காட்டுத்தீயைப் போல் தேசமெங்கும் பரவிவந்தது. 1779-ம் வருஷத்தில், பார்லிமெண்டுசபை கூடியகாலத்தில், வாலண்டியர்களின் தொகை 40,000. இவ்வியக்கமானது ஆங்கில கவர்ன்மெண்டுக்குத் திருப்தியை உண்டு பண்ணவில்லை யாகிலும், ஆங்கிலேயர் இதை நசுக்கிவிடச் சக்தியற்றவர்களா யிருந்தார்கள். இவர்களுக்கு ஒரு வந்தனோபசார-தீர்மானமும் பார்லிமெண்ட் நிறைவேற்றியது. இத்தருணத்தில், அயர்லாந்துக்கு பரீ ட்ரேட்(Free Trade) வியாபார உரிமை அவசியமென்று, ஒருதீர்மானத்தை கிராட்டன் பார்லிமெண்டுசபையில் கொண்டுவந்து நிறைவேற்றியும் வைத்தார். தீர்மானம் நிறைவேறிய போதிலும், அதை அமுலுக்கு கொண்டுவர இங்கிலாந்து இசையவில்லை. இச்சா சேவகக் கூட்டத்தார் தீவிர கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தார்கள். துப்பாக்கி பீரங்கிகளுடன் இக்கோஷ்டியார் நகர வீதிகளில் ஊர்வலமாக வந்து, பீரங்கியின் வாயில், "வியாபார உரிமை அல்லது இது" (Free Trade or this) என்னும் ஒரு சீட்டையும், பீரங்கியின் கழுத்தில் கட்டியிருந்தார்கள். பார்லிமெண்டும் அனுசரணையாக வரி விதிக்கும் அதிகாரத்தைச் சர்க்காருக்குமறுத்தது. இங்கிலாந்தின் (அக்காலத்து) ப்பிரதமமந்திரி, நார்த்து பிரபு (Lord North) பயங்கொண்டார். அயர்லாந்து வெற்றி யடைந்தது.

வாலண்டியர் கூட்டத்தார், 1782 பிப்ரவரியில், ஒரு பெருங் கூட்டம் கூடி, அயர்லாந்தில் கூடும் பார்லிமெண்டுக்குத்தான் அயர்லாந்தை கட்டுப்படுத்தக்கூடிய சட்டங்களை ஏற்படுத்தப் பாத்தியமுண்டென்றும், நியாயாதிபதிகள் அதிகார வர்க்கத்தினருக்கு அடங்கியிருப்பவர்களாக இருக்கக் கூடாதென்றும், கத்தோலிக் மதஸ்தர்களுக்குச் சம உரிமைகள் உடனே கொடுக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். இத்தீர்மானங்களை, கிராட்டன், பார்லிமெண்டிலும் நிறைவேற்றினர். (அக்காலத்திலிருந்த) கவர்னர் ஜனரல், இங்கிலாந்துக்குச் செய்த சிபார்சு என்னவென்றால் :—"இங்கிலாந்தின் சட்டங்களை ஏற்றுக்கொள்ளும்படி, ஐக்கியப்பட்ட அயர்லாந்து ஜனங்களை வற்புறுத்தும்வல்லமை யாவருக்கும் இல்லை" என்பதே. அடுத்த மே மாதத்திலேயே (1782) அயர்லாந்துக்கு சுயராஜ்யத்தைப் பூரண

மாகவும், ஒருவித நிபந்தனைகளன்றியும், கொடுத்துவிட்டதாக தெரிவித்தார். சட்ட திட்டங்கள் விஷயமாகவும் விவஹாரங்கள் (Legal Cases) அப்பீல்கள் முதலிய விஷயங்களில்கூட நிரந்தரமாக அயர்லாந்துக்குப் பூரண சுயராஜ்ய மளிக்கப்பட்டதாக ஆங்கில பார்லிமெண்டிலும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆகிலும் பெருங்குறை ஒன்று இருந்துவந்தது; அதாவது: அயர்லாந்தின் ஜனத்தொகையில் முக்கால்வரிசை ஜனங்களுக்கு வோட் உரிமை யில்லாமலிருந்ததும் தவிர, காமன்ஸ் சபையின் மொத்த ஸ்தானங்களாகிய 300-ல் 200-க்குமேல் "சுவாதீனமற்றவர்களாய்" பிறர் சொற்படி நடக்கவேண்டியவர்களா யிருந்தார்கள்.

1782-ம் வருஷத்தில், கிராட்டன் என்பவருக்கு சர்க்காரில் உத்தியோகம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர் அதை மறுத்தார். மறுத்ததின் பயனாக, அவர் கோரிக்கையின்படி, சர்க்காரின் அமைப்பை மாற்றி, தன் தேசத்திற்கு நிரந்தரமான நன்மையை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார். இவர் மறுத்த ஸ்தானத்தை சுய நலப்புலிகள் கைப்பற்றி, கிராட்டன் என்னென்ன உரிமைகளைச் சம்பாதித்து வைத்தாரோ அவைகளை யெல்லாம் அயர்லாந்து இழந்துவிடுவதற்கு வேண்டிய முயற்சிகளை விடாது எடுத்து வந்தார்கள்.

1783-ம் வருஷத்தில், வாலண்டியர்களுடைய கூட்டம் மறுபடியும் கூடி, "சீர்திருத்த மசோதா" வைத்தயார் செய்தார்கள். கிராட்டன், இந்த மசோதாவைப் பார்லிமெண்டில் பிரேரேபித்தும், சில காரணங்களினால் பிரேரேபணையை அவர் வற்புறுத்தாததால் பிரயத்தனம் பயன்படவில்லை. வாலண்டியர் இயக்கமும் குன்றிப் போயிற்று. சீர் திருத்த மசோதாவை வற்புறுத்தாமல் விட்டது, கிராட்டனிடம் இது ஒரு குறையாகவே கருதப்பட்டு வருகிறது.

ஆனால் சுயேச்சைப்படி செய்யும் வியாபார உரிமையைப் பெற்றதின் பலனாக, அயர்லாந்தின் வியாபாரம் வலுத்து வந்தது. அக்காலத்துபார்லிமெண்டு அங்கத்தினரான ஜான பாஸ்டர் (John Foster) என்பவர் அயாலாந்தின் முக்கிய தொழிலாகிய விவசாயத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். உணவுப் பண்டங்களின்மீது இறக்குமதி (காப்பு) வரி ஏற்படுத்தினர். உடனே உள் நாட்டு விவசாயம் விருத்தியை யடைந்து, ஏழைகளுக்குக் கூலிவிகிதமும் உயர்ந்து

அவர்கள் சுகமாகவாழ்ந்தனர். அனேகம் புதுக்கைத்தொழில்களுக்கு ஆதரவு கிடைத்தது. உதாரணமாக கண்ணாடிசெய்யும் தொழில், பருத்தியை நூற்றுத்துணிகளாக நெய்தல் முதலிய தொழில்கள், சர்க்கார் ஆதரவையும் பெற்று ஓங்கி வளர்ந்தன. தேசத்தின் பொதுக்கடன் சுவல்பமாகவும், செல்வ அபிவிருத்தி ஜாஸ்தியாகவும் இருந்தமையால், சர்க்காருக்கு, வேண்டிய அளவு கடன் சுலபமாகக் கிடைத்து வந்தது.

இவ்வாறிருக்கும் கால், அயர்லாந்தின் வடபாகத்தில் ராஜீயப் புரட்சி தலை நீட்டத்தொடங்கியது. இக்கிளர்ச்சிக்கு மூல புருஷ ரென்று சொல்லக் கூடியவர், உல்ப்டோன் (Wolftone) என்னும் ஒரு பாரிஸ்டராவர். அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்குமுள்ள சம்மந்தம் தான் அயர்லாந்தின் துயரத்திற்கெல்லாம் காரணமென்பது, இவர் மதம். "யூனைடெட் அய்ரிஷ்மென்" (United Irishmen) என்று ஒரு கூட்டத்தை இவர் ஸ்தாபித்து, இக் கூட்டத்தார் சீக்ர த்தில் அயர்லாந்து முழுதும் பரவலானார்கள். இங்கிலாந்துக்கு அச் சமயம் பிரான்சுடன் போர்புரிய அவசியமிருந்த படியால், அயர் லாந்து ஜனங்களை வசப்படுத்திக் கொள்வதற்காக, கத்தோலிக் மதத் தைத் தழுவினவர்களுக்கு வோட் உரிமை கொடுப்பதாக முன்வந்து அத்தீர்மானமும் நிறைவேறியது, கிராட்டன் இங்கிலாந்துக்கு (பிரான்சுடன் யுத்தத்தில்) ஒத்தாசையாக நின்றார். ஆனால் "பிரான் சுடன் நமக்கென்ன சண்டை" என்றார் டோன். இவ்வாறு அயர்லாந் தில் அபிப்பிராயம் பிளவுபட்டிருந்தது. டோன் அமெரிக்காவுக்குச் சென்று, அங்கிருந்து பிரான்சுக்குப் போய், பிரான்சின் ராணுவ ஒத்தாசையைப் பெற முயன்றார். எங்கேபார்த்தாலும் ஜனங்கள் ஆயுதபாணிகளாகக் காணப்பட்டார்கள். வேறு ஆயுதங்கள் கிடைக் காத ஆயிரக்கணக்கான ஜனங்கள், தங்களுக்கு வேண்டிய ஈட்டி கள் பாலாக்கள் முதலிய கர்நாடக ஆயுதங்களைத் தங்கள் கிராமங் களிலேயே ஏராளமாக செய்யத் தொடங்கினார்கள். ஜனங்கள் கூட் டங் கூட்டங்களாக கூடினவர்களாகவும் யுத்தத்திற்குப் பேராவலு டையவர்களாகவும் காணப்பட்டார்கள்.

டோன் ஒரு ப்ரெஞ்சுக் கப்பல் படையுடன் அயர்லாந்து சேர்ந் தாராயினும், புயல் காற்று அசசமயம் இங்கிலாந்துக்கு அனுகூலமாக் ஏற்பட்டபடியால், பிரயத்தினம் பலிக்கவில்லை. சந்தேகிக்கப்பட்ட வர்கள் வேட்டையாடப்பட்டு, அவர்கள் வீடுகள் அக்கினிக் கிரை

யாக, அனேக பெண்களும் குழந்தைகளும் கூட கவர்ன்மெண்டின் கோபத்திற்கு இரையாகி மாண்டார்கள். 1787-ம் வருஷத்தில் இன்னொரு பிரயத்தினமும் இம்மாதிரியாகவே முடிந்தது.

கிராட்டன், பார்லிமெண்டில், சர்க்கார் ஜனங்களை விரோதித்துக்கொள்ளக் கூடாதென்றும்; நேசத்தால் ஆளவேண்டுமென்றும், தோல்வி யடைந்தவர்களைக் குரூரமாக நடத்தக்கூடாதென்றும் வற்புறுத்தியும், அவர் பிரயத்தினம் பயன்படவில்லை. சர்க்காரின் கோபம் எல்லைக்கு அடங்காததாகி, ஜனங்களை நிர்ப்பந்தித்தது. "யுனைடெட் அய்ரிஷ்மென்" என்னும் கோஷ்டியே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

லார்ட் கார்ன்வாலிஸ் (Lord Cornwallis) கத்தோலிக் மதத்தைத் தழுவின பெரும்பான்மையோருக்கு ஓட் சுதந்திரம் கொடுப்பதுதான் அயர்லாந்தில் அமைதி ஏற்படுத்தவல்ல உபாயமென்று, பலவாறு இங்கிலாந்துக்குத் தெரிவித்தும், இங்கிலாந்து செவிகொடுக்காமல், அத்தேசத்து முதல் மந்திரியா யிருந்த "பிட்" (Pitt) என்பவர்; லஞ்சங்களாலும் ஒற்றர்களாலும் யுனைடெட் அய்ரிஷ்மென் கோஷ்டியாரின் தலைவர்களையும், அவர்கள் சூழ்ச்சிகளையும் அறிந்துகொண்டு, அத்தலைவர்களில் முக்கியமானவர்களைச் சிறைப்படுத்தினர். அயர்லாந்து முழுதும் ராணுவச் சட்டம் பரவி, ஆயுத வேட்டைகள், சந்தேகிக்கப்பட்ட வீடுகளை தீக்கு இரையாக்குதல், ஸ்திரீகளை மானபங்கம் செய்தல், இம்முறைகளெல்லாம் தாராளமாக அனுஷ்டிக்கப்பட்டுவந்தன.

இவ்வாறு சர்க்காருக்கு விரோதமாக ஏற்பட்டுள்ள கிளர்ச்சி எளிதில் நசுக்கிவிடப்பட்டது. ஆகிலும் 1798ம் வருடம் ஆகஸ்டு மாதத்தில், மறுபடியும் ஒரு கலகம் ஏற்பட்டு, அதுவும் மேல் விவரித்தபடி குரூரமான முறைகளால் நசுக்கப்பட்டது. ஆனால் அயிரிஷ்காரர்கள் இவ்விஷயத்தில் சோர்வடைந்தவர்களல்ல. ஆதலால், அவ்வருஷம் அக்டோபர் மாதத்திலேயே, மறுபடியும் டோன் ஒரு கப்பலுடன் படையெடுத்து வந்த காலத்தில், கவர்ன்மெண்டு அவரைப்பிடித்துவிட்டார்கள். தன்னைச் சுட்டுவிடும்படி டோன் எவ்வளவு தூரம் மன்றாடியும் கப்பல் கியாப்டன் அவரைத் தூக்கிலிடுவதாக நிச்சயித்தார். இந்த அவமானத்தினின்று தப்பிக்கொள்ள, டோன், தன் கழுத்தை அறுத்துக்கொண்டார். ஆனால் அவர் சாகவில்லை. அப்போது கூட அவரைச் சிறை செய்தவர்கள் தூக்

கொலைசெய்ய வேணுமென்றே வற்புறுத்தினார்கள். டோனின் சிநேகிதர்கள் கச்சேரியில் வழக்குத் தொடங்கினார்கள். நியாயபதியாகிய "லார்ட் கில்வார்டன்" (Lord Kilwardan) என்பவர் பின்வருமாறு தீர்ப்புச் செய்தார்:—யுத்தம் நடக்காமலிருக்கும் காலத்தில் சாதாரண கச்சேரிகள் அமுல் நடத்திவரும் காலத்தில், ராணுவக் கோர்ட்டிற்கு அதிகாரம் கிடையாது. இப்பிரபுவின் தீர்மானம்தான் ராஜ்யத்திலேயே ஜனங்களின் பிறப் புரிமைகளைக் காப்பாற்றும் தீர்ப்புகளில் ஒன்றாக இன்றைக்கும் விளங்கி வருகிறது.

இக்காலத்தில் சர்க்கார் கையாடிய அடக்கு முறைகளைப் பற்றி ஒரு சரித்திரக் கர்த்தா பின்வருமாறு எழுதுகிறார்:—"அப்போது நடந்த சம்பவங்களுக்குத் தகுந்த பிராயச் சித்தம் இன்னதென்று சொல்வது அசாத்தியமாகும். தேசத்திலுள்ள சட்டதிட்டங்கள் ஜனங்களை ஹிம்சித்து நாசமாக்குவதற்காகவேயன்றி, ஜனங்களின் சுகத்திற்காகவும் பாதுகாப்புக்காகவும் இல்லை யென்னும் உணர்ச்சி ஜனங்களின் மனதில் பதிந்துவிட்டது. உத்தம தேசபிமானிகளை பெரும் குற்றவாளிகளாகக் கவர்ன்மெண்டு நடத்திவந்ததின்பலனாக, பிற்காலத்தில், ஜனங்கள் குற்றவாளிகளைக்கூட பெரும் தேசாபிமானிகளாக ஆதரிக்கத் தலைப்பட்டார்கள்."

இவ்வித முறைகளில் அமைதியை ஏற்படுத்தின் பிறகு ஆங்கில முதல் மந்திரியாகிய "பிட்" அயர்லாந்தின் பார்லிமெண்டையே ஒழித்துவிட வேண்டுமென்று நிச்சயித்துவிட்டார். முதல் முதல் "யூனியன்" என்னும் வார்த்தை சர்க்காரின் ரஹஸிய கடிதங்களில் தலைகாட்டிவந்தது. சர்க்கார் ஆதரவைப்பெற்ற ஒருவரால் முதல் முதல் இரண்டு தேசங்களும் ஒன்றாகவேண்டும். (அதாவது அயர்லாந்தின் பார்லிமெண்டை ஒழித்துவிடவேண்டும்) என்னும் நோக்கத்தைப் பலப்படுத்தி, ஒருபுஸ்தகம் வெளியிடப்பட்டது. தேசத்திலுள்ள நியாயவாதிகளும் வர்த்தகர்களும் இந்த யத்தினத்தைப் பலமாகக் கண்டித்தனர். 1799-ல் பார்லிமெண்டு சந்தித்த காலத்தில், கொஞ்சம் ஜாடையாக "யூனியன்" பேச்சு பிரஸ்தாபிக்கப்பட்டது. சர்க்கார் எவ்வளவு பிரயத்தினம் செய்தும், "யூனியன்" வேண்டுமென்னும் தீர்மானம், ஒரு வோட்டினால் தோற்றுப்போனது. தேசமெங்கும் சந்தோஷக் குறிகள் காணப்பட்டன. ஆகிலும் ஏராளமான லஞ்சங்களைக் கொடுத்தும் புது மெம்பர்களை சிருஷ்டித்தும், இன்னும் கேவலமான சில முறைகளைக் கையாடியும் அடுத்த (1800-ம்) வருஷத்தில், தன் இழவு சங்கைந்தானே ஊதியதுபோல், பார்லி

மெண்டு, "யூனியன்" தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த வெற்றியைப் பெறுவதற்கு சர்க்கார் செலவிட்ட (லஞ்சத்) தொகை 1800 பவுன். இந்தத்தொகை தேசியக்கடனை அதிகப்படுத்திற்று.

இந்த நெருக்கடியான சமயத்தில், வயதில் முதிர்ந்து வியாதியால் பிடிக்கப்பட்டவராயிருந்தும் கிராட்டன் தன்னிடம் பழைய (1782) வாலண்டியர் உடுப்பைப் போட்டுக்கொண்டு பார்லிமெண்டுக்குவந்து, வெகு சாதுர்யமாகவும் கேட்போர் மனது உருகும்படியாகவும் வாதிததார். ஆனால், சர்க்கார் லஞ்சத்திற்கு முன் அவரிட்டவாதம் பலிக்காமல் போயிற்று. 300 அங்கத்தினர்களடங்கிய காமன்ஸ் சபையில், யூனியனுக்குச் சாதகமாக ஓட் கொடுத்த 162 நபர்களில், 116 பேர் பராதீனர்களாகவும், அதில் சிலர் ராணுவத்தில் (சர்க்கார்) உத்தியோகம வகித்தவர்களாகவும், அயர்லாந்தில் ஒரு காணி நிலத்திற்குக்கூட சொந்தக்காரர்களல்லாதவர்களாகவுமிருந்தார்கள்.

அடக்குமுறைகளைத் தீவிரமாக இடைவிடாமல் சர்க்கார் கையாண்டுவந்தும, கிளர்ச்சிக்காரர்கள் ஆங்காங்கு மறைவாக இருந்துகொண்டே வந்தார்கள். இவர்கள் மனதில், இங்கிலாந்தை துரத்திவிட்ட பிறகுதான் சுயேச்சையாக அயர்லாந்தில் வாழக் கூடுமென்னும் நம்பிக்கை, முற்றிலும் மறையுவேயில்லை. இச்சமயத்தில் இந்த இயக்கத்திற்குத் தலைமைஸ்தானம் வகித்தவர், "ராபர்ட் எம்மெட்" (Robert Emmet) இவர் (Trinity College) ட்ரினிடி கலாசாலையில் வாசிக்கும் காலத்திலேயே, ராஜத் துவேஷத்திற்காக கலாசாலையை விட்டு வெளியே துரத்தப்பட்டவர். இவர் (1803-ல்) ஏற்படுத்திய கிளர்ச்சிப் பிரயத்தினம், சுலபமாக நசுக்கப்பட்டு, அவரும் தன் உயிரை இழந்தார்.

இவர் பிரயத்தினத்தின் விஷயமாக, ஞாபகத்தில் வைக்க வேண்டிய அம்சம் ஒன்று. அதாவது அவருடைய கேஸ் விசாரணை காலத்தில், அவர் செய்த ராஜீயப் பிரசங்கமானது, அருமையானது; எந்த உயர்வான எண்ணத்தை முன்னிட்டு ஆயிரக்கணக்கான உத்தம தேசாபிமானிகள் தங்கள் உயிரைத் திரணமாகக் கருதி தேசத்தின் பொருட்டு பலி கொடுத்தார்களோ அந்த உததம தத்துவங்களை, எம்மெட்டின் பிரசங்கம், உலகத்திற்கு விளக்கிக் காட்டியதாகும். தேசத்திற்குப் பிற்காலத்தில் நன்மை ஏற்பட்டதற்குக் காரணம், டோன், எம்மெட், முதலிய வீரர்களிட உத்தம தியாகமா,

அல்லது கிராட்டன் முதலிய ராஜ தந்திரிகளிட உருக்கமான வாதங்களா என்னும் வாதத்தை, நாம் இங்கு தீர்க்கமுடியுமா? அயர்லாந்து தேசத்தின் சரித்திரத்தின் ஒரு நிகரற்ற பகுதியாகிய இந்தப்பாகத்தை முடிப்பதில் எம்மெட்டனுடைய கடைசி வார்த்தைகளைக் கொண்டு முடிப்பது பொருத்தமற்றதாகாது.

"என்னிட வாழ்க்கையைக் குறித்து ஒருவரும் இப்போது அபிப்பிராயம் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் என் உள் எண்ணங்களை நன்கு அறிந்த ஒருவரும் அவை சரிதான் என்று உலகத்திற்கு ருசுப்படுத்த முன் வரக்கூடிய காலம் இன்னும் வரவில்லை. என் உள்ளெண்ணங்களுக்கு விரோத எண்ணமுள்ளவர்களும் என் உள் எண்ணங்கள் இன்னவையென்று அறியாதவர்களும் அந்த எண்ணங்களைப்பற்றி தூஷிக்க வேண்டாம். என் தாய் நாடு கௌரவமாக வாழும் மற்றத் தேசங்களின் வரிசையில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றபின்தான், என் ஜீவியத்தைக் குறித்து உலகம் தன் அபிப்பிராயத்தை கொள்ளலாகுமென்பது என் தாழ்மையான பிரார்த்தனை."

(தொடரும்)

# எங்கள் மல்லி.

Mrs. கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

பிரியவாசகர்களே! எங்கள் மல்லி எப்படிப்பட்டவனென்பதை நீங்கள்தான் தேர்ந்தறியவேண்டும். எங்கள் சுபாவத்திற்கும் அவன் சுபாவத்திற்கும் சில வேற்றுமைகள் விளங்கியபடியால் எனக்கு எப்பொழுதும் அவனைப்பற்றி நினைப்பதில் உற்சாகமுண்டு. "சேர்ந்த உறவும் சிறு தாயார் மக்களும்" என்பது பழமொழியல்லவா? எங்களுக்கிருந்த ஆசையில் அவன் நீண்ட பெயரைச் சுருக்கி "மல்லி" என்று நாங்கள் அருமைப் பெயரிட்டழைத்தோம். உடன் பிறந்தவர்கள் ஐந்தாறு பெயர்களுக்குக் குறையாதவர்களாய் நாங்களிருந்த போதிலும், மல்லி எங்கள் வீட்டிற்கு வந்து வசிக்கத் தொடங்கி

ய்து எங்களுக்குச் சிறிதும் அதிகப்படியாய்த் தோன்றவில்லை. சற்றேறக்குறைய இருப்து வருஷங்களுக்கு முன் அவனைச் சிறு குழந்தையாய்ப் பார்த்த நினைவு எனக்கு இன்னும் மறக்காம லிருக்கிறது. ஓடி ஆடி விளையாட மாட்டாமல், உட்கார்ந்த வண்ணத்தில் எதையாவது யோசித்துக் கொண்டிருக்கும், நெருங்கலான பல குழந்தைகளையும் போல எங்கள் மல்லியு மிருந்திருப்பானென்று நீங்கள் நினைத்தால், அது முற்றிலும் பிசகாகும். பாலர்களின் போஷணை முறைகளொன்றையும் அவன் தாயார் சிறிதும் அறிந்திராமலிருக்கும் பொழுதே, எங்கள் மல்லி களைப்பின்றி ஆடிக் குதிக்கத்தக்க தேக வலிவும், வஞ்சனையின்றி சதைப்பற்று முள்ளவனா யிருந்தான். அச்சிறு வயதிலும்கூட அவனை ஒருவரும் கவனியாமற் சென்றால், அவனறியாமலே அவன் மனம் சம்மத மடையாது. இப்பொழுது மல்லி தன் சுகதுக்கங்களைப் பற்றித் தானே கவலை யெடுத்துக் கொள்ளக்கூடிய வயது வந்தவனாய் விட்டான். பிறர் பராமரிப்பை கௌரவக் குறைவாக நினைக்கும் காலம், தன் உணவைத் தன் கைகளினாலேயே எடுத்துண்ணும் வயது கிட்டிவிட்டதென, அவன் அடிக்கடிச் சொல்லத் தொடங்கினான். இச்சொற்களின், பெருமையையும், அர்த்த புஷ்டியையும் கவனியாமல், "அப்படியானால் உனக்கு இப்பொழுது வேறு யாராவது ஊட்டுகிறார்களா?" என்று, என் உறவினர் ஒருவர், ஒரு தடவை வேண்டுமென்றே வேடிக்கையாய்க் கேட்டார்.

அவன் சிறுவனாயிருக்கும்பொழுது, என் சகோதர னொருவனும் அவனும் ஏறக்குறைய ஒரு வயதினராயிருந்தமையால், ஒத்த தோழமை கொள்ளக்கூடியவரா யிருந்தனர். அவர்களிருவருக்குமுள்ள சுபாவ வேற்றுமையை நாங்கள் அடிக்கடி கவனித்துப் பேசுவது வழக்கம். தங்கள் விளையாட்டுகளிலும்கூட பிறர் உதவியில்லாம லிருக்க விருப்பமற்ற என் சகோதரனைப் போலல்லாமல், சில சமயங்களில், மல்லி தன் சிறுயுக்தியின் மூலமாய்த் தானே ஏதாவது விளையாட்டுக் கருவிகள் அமைத்துக்கொண்டு, சோர்வடையாமல் விளையாடிப் பொழுது போக்குவது, எங்களுக்கு வியப்பையே கொடுக்கும். தன்னை மீறி, பிறரைப்பற்றி அனாவசியமான யோசனையாவது, கருத்தாவது கொள்ளுவது ஒருபோதும் அவன் வழக்கமல்ல. நாம் விரும்பாத சமயத்தில் நம்மைத் துன்புறுத்தும் மனச்சாக்ஷி யென்ற விரோதி யினாலுண்டாகும் இச்சிறு எண்ணங்களுக்கு, எப்பொழுதும் உற்சாகத்தை நாடும் அவன் மனது இடம் கொடுக்கச்

சிரமப்படுவதில்லை. நாங்கள் எங்கேயாவது வேடிக்கை விநோதங்கள் பார்க்கச் செல்லும்பொழுது, அவனை ஒரு சமயமும் விட்டுச் செல்லுவது கிடையாது. அப்படி அபூர்வமாய்ச் சென்றாலும், பின்பு அதைப்பற்றி வருந்தாமலிருப்பதில்லை. ஆனால், தன்னைத் தவறாமல் அழைத்துச் செல்லுவதையாவது, பின்பு பச்சாத்தாபப் படுவதையாவது, மல்லி, எதையும் விசேஷமாய் மனதில் தாங்கிக் கொள்ளும் சில சிறுவர்களைப்போல, உணர்ந்திருக்க மாட்டானென்பது நிச்சயம். அற்ப விஷயங்களுக்கெல்லாம் நன்றி பாராட்டுவதென்ற வீண் பாசாங்கு செய்வது அவன் சுபாவமேயல்ல. தன்னையொத்த சிறுவன் தானில்லாமல் ஓரிடத்திற்கும் செல்லவிருப்பமற்றிருக்கும் பொழுது, அவனை விட்டுத் தான் மட்டும் சென்று சந்தோஷமாயிருப்பதையொன்றும், அவன் பெரிய பிசகாயெண்ணித் தியங்கமாட்டான்.

மல்லிக்கு நல்ல புத்தி கூர்மை யிருந்ததேயாயினும், அது படிப்பின்மீது செல்லவில்லை. உபாத்தியாயர் அவன் வேறு விஷயத்தில் கவனம் செலுத்தியிருப்பதைப் பற்றிக் கோபித்துக் கொண்டாலும், அச்சமயம் அவன் மனம் சென்றிருந்தது ஏதாவது மிகவும் விநோதமான விஷயத்தைப் பற்றியதாகவே யிருக்குமாதலால், முடிவில் கோபம் நீங்கி, அவருக்கே சிரிப்புண்டாய்விடும். தனக்குப் படிப்பு வராமல் தான் பரீக்ஷைகளொன்றும் தேறாமற் போனதைப் பற்றி, மல்லிக்கு எள்ளளவு வருத்தமேனும் கிடையாது. பெரிய பரீக்ஷைகள் கொடுத்தும் நல்ல உத்தியோகம் கிடைப்பது அரிதாயிருக்கும் பொழுது, வீண் கஷ்டமெடுத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை போலும்!

எங்கள் மல்லியிடம் ஏதோ ஒரு விசேஷ சக்தி யிருக்கிறதென்றே நினைக்கிறேன். ஏனெனில், வீட்டில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில், அவனை நாடாதவர் அபூர்வம். அவனுடம்பு சாய்ந்துகொள்ள சுகமா யிருந்ததினாலேயோ என்னவோ! குழந்தைகள் அவனைக்கண்டு தாவிச் செல்லாம லிரார்கள். எப்பொழுதும் தன்னாலியன்ற உதவியைச் செய்யவேண்டும் என்ற நுட்ப திருஷ்டி மல்லிக்கு அதிகமாயுண்டு. தன்னை இன்றியமை யாதவனாகச்செய்து கொள்ளுவது, பின்பு விஷயத்திற்குச் சாதகமா யிருக்கும். ஒருவரிடம் மற்றவரினும் விசேஷமான அபிமானம் என்பதாக ஒன்றுமே மல்லியிடம் காணப்படா திருக்கும் பொழுதுகூட, ஒவ்வொருவரும் அவனிடம் தற்சமயம் மிகுந்த நம்பிக்கை பாராட்டி, தங்கள் மனதை வெளியிட்டுப் பேசுவதற்குக் காரணம், எதைக் கூறலாம்?

ஆயினும், உண்மையாய் பிறருக்கு உதவி புரியும் சுபாவம் மல்லியி டம் இயற்கையில் அமைந்திருந்ததை, நாம் முற்றும் மறந்து விட லாகாது. இதனாலேயே அவன் பல பெயர்களுக்கும் வேண்டியவனா யிருத்தல் கூடுமல்லவா ?

மற்றவர்களுடைய குண குணங்கள் யாவற்றையும்விட்டு, எந்த நடவடிக்கை அல்லது சுபாவம் விசித்திரமாயும், விநோதமாயு மிருக் குமோ, அதையே முக்கியமாய்க் கண்டுபிடித்துக் கூறும் சாமர்த்தி யத்தை, மல்லி அதிகமாய்ப் பெற்றிருந்தான். அவன் அவ் விதம் எடுத்துச் சொல்லும் பொழுது, எங்களுக்கும் அது தோன்றி, தாங்க முடியாத சிரிப்புவரும். தனக்கு வேண்டும் பொழுது ஒருவரை அவருக்குற்ற விஷயத்தில் உயர்த்திப் பேசி சமாதானமாக்கிக் கொள்ளுவதை, அவன் தன் ராஜ சுபாவத் திற்கொரு பாதமாக எந்நாளும் மதிப்பதில்லை.

தான் எப்படி யிருந்தபோதிலும் நாங்கள் காட்டும் பிரியத்தி லும், பக்ஷத்திலும் எள்ளளவேனும் குறைந்திருக்க, மல்லி ஒரு சம யமும் பொறுக்கமாட்டான். ஆனால் அந்த சொந்தத்தின் பேரில், நாங்கள் அவனை எதற்கும் கண்டிப்பது மட்டும் முடியாது. அப் பொழுது எங்கள் பாத்தியத்தைப் பற்றியே அவன் ஒத்துக்கொள் ளுவது கஷ்டமாய்விடும். தான் தவறிழைத்ததை அவன் அபூர்வ மாய்த்தான் ஏற்றுக்கொள்ளுவான்.

தம்மைப்பற்றிக் குறைவும், தம் அதிர்ஷ்டத்தில் சந்தேகமும் அவநம்பிக்கையும் கொண்டு, எவ்வளவு பெயர்கள் உலகில் பல சம யங்களில் முகம வாடித் தோன்றுவதை நாம பார்த்திருக்கிறோம். ஆனால் அவ்விதம் தம் நலத்திற்கே கேடு விளைக்கும் அவ்வெண் ணங்கள், மல்லியை ஒரு சமயமும் சோர்வடையச் செய்ததை நாங் கள் கண்டதில்லை. தன் அதிர்ஷ்டத்தில் அவனுக்குப் பூர்ண நம்பிக் கைதான். மற்றவர்களுடைய மனவருத்தங்களைப்பற்றிக் கவலை கொள்ள இயலாதிருந்ததுடன் தன்னைக் குறித்தும் வெகு நேரம் சிந்திக்கும் தவறுதல்கள் அவனிடமில்லை.

ஈசுவராதிகளையும் வசமாக்கும் ஸ்தோத்திரத்திற்கு மல்லிமட் டும் மயங்கமாட்டானென, நாம் நினைக்க என்ன இடமிருக்கிறது? தற்சமயம் ஒரு காரியத்தின்பொருட்டு நம்மிடம் ஒருவர் இச்சகமாகப் பேசக்கூடும் என்ற அறிவுக்தியினால், நாம் அடையும் பயன்—அல்

லது திருப்திதான் என்ன? பிறரின் பொருட்டு சிரமப்பட எளிதில் இணங்கும் அவன் சுபாவமானது, நம்புகழ்ச்சியினால் மேன்மேலும் உதவிபுரிவதில் உற்சாகமே கொள்ளும்பொழுது, அதை ஒரு தாழ்ந்த குணமாகக் கருத, நமக்கேதாவது நியாயமிருக்கிறதா? ஒருவரின் நிமித்தம் சிரம மேற்றுக்கொள்ளுவதில், முகஸ்துதி ஒரு முக்கியக் காரணமாய் நிற்கக்கூடுமானால், கேவலம் ஸ்தோத்திரத்தைக் கேட்டுத் திருப்தியடைந்து மமதை கொள்ளுவதைவிட, அது குறைவானதல்லவென்றுதான் சொல்லலாம். ஏராளமாய்ச் சம்பாதிக்க வேண்டுமென்று மல்லிக்கிருந்த ஆவலுக்கு, தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களுக்கு அமிதமாய்க் கொடுத்துப் பெருமையடையும் கருத்தே தூண்டுகோலாயிருந்ததும், அவன் குணத்திற்குப் பாதகமாகுமென்று எனக்குத் தோன்றவில்லை.

நேயர்களே! நீங்கள் விரும்பினால், மல்லியைப்பற்றி இம்மாதிரியான விஷயங்கள் இன்னும் நான் உங்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லக்கூடும். ஆனால், மிகக் கெட்டதான குணத்தையோ, அல்லது மிக்க உத்கிருஷ்டமானதையோதான், நம்மால் நன்றாய் வர்ணித்துரைக்க இயலுவது சகஜம். அவ்விரண்டுமற்ற நடுத்தரமான சுபாவத்தை—இயற்கையில் சிறு நலங்களும், சிறு குறைவுகளுமே அதற்கு அமைந்திருக்கக் கூடுமாகையால்—நான் வெகுவாய் விவரித்துக் கூறுவது, உங்கள் ரஸ்பாவத்திற்குச் சலிப்பையுண்டாக்கி விடுமோவென்ற பயமே, என்னை இததுடன் நிறுத்தும்படிச் செய்கின்றது.

(::)

# ஐரிஷ் கவி-நாவலர்
# பாட்ரிக் மாக்கில்

## என்பவரின் சுய சரிதை.

ஸ்ரீமதி C. N. நல்லமுத்தம்மாள், M. A., L. T., லண்டன்.

(444-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

வழியில் குடியானவன் ஒருவன், குதிரைகள் பூட்டிய பாரவண்டியை ஓட்டிக்கொண்டு வந்தான். என்னைப் பார்த்து வண்டியை நிறுத்தி,

"பையா, வேலைக்கு வருகிறாயா?" என்றான்.

"ஆகா" என்றேன்.

"உனக்குப் பால் கறக்கத் தெரியுமா?" என்றான்.

என் ஜென்மத்திலும் நான் பால் கறந்திருக்கா விட்டாலும் "ஆகா தெரியும்" என்றேன். "என்ன சம்பளங் கேட்கிறாய்?" என்றான். அதற்குள் மோல்ஸ்கின்ஜோ ஓடிவந்து "ஐயா, இப்பிள்ளை என் மகன், சம்பளம் 6 மாதத்திற்கு $2\frac{1}{2}$ பவுன் கொடுக்க வேண்டும்" என்று சொல்லித் தீர்மானித்து என்னை நோக்கி, "அப்பா! மகனே, கவனமாயிரு; இப்பேர்ப்பட்ட எஜமானன் கிடைப்பது அபூர்வம்" என்று புத்தி சொல்லிச் சென்றான். நான் குடியானவனுடன் போனேன்.

என்னுடைய எஜமானன் ஓர்பெரிய பால் வியாபாரி. அவனுக்கு அநேக மாடுகளுண்டு. சரியாய் மத்தியானம் மூன்றரை மணிக்குப் பால் கறக்கவேண்டும். ஒரு முக்காலியும், தகரக்குவளையும்கொடுத்து, என்னைத் தொழுவததிறகு அனுப்பினார்கள். எனக்கு எதிரே மூன்று பெண்கள் உட்கார்ந்து, பெரிய பசுக்களைக் கறந்து கொண்டிருந்தார்கள். நயாகரா (Niagara falls) நதியின் நீர் வீழ்ச்சியைப்போல் சொரிந்தது பால் அவர்கள் குவளைகளுக்குள், நானும் உட்கார்ந்து கறந்தேன். சொல்லி வைத்தாற்போல், ஒரே தருணத்தில் பெண்கள் மூவரும் பால கறப்பதை நிறுத்தினார்கள். நானோ விடவில்லை! என்னுடைய குவளையில், அருங்கோடையில் பனி உறைந்தாற் போலிருந்தது பால். என் எஜமானர் வந்தார். என் கைத்திறத்தைப் பார்த்தார்.

"ஆகா! உன் தகப்பன் ஒருபெரும்பொய்யன்" என்றார்.

நான், "ஆமாம்" என்றேன்.

"சரி, உனக்குப் பேசிய சம்பளத்தில் பாதிச் சம்பளம்தான் கொடுப்பேன்; நீ வேலையைக் கற்றுக்கொண்டு செய்" என்றார். சம்மதித்துத் தங்கினேன். இரண்டு வருஷமிருந்தேன். அந்தக் கிராமத்தில் பால கறப்பதில் மிகவும் தேர்ந்தவர்கள் யார் என்று பரீக்ஷிப்பதற்காக ஒரு பந்தயம்வைத்தார்கள். அதில் எனக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது.

ஸ்கார்ட்லாந்தில், கிளாஸ்கோவுக்கு அருகாமையில், ஏதோ அலுமினியத் தொழிற்சாலை கட்டுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன், நானும் மோல்ஸ்கின்ஜோவும் அங்கே போகத் தீர்மானித்தோம். போகும் வழியில் நாங்கள் சுகமாகவே ஜீவித்தோம். ஆனால் கடன் வாங்கவுமில்லை, பிச்சை யெடுக்கவுமில்லை! பிற்காலத்தில் லாக்லெவன், என்று பிரசித்தி பெற்ற, அந்த அலுமினிய தொழிற்சாலையிருக்குமிடத்தில் வேலையி லமர்ந்தோம். நாங்கள் சென்ற போது அது ஒரு கறட்டுப் பிரதேசமா யிருந்தது. நாங்கள்தான் அதை நடத்தினவர்கள், முதல் அஸ்திவாரம்போட்ட ஆதிகாரண புருஷர்கள். தேசங்களென்ன, இராஜாங்கங்க ளென்ன, சக்ராதிபத்தியமென்ன, இவைகளுக்கு எல்லாம் மூளைப் பிடித்தவர்கள் பெருந் திருடர்களல்லவா?

ஒருநாள், நான், மோல்ஸ்கின்ஜோ, இன்னு மொருவன் ஆக மூன்று பேரும் ஒரு யந்திரதத்தில் வேலை செய்துகொண்டிருந்தோம். எங்களுடன் வேலை செய்தவன், யந்திரம் சுழலும்போது அதைத் தொடாத இடத்தில் தொட்டு மடிந்தான். எங்கள் சாலையில் இறந்தவர்களை, கையால் தள்ளும் பார வண்டியில் கொண்டுபோய் அருகிலிருக்கும் காட்டில் குழிவெட்டிப் புதைப்பது வழக்கம், ஆனால் சுற்றுப் புறக்காடுகளில் சவங்கள் எத்தனையோ காணலாம். அங்கே அடக்கம் செய்வதென்பது அபூர்வம். எங்கள் கூட்டாளியைப் புதைப்பதற்காகக் குழி தோண்டிவிட்டு வந்தோம். அதற்குள் இறந்தவன் பூட்சுகள் இரண்டையும் யாரோ திருடிவிட்டார்கள், "இதென்ன அநியாயம்" என்றேன். அதற்கு மோல்ஸ்கின்ஜோ "அது நம்முடையதப்பு, தம்பி. நாம போவதற்கு முன் அவைகளை யெடுத்து பந்தோபஸ்து செய்திருக்கவேண்டும்" என்றான்.

அந்த சாலையில வேலை செய்கிறவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே உடைதான். உடையும் உடம்பும தண்ணீரைக் காண்பது வெகு அபூர்வம். உடை உடமபோடே தேய்ந்து விழுந்தாலொழிய, கழட்டுவது என்பது கிடையாது. அங்குள்ளவர்களில் ஒருவருக்கும் இரண்டாவது ஷர்ட் கிடையாது. ஒரே ஒருவனுக்கு (எனக்கு)த்தான் இருந்தது, அந்தச் சம்பத்து. அதன் வாழ்வும் மிகவும் சொற்பகாலம்தான்: அங்கு சென்ற மறுநாள் ஒரு ஷர்ட்டைத் துவைத்து மரத்தில் உலர்த்தினேன். அதுதான் கடைசி முறையாக நான் அதைப் பார்த்தது!

அந்தக்காலத்தில் எங்கள் தொழிற்சாலையைப் பரிசோதிக்க அரசாங்க இன்ஸ்பெக்டர்கள் கிடையாது. ஞாயிற்றுக்கிழமை வேலைசெய்தால் இரட்டைக்கூலி கிடைக்கும். வேலை மாத்திரம், நாலு மடங்கு கஷ்டமாயிருக்கும். கூலி வேண்டி, வயிற்றின் கொடுமை யால் அன்று வேலை செய்கிறவர்கள் ஆண், பெண், குழந்தைகள் எத் தனையோ பேர். நானும் அன்று வேலை செய்தேன். அப்பொழுது எனக்குப் பணம் அத்யாவசியமாயிருந்தது.

என் மாலுமிச் சிநேகிதன்—மோல்ஸ்கின்ஜோ, ஓர் அபூர்வ ஆத்மா. பார்ப்பதற்கு நல்ல உயரம், தேகக்கட்டு வாய்ந்தவன்; குணம் வரத பொழுது நல்ல உழைப்பாளி. ஓயாமல் ஒவ்வொரு சமயங்களில் 46 மணி நேரம் வேலை செய்யும் புண்ணியவான். நல்ல சம்பளம் வாங்குவான். வாங்கின, கை ஆறுகிறதற்குள் போய்க் குடிப்பான். அவன் ரஜா எடுத்துக்கொண்டு, அதைக் கொண்டாடு வது ஒரு விந்தை. அந்த உத்ஸாகமே உத்ஸாகம்! அவனுடைய ரஜா வை, வெகுவாய் மாட்சிமை பொருந்திய அரசனுடைய சிறைச்சாலை யில் கழிப்பான்.

மோல்ஸ்கின்ஜோவுக்கு ரஜா எடுக்க வேண்டுமென்ற அவா மேலிட்டால், போலீஸ்காரன் வருகிற சமயம் பார்த்து, ஒரு வீடு; அல்லது கடையினுடைய கண்ணாடி ஜன்னலை ஒரு உதை உதைப் பான். உடனே போலீஸ்காரன் அவனைச் சிறைச்சாலைக்கு நடத்து வான். காராகருகத்தில் சௌக்கியமாய் மோல்ஸ்கின்ஜோ சில நாள் கழித்துவிட்டு வெளிவருவான். அப்பொழுது பார்க்கவேண்டும் அவனை! நன்றாய்ச் சோப்பிட்டுக் குளித்த மேனியும், க்ஷவரக் கொலு வுடன் இலங்கும் முகமும், சுத்தமான உடையும்; "கைதிகள் உதவி சங்கத்தாரால்" கொடுக்கப்பட்ட புதியபூட்ஸை அணிந்து நடக்கும் அவன் ஒய்யாரத்தையும்!

வெளிக் கிளம்புவது தான் தாமசம், மறுநாளே பூட்ஸை விற் பான். நன்றாய்த் தன் மனங்கொண்ட வரையில், தன் மாமூல் செலவு செய்வான்.

நான் சிறுவனா யிருந்தபோது, எங்கள் டானேகல்லில், வினி மாவும் குறுக்கு வார்த்தைப் புதிர்களும மலிந்த இப்படும் நாகரீக காலத்துச சிறுவர்களைப்போல், பதினன்கு வயதிலேயே சுருட்டுப் பிடிக்க ஆரம்பிக்கவில்லை. நான் ஆரம்பித்தது பதினைந்தரை வயதில்

தான். ஒரு பென்னி அகப்பட்டால் கூட, உடனே ஏதோ மலிந்த புஸ்தகம் வாங்கி வாசிப்பேன்.

நான் ஸ்காட்லாந்து தேசத்தில் உருளைக் கிழங்குக் கழனியில் வேலை செய்துகொண்டிருந்த பொழுது, என் நாட்டார், 1640-ம்வருஷம் இங்கிலீஷ் அரசாங்கத்தார் தம்மை வருத்திய கொடுமைகளை நினைந்து மிகவும் கோபாவேசம் பூண்டு, தாம் படும் தவிப்பை, ஒன்றைப் பலவாக்கி ஓலமிட்டார்கள். நான் அதைக் கேட்டவுடனே, நானும் என் நாட்டின் கஷ்ட ஸ்திதியை நினைந்து மனம் பொறுமல், அதைப்பற்றி ஒரு கவி எழுதி அந்த ஊர் தினசரிப் பத்திரிகைக்கு அனுப்பினேன். 'அதற்கு, பத்திராதிபர், எனக்கு ஒரு காசுகூட கொடுக்கவில்லை.

அது பிரசுரஞ் செய்த சில நாட்களுக்குப்பின் நான் என் பன்றிக் கொட்டகையி லிருந்த பொழுது, தபால் 'காரன் என் பேருக்கு ஒரு கடிதம் கொண்டு வந்தான். அது ஆங்கிலேயப் பாராளுமன்றத்தின் அங்கத்தினர் ஒருவரிட மிருந்து என்று சொன்னான். பன்றிக் கொட்டகையில் வசிப்பவனுக்கு பார்லிமெண்டு அங்கத்தினரிடமிருந்து கடிதம் வருவது சாமான்யமா? கடிதத்தைப் பிரித்தேன். வாசிக்க-என்னமோ-முடியவில்லை அவ்வளவு முதல்தரமாயிருந்தது, அந்தப் பேர் பெற்ற அங்கத்தினரின் கையெழுத்து! பல முறை பார்த்ததில் அதனுடைய தாத்பரியம் கொஞ்சம் விளங்கிற்று. அவர் என்னுடைய செய்யுளை வாசித்ததாகவும், மிகவும் சந்தோஷப் பட்டதாகவும் எழுதியிருந்தார்.

நான் இதுவரை, ஒழிந்த நேரங்களில் எழுதின 52 பாக்கள் இருந்தன. அவைகளைப் புஸ்தகரூபமாகப் பிரசாரஞ் செய்யவேண்டுமென்று வெகு ஆசைப்பட்டேன். பணமோ இல்லை. அச்சிடுபவரிடம் சென்று, என்ன விலையாகும் என்று விசாரித்தேன். அவர் முதல் முதலில் பதிவாகும் ஆயிரம் புஸ்தகங்களுக்கு எட்டுப் பவுன்; இரண்டாவது பதிவாகும் ஆயிரத்துக்கு ஆறு பவுன்; மூன்றாவது ஆயிரத்துக்கு நாலு பவுன் என்றார். எட்டுப பவுனுக்கு எங்கு செல்வது என்று பெருமூச்சு விட்டேன். மோல்ஸ்கின்ஜோவிடம் சென்று நடந்த சமாசாரத்தைச் சொன்னேன். அவன், உடனே, கிரீஸ் தேசத்து, தத்துவ சாஸ்திரியின் தெளிவு புத்தி சமார்த்தியத்துடன் வெகு சுருக்காய் "மூன்றாவது ஆயிரம் பதிவுகளை முதலில் அச்சிடச் சொல்லு தம்பி!" என்றான்.

எப்படியோ எட்டு பவுன் சேர்த்தேன். ஆயிரம் பதிவுகள் வெளிவந்தன. ஒவ்வொரு புஸ்தகத்தின் முகப்பிலும், என் படமும், அதற்குப் பக்கத்தில் "விலை 6 பென்சுகள்" என்றும் விளம்பரம்செய் திருந்தது! விலையாக வேண்டுமே? எவரும், ஒரு புஸ்தகமாவது வாங் கவில்லை. "என்ன மோசம் போனேம்" என்று கலங்கினேன். மோல் ஸ்கின்ஜோ—"சோரான் சிங்கக்குட்டி"எதற்கும் பின்னடையவில்லை. "ஆக்கரைப் போல், தெருத் தெருவாய்ப் போய் விற்கலாம், தம்பீ," என்றான். அவன் பாதி, நான் பாதியாகப் புஸ்தகங்களை எடுத்துப் போய் வீடு வீடாய்ச் சென்று விலைகூறினேம். நான் ஒன்றுகூட விற்க வில்லை. ஒரே ஒரு கிழவி என்னைப் பரிதாபத்துடன் பார்த்துவிட்டு, மூன்று பென்சுகள் கொடுத்தாள். புஸ்தகத்தை எடுத்துக்கொள்ள மாட்டேனென்று என் முகத்தில் சரேலென்று கதவை அடைத் தாள்.

மோல்ஸ்கின்ஜோ தான் சென்ற வீடுகளிலெல்லாம், புஸ்தகம் விற்றதாக எனக்கு பின்னுல் தெரியவந்தது. அவன் விலைகூறியது என்னைப் போலல்ல. ஒவ்வொரு வீட்டிலும் போய் வாசல் கதவைத் தட்டுவான். கதவு திறந்தவுடனே ஒரு காலை உள்ளே உறுதியாக ஊன்றி, தன் அபார தேகத்தினுல் வாசலை அடைத்துக் கொண்டு புஸ்தகம் விலைகூறுவான். அவ்வீட்டு ஸ்திரீகள் இவன் பிடிவாதத் தோற்றத்தையும், பிரமாண்ட ஸ்வரூபத்தையுங் கண்டு வெருண்டு, இவன் தொலைந்தாலே நாம் பிழைத்தோமென்று புஸ்தகம் வாங் கியே தீருவார்கள். மோல்ஸ்கின்ஜோ இம்மாதிரியாக, தான் போன இடங்களிலெல்லாம் விற்றுக்கொண்டே சென்றான்—தனக்குத் தூக்கமெடுத்த வரையிலும்!

அவன் புஸ்தகம் விலை கூறியபொழுது "இப் பூலோகத்தில் உன்னத கவிகளென்று பேர்பெற்ற, கவிவாணரெல்லாரிலும் சிறந்த தற்கால ஓர் நிபுணர் எழுதியது இப் புஸ்தகம்" என்று கூவிச் சென்றானும். ஒரு சத்திரத்தில், இப்படி விலைகூவிய பொழுது, அங்கே இருந்த சிலர், "ஆகா, இவர் அவ்வளவு உயர்ந்த கவியா?" என்று வாதாடினர்கள். உடனே மோல்ஸ்கின்ஜோ, தான் அது வரை ஜென்மத்திலும் இறங்காத(கிரந்தங்களை மதிப்பிடும்)துறையில் இறங்கினான். அவர்கள் தர்க்கத்தை மூன்று போலீஸ் சேவகர்கள் வந்து முடித்தார்கள்.

ஒரு நாள், லண்டன்மா நகரிலிருந்து எனக்கு ஓர் கடிதம் வந் தது. அங்கிருக்கும் டெய்லி எக்ஸ்பிரஸ் (Daily Express) என்

னும் தினசரியின், பத்திராதிபர், தான் என் புஸ்தகத்தை வாசித்ததாகவும், தன்னிடத்தில் எனக்கு வேலைக்கு அமர இஷ்டமாவென்றும் கேட்டு எழுதியிருந்தார். சம்பளத்தைக் கடித மூலமாய்த் தீர்மானித்துக் கொண்டு, சரி என்று ஒப்புக்கொண்டு, லண்டன்மாநகரம் செல்லப் புறப்பட்டேன். அப்பெரும் பட்டணத்தை யடைந்து பிக்கடில்லித் தெரு வழியாய் நடந்தேன். அங்கே, பாதசாரிகள் செல்லும் மேடையில் ஒருவன் நின்றுகொண்டு என்னை 'ஒரு பென்னி' என்று கெஞ்சினான். இதென்ன, நம்மூரைப் போலத்தானா இப்பட்டணமும்? என்று ஆச்சரியப்பட்டு வழி நடந்தேன். டெய்லி எக்ஸ்பிரஸ் ஆபீசுக்கு முன்னால் வந்தேன். அங்கே, நான் அது வரையில் கண்டிராத தங்கத்தை ஒரே ஆள் மேல் கண்டேன். தங்கச் சரிகையும் தங்கப் பொத்தானும் போட்டு ஜ்வலித்துக்கொண்டு, ஒருவன் வாயிலில் வெகு கம்பீரமாய் நின்றதைப் பார்த்து, "ஓகோ இவர்தான் பத்திராதிபர்!" என்று யூகித்து, அவரிடம் சென்றேன். அவர் என்னை உள்ளே விட ஆலோசித்தார். பத்திராதிபர் கையெழுத்துள்ள கடிதத்தைக் காட்டினேன் அடையாளமாக. உடனே, உள்ளே அழைத்துச் சென்று, ஒரு அறையில் காத்திருக்கும்படி சொல்லி, மறைந்தார். பிறகு தெரியவந்தது, தங்கப் பூச்சுள்ளவர், வாயில் காக்கும் சேவகர் என்று.

நான் காத்திருந்த அறையில் சுமார் ஏழெட்டுப்பேர் உட்கார்ந்து கடகடவென்று பேசிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களிலொருவன், "நான் இன்றுகாலை, எட்டுக் கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பினேன்" என்று டமாரமிட்டான். "ஐயையோ! இதென்ன, கிணறு வெட்டப்பூதம் கிளம்புகிறதே? பெரிய இடத்தில் வந்து அகப்பட்டுக்கொண்டோமே! எட்டுக் கட்டுரை ஒரு நாளையில் எழுதுகிறவருக்கு நான் எந்த மூலை. ஒரு மாசத்தில்கூட ஒரு கட்டுரை எழுதிமுடிப்பது எனக்குக் கஷ்டசாத்தியமாயிருக்குமே" என்று திகைத்தேன். பத்திரிகை பாஷையில் "கட்டுரை" (article) என்றால் என்ன என்று, எனக்குப் பிறகு தெரியவந்தது. "அரசாங்கத்தார் பெண்களுக்கு ஓட்டுகள் கொடுக்கும் சுதந்தரம் கொடுத்தார்கள்" என்று ஒரு சிறிய பகுதி பத்திரிகைக்கு அனுப்பினால், அது ஒருகட்டுரை. 'பாராளுமன்றத்தார் ஏதோ ஒரு சட்டம் ஏற்படுத்தினார்' என்று, குறித்தனுப்பினால், அதுவும் ஒரு கட்டுரை.

கொஞ்ச நேரத்தில் நான் பத்திராதிபரிடம் செல்லுமாறு அழைக்கப்பட்டேன். பத்திராதிபருடைய அறையில் மூன்று பெண்

கள்—மிகவும் அழகிகள்:—டைப்பு (Type) அடித்துக்கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டவுடனே, ஏதோ அவர்கள் கூச்சப்பட்டது போல் தோன்றிற்று. பத்திராதிபர், என்னை அவர் அருகில் அழைத்து, ஏற இறங்கப் பார்த்து, பேச்சுத் தடுமாறி, தான் இன்னது சொல்வது என்று தெரியாமல், அவஸ்தைப்பட்டார். அதைப் பார்த்ததும், நானும், ஒன்றும் தோன்றாமல் விழித்துக்கொண்டும், அந்தக் கன்னிகைகள் புன்னகை புரிவதைக் கண்டு நாணி, முகஞ் சிவந்து, தலைகுனிந்து கொண்டும் நின்றேன். உடனே, அப்பத்திராதிபர், நான் படும் அவஸ்தையைப் பார்த்துவிட்டு, அந்தப் பெண்களைக் கொஞ்சம் வெளியே போகும்படிக் கேட்டுக்கொண்டார்.

இவ்வளவு விபரீத சம்பவங்களுக்கும் அசந்தர்ப்பங்களுக்கும், மூலகாரணம், என் நாட்டுப்புற உடையும். முக்கியமாகக் கறுப்பு வெள்ளைக் கொட்டடி போட்ட பளிச்சென்றிருந்த என் தொப்பியும் என்று, எனக்குப் பின்னால் தெரியவந்தது. இத்தனைக்கும், நான் லண்டனுக்குப் புறப்பட்டு வருவதற்குமுன், செவ்வனே உடுத்திப் போய், மோல் ஸ்கின்னேரவிடம் காட்டினேன். என்னைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, அவன், "தம்பி, உன் உடுப்பு உன்மேல் ஒரு கொப்புளம்போல் சேர்ந்திருக்கிறது" என்று உறுதிப் பத்திரம் கொடுத்தான்! ஒரு மாதச் சம்பளம் முன்னால் கொடுத்து உடை மாற்றச் சொன்னார் என் புதிய எஜமானர்.

அன்று முதல் என் சுதந்திரம் இழந்து, நான் டெய்லிஎக்ஸ்பிரஸ் ஆனேன், 'நான்' என்னும் சுதந்திரம் முற்றிலும் போய் விட்டது. வேலையிலமர்ந்த மறுநாளே, நான் ஒரு கட்டுரை எழுத நேர்ந்தது. பத்திராதிபர், புருஷர்களணியும் மேல் ஜோடுகளில், வெகு சமீப காலத்தில் புதிதாய்க் கிளம்பிய தினுசுகள் 'அல்லது மோஸ்தரைப் பற்றி ஒரு வியாசம் எழுது" என்று கட்டளையிட்டார். "ஐயையோ, இதென்ன குருடனை இராஜ விழி விழி யென்றால் எப்படி? நேற்றுவரை கஞ்சிக்கு காற்றாய்ப் பறந்த நான், கண்ணிய புருஷா மேல் ஜோடுகளின் புதிய மோஸ்தரை எப்படி அறிவேன். நானென்னமோ, மேல்ஜோடு சிலசமயம் அணிந்திருந்ததுண்டு. ஆனால் அவைகள் வண்ணான் துறையைச்சேர்ந்தனவல்லவோ? மோல்ஸ்கின் ஜோ வாஸ்தவர்தான் ஒரு நடவை ஒரு ஜோடி மேல்ஜோடு வாங்கினான். அவை பெண்களணியும் மேல்ஜோடு. அதை அவன் மப்ளராய் கட்டிக்கொண்டு பெருமையுடன் நடப்பான்,

“என் செய்வது ! பிழைப்புக்கு ஏதாவது எழுதித் தீரவேண்டுமே” என்று, அன்று சாயங்காலம், பிக்காடில்லிக்குப்போய், தூர நின்றும், அருகில் சென்றும், அங்கு செல்லும் புருஷர்கள் தம் கால்களில் அணிந்திருக்கும் மேல்ஜோடு நிஜுசுகளைக் கவனித்து, மனப்பாடம் பண்ணினேன்.

இவ்வண்ணம் என் வியாசம் எழுதி முடிந்தது. “தம்பிடிக்குப் பிரயோஜனமில்லை” என்று தள்ளுபடியாயிற்று.

என் எஜமானர், எனக்கு ஏதாவது பெரும் உதவி கிடைக்கக் கூடுமென்று கருதி, என்னைச் சிபார்சுசெய்து, பேர்பெற்ற மேதாவியான பெர்நார்ட்ஷாவிடம் (George Bernard Shaw) அனுப்பினர்.

அம்மகான் எனக்கு பேட்டி கொடுத்து, என் சரித்திரத்தை வெகு உருக்கத்துடன் கேட்டு, “ஏனப்பா, போக்கியமான கைப்பிழைப்பை விட்டுவிட்டு, கேவலம், இவ்வெழுத்து வேலையிலமர்ந்தாய் ?” என்றார். “பல தொழிலுமிருக்கக் கல்வி அதிகமென்றே படித்துவிட்டோம். அறிவில்லாமல்” என்று மனங்கசந்தார் போலும்.

1914-ம் வருஷத்தில் ஐரோப்பிய மகாயுத்தம் ஆரம்பித்த பொழுது, நானும் போர்க்களம் சென்றேன். உடனே காயமடைந்தேன். திரும்பிவர நேரிட்டது.

முடிவு?

—(:)—

## முகஸ்துதி

(ஒரு பிராமண ஸ்திரீ, சென்னை.)

முகஸ்துதி யாவதென்ன? குரூபத்தை சௌந்தரியமே உருவெடுத்ததென்றும், மூடத்தனத்தை அதிசயிக்கத்தக்க புத்தி என்றும், இன்னும் இவை போன்ற ஒன்றுக்கொன்று நேர்விரோதமான குணங்களை ஆரோபித்து ஒருவரை அவர் முன்னிலையில் புகழ்வதாம். அது இப்படிப்பட்ட பெரும் பொய்களிலொன்றில்லாவிடினும், நம்

முன், நாம் செய்த சிறு நற்காரியத்தை மிகப்பெரிதாயும், நமக்கிருக்கப்பட்ட சொற்ப நற்குணங்களை பெருங் குணங்களாகவும், நம்முடைய அற்ப அழகையும் அழகின் வடிவே என்பதாகவுமுள்ள ஸ்துதி வசனங்களைக் கூறுவதேயாம். ஆயினும், அவ்விதம் கூறினால், முகஸ்துதி என்பதற்கு ஒன்றை அதிகப்படுத்திச் சொல்லல் என்றல்லவா அர்த்தமாகின்றது! அது எதுவாயினும், ஒருவரை முகத்திற்கு நேர் ஸ்தோத்திரம் செய்வதென்றால், அவரை உயர்வாகச் சொல்வதை விடுத்து வேறு கூற முடியுமோ! நீ செய்தது பெருபகாரம் தான். ஆயினும் இதை விடப் பெருங்காரியங்கள் உலகிலிருக்கின்றன'' என்றுவது ''வேறொருவன் இதனிலும் மேலான நன்மைகள் செய்திருக்கிறான்'' என்றுவது கூறினால், அது எவ்விதம் புகழ்ச்சியாகும்? கேட்பவருக்கும் அது சந்தோஷத்தைக் கொடாதல்லவா? புகழ்வதின் காரணமே நாம் ஒருவரைத் திருப்தி செய்வதன் பொருட்டாகையால், அவர் மனம் எங்ஙனம் களிப்பெய்துமோ, அவ்விதம் தான் கூறவேண்டிவரும். நம் மனசாக்ஷியே நாம் சொல்லுவது பொய்யென உறுத்திய போதிலும், வேண்டுமென்று முகஸ்துதி செய்யும்பொழுது நாம் அதைச் சற்றும் பாராட்டமுடியாது. நம் ஸ்துதிக்குச் சிறிதும் பாத்திரமல்லாதவனையும் நாம வாய் கூசாமல் புகழத்தான் வேண்டியிருக்கும். இக்காரணங்கள் கொண்டேதான் முகத்திற்கு நேர் கொண்டாடுவதை இழிவாகக் கூறுகின்றார்கள் போலும்!

ஆயினும், ஒருவரை மகிழ்விக்கும் சொற்கள் எவ்விதம் இழிவாக முடியும்? மனம்நோக உரைப்பதைவிட இன்சொற்கள் பதின்மடங்கு மேலானதன்றோ? எனச் சந்தேகம் கொள்ளலாம்;

''கடுகடுத்தாயிரம செய்குவதிலின்சொலாற் களி கொண்டழைத்தல்நன்று'' என்றும் ''இன்சொல்லாலன்றி இருநீர் வியனுலகம வன் சொல்லாலென்று மகிழாதே'' என்றும், எத்தனையோ செய்யுட்கள் இன்னுரைகளை சிலாகித்துக் கூறுகின்றனர். ஒருவரை அன்பாக இனிய வார்த்தைகள் கொண்டு பகருவதற்கும், அவரையே அவருக்கிருப்பதும இராததுமான குணங்களை யேற்றிப் புகழுவதற்கும், இரவுக்கும் பகலுக்குமுள்ள பேதமன்றோ காண்கின்றது! பொய்யும் மெய்யும கலந்து உயர்த்திப் பேசுவதால் பிறரை, அவர்களுக் கில்லாததை இருப்பதாக எண்ணி மோசம் போகச் செய்வதிலும், இன்னுரைகளினால் நமக்கிட்டம் அன்பில்லாதவர்களையும் அன்பு பாராட்டச் செய்வது எவ்வளவு மேலானது! பிறரை மனவருத்தத்திற்குள்

ளாக்காமல் அவர்கள் குறைவுகளை எடுத்துக்காட்டி அதனால் அவைகளை நீக்கிக் கொள்ளும்படிச் செய்யும் திறமை வாய்ந்தது இன்சொல்லன்றோ! மூர்க்கத்தனமுள்ள குழந்தையையும் அடித்துவைது உபத்திரவிப்பதை விட மிருதுவான வார்த்தைகளினால் அதன் பிடிவாதத்தை மாற்ற முடிகிறது. இவ்விதம் பலவிதத்திலும் உயர்ந்த இன்சொல்லும், கேவலம் பிரதிப்ரயோஜனத்தை எதிர்பார்த்துச் செய்யும் முகஸ்துதியும் எவ்விதம் ஒன்றாகமுடியும்? இதனால்தான் படித்தவர்களும், திடமான மனசாக்ஷியுள்ளவர்களும் முகத்துக்கு நேரில் புகழுவதற்குக் கூசுகிறார்கள் போலும்!

முகஸ்துதி செய்யாமல் உலகில் அநேகர் இருப்பார்கள். இருக்கிறார்கள் என்றும் நிச்சயமாய்க் கூறலாம். ஆயினும், அம்முகஸ்துதியின்பால் மயங்காதவர் மட்டும் இவ்வுலகில காண்பது அரிதினும் அரிதே. எவ்விதம் சர்வ வல்லமையுள்ள கடவுள் முன்னிலையில் சகல ஜீவராசிகளும் விதவியாசமன்றி ஆகுகிறார்களோ; அவ்விதமே தான் இப்புகழ்ச்சி யிடத்திலும, அதற்குப் பணக்காரனென்றும் ஏழையென்றும், மிகுந்த புத்திமானென்றும, சர்வமுட்டாளென்றும் விதவியாசமானது கொஞ்சமும் கிடையாது. தன் பெருமையை பிறர் உரைக்கக் கேட்கும்பொழுது யாவரும் ஒரேவிதமான உணர்ச்சியையடைந்து தங்கள் பகுத்தறியும் சக்தியையும் கை விடுகிறார்கள். என்னதான் கண்ணாடியானது நம் விருப்பத்தை வெளிப்படையாகக் காண்பித்திருப்பினும்,ஒருவர் நம்மைபப்புகழும்பொருட்டு "உன் முகத்தில் நல்லகளை" என்று சொல்லிவிட்டால்,அந்நிமிஷத்திலாயினும் நம் ஹிருதயம் ஆநந்தியாமலிராது. இதுமட்டுமல்ல. நம்மைப்புகழ்ந்து கொண்டாடுபவன் புத்தியற்றவன். அவன் ஸ்தோத்திரத்தால் நமக்கு எள்ளளவு பெருமையும் ஏற்படாது, என்று நாம மறக்கப் பார்க்கினும், நம்மைச் சநதோஷிக்கச செய்வதில் அது கொஞ்சமும் பின் வாங்காது. புகழ்ச்சியைக் கேட்டு மயங்காத திடசித்தத்தையே நாம் பெற்றிருநதாலும் கூட, அம்முகஸ்துதிக்காரர்களிடம் அன்பாகவேனும், மரியாதையாகவேனும நடந்துகொள்ளத்தான் தோன்றும். இதுதான் புகழ்ச்சியை விரும்பாதவர் அனுபவிக்கும் விதமென்றால், கேவலம் தற்பெருமையும மூடத்தனமும் வாய்நத ஜனங்களாவெனில், நாம் சொல்லவும் வேண்டுமோ!

முகஸ்துதியைப் பற்றி ஒரு சிறுகதையுண்டு. பலஆண்டுகளுக்கு முன் ஓரரசன் முகஸ்துதியை மிகவும் வெறுத்து, தன்முன்பு அதைச் செய்பவர்களையும் கடும தண்டனைக்குள்ளாக்கி வந்தான். இப்படியிரு

க்கும் நாளில் ஒருவித்வான் அவ்வூர் வந்து இச்செய்தியைக் கேள்விப் பட்டு முகஸ்துதி செய்தே அரசனிடம் பரிசுபெறுவதெனத் தீர் மானித்து ராஜசபை வந்துசேர்ந்தான். மன்னன் அவனை யாது வேண்டுமென வினவ, அதற்கு அம்மகா சாதுர்யம் படைத்த வித் வானும், "அரசே, நான் மிகுந்த எளியவன். எனக்கு வித்வத்துவம் கிடையாது. எங்காவது ராஜசபை சென்று துதி செய்து பிழைக்கலா மென்றாலோ, அதற்கும் எனக்குச் சக்திகுறைவு. ஆகையால், எங்கு சென்றும் எனக்குச் செருப்படியைத் தவிர வேறு கிடைக்க வில்லை. கடைசியாக மனம் நொந்து இங்கு வந்த பொழுது, முகஸ்துதி செய் பவனைக் கண்ணாலும் பார்ப்பதில்லையென்னும் தங்கள் வைராக் கியத்தின் பெருமையைச் செவியுற்று ஏதாவது திரவிய சகாயம் பெ றலாமென்று இங்கு வந்து சேர்ந்தேன்" என்றான். உடனே அரசன் மனமகிழ்ந்து ஏராளமான தனத்தைக்கொடுத்து அவனை அனுப்பினான்.

முகஸ்துதியில் மயங்குவதற்கு இதையும்விட மேலான அத்தா ட்சியும் வேண்டுமோ?

---

# கம்ப ராமாயண இன் கவித் திரட்டு.

ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C., வெள்ளக்கால்.

(363-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

32. தழைத்த பொன்முலைத் தடங்கடர் தருவிபோய்த் தாழப்
புழைத்த போல,நீர், நிரந்தரம் பொழிகின்ற பொலிவால்,
இழைக்கும் நுண்ணிய மருங்குலாள் இணைநெடுங்கண்கள்
'மழைக்கண்' என்பது காரணக் குறியென வகுத்தாள்.

இ. ள். கண்ணீர் அருவியாகி முலைமலை (மேல் வீழ்ந்து) தாண்டி (க் கடலிலே) போய் விழும்படி, சிதை கண்கள் பொத்தலுடையன போல(க் கண்ணீரை) இடைவிடாமற் பொழிகின்ற மிகுதியினால், இவள், (தன் கண்கள்) 'மழைக்கண்ணை' என்று கூறப்படுவது கார ணப் பெயரென்று (அப்பெயர் வந்த) வகை தெரிவித்தாள்.

தழைத்த—(ஒளி)தழைத்த பொன், பொன் நிறமுடைய தேமலைக் குறித்தது. தடம்—மலை. புழை—துவாரம். புழைத்த—துவாரமுடையன. நிரந்தரம்—எப்போதும். பொலிவு—மிகுதி. இழை—நூல் இழைக்கும் நுண்ணிய—நூலைக்காட்டிலும் சிறந்த. மருங்கும்—இடை. இணை நெடும் கண்கள்—(வேறு உபமானங்கள் ஒவ்வாதனவாய் ஒன்றுக்கொன்று) உவமானமான நீண்ட கண்கள் மழை—மேகம்; குளிர்ச்சி. காரணக் குறி—காரணப் பெயர். வகுத்தல்—வகை சொல்லல்.

(3-ம் அடி) கண்கள் (2-ம் அடி) நீர் (கண்ணீர்) (1-ம் அடி) அருவி (யாகம்) போய்த்தாழும் (2-ம் அடி) பொழிகின்ற எனக் கூட்டுக.

"மழைபோலக் குளிர்ந்திருத்தலால் மகளிரிற் சேர்ந்த சீதாபிராட்டியின் கண்கட்கும் வந்த மழைக்கணென்ற பெயர்க்குக் கண்ணீர் மழை பொழிவதனால் வந்த பெயரென்று வேறொருவகையாகக் காரணங்காட்டியது, பிறிதினிலை நவிற்சி அணி யாகும்; ஒரு காரணத்தால் வந்த பெயர்க்கு வேறொரு காரணம் பொருள் கற்பித்துக்கூறுவது இதன் இலக்கணம்."

அடுத்தபாட்டில் 'கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்' என்பதுபற்றி இப்பாட்டில் முதலடிக்கும் பொருள் கூறுங்கால் 'தாழ்' முன் 'கடல்' வருவிக்கப்பட்டது.

33. அரிய மஞ்சினோ டஞ்சனம் முதல்இவை அதிகம்
கரிய காண்டலும் கண்ணினீர் கடல்புகக் கலுழ்வாள்,
உரிய காதலின் ஒருவரோ டொருவரை உலகில்
பிரிவெ னும்துயர் உருவுகொண் டால்அன பிணியாள்,

இ-ள். மேகமும் மையும் (ஆகிய) இவை முதலான மிகுதியாகக் கருமையுடைய பொருள்களைக் கண்ட மாத்திரத்தில் (அந்த நிறமுடைய இராமன் நினைவு வர, அதனோடு அவன் பிரிவின் நினைவும் கூடவர, வருந்திக்) கண்ணீர் கடலிற் பிரவேசிக்கும்படி (மிகுதியாக) அழுபவளாகிய சீதை, (காதலர் ஒருவர்பால் ஒருவர் வைத்தற்கு) உரிய காதலையுடைய (தலைவனும் தலைவியுமாகிய இருவர்) ஒருவரை ஒருவர் பிரிதலாகிய துன்பமே வடிவெடுத்தாற்போன்ற துன்பமுடையவளாயிருந்தாள்.

மஞ்சு—மேகம். அதிகம் கரிய—அதிகமாகக் கருமையுடையன (ஆகிய பொருள்கள்). காண்டலும்—கண்டவுடனே. காதலின்—காதலையுடைய பிணி—(பிரிவாற்றாமைத் துன்பம்).

"சீதாபிராட்டி தன்னைக் கண்டவர் 'இவள் பிரிவுத்துயர் கொண்டு வருந்துகின்றாள்' என்று உணருமாறு தோன்றுகின்றாளென்பது பின்னிரண்டடியின் கருத்து" கவி இவ் இரண்டடிகளில் பெரியமலை சிறிய கண்ணாடி தோன்று

தல்போலமிக விரிவான கருத்தைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் புலப்படச் செய்திருத்தல் பாராட்டத்தக்கது.

இராமன் காட்டிற்குப் புறப்படும்போது சீதையைநோக்கி 'நீ வீட்டில் இரு, உன் மெல்லிய பாதம் பாலைவனச் சூட்டை பொறுக்கமாட்டா" என்ற போது அவள் 'நின் பிரிவினும் சுடு மோபெருங் காடென்றாள்' என்றது இங்கே நினைவு கூறத்தகக்து.

பிரிவாகிய அருவப் பொருளின் தன்மையைக் காடு சீதையாகிய உருவப் பொருள்களின் தன்மையோடு வியப்பும் நயப்பும் தோன்ற உவமித்திருக்கும் கவிசாதுரியம் கருத்துட் பதித்துக் களிக்கத் தக்கது.

34. துப்பி னுற்செய்த கையொடு கால்பெற்ற துளிமஞ்
சொப்பி னான்தனை நினைதொறும் நெடும்கண்கள் உகுத்த
அப்பி னல்நனைந் தரும்துயர் உயிர்ப்புடை யாக்கை
வெப்பி னுற்புலர்ந் தொருநிலை உறுதமென் துகிலாள்

இ-ள். பவளத்தினுற் செய்யப்பட்ட கைகளும் கால்களும் பெற்ற (சூல் முதிர்ந்து கறுத்து மழை) துளிக் (கப்போ) கின்ற மேகம் (ஒன்று உண்டானுல், அதனைக் கரிய நிறத்தினல்) ஒத்தவனுகிய இராமனை நினைக்குந்தோறும் (அவன் பிரிவுகருதித் துன்புற்று) நீண்ட கண்கள் சிந்தின நீரினல் நினைதலையுற்றும் அரிய துன்பத்தையும் (அதனுல் உண்டாகிய) பெருமூச்சினையும் உடைய உடம்பின் வெப்பத்தினல் உலர்தலையுற்றும் (நனைந்த சேலையென்று மில்லாமல் காய்ந்தசேலை யென்று மில்லாமல்) ஒருபடியாயில்லாத மெல்லிய சேலையை உடையவளா யிருந்தாள் (சீதை).

துப்பு—பவளம். மஞ்சு—மேகம். ஒப்புதல்—ஒத்தல் (சங்க அகராதி) 'ஒப்பினுன்' என்பதற்கு 'ஒப்பினையுடையான்' என்ற பொருளும் பொருந்தும். உகுத்த—சிந்திய, அப்பு—நீர். உயிர்ப்பு—பெருமூச்சு.

ஈர ஆடை காய்தற்கு வெயிலேயன்றிக் காற்றும் உதவுதல்போலச் சீதையின் கண்ணீரால் நனைந்த சேலை காய்தற்கு அவளுடைய உடல் வெப்பேயன்றிப் பெருமூச்சக் காற்றும் காரணமா யிருந்ததென்று கொள்ள உயிர்ப்பு உடை யாக்கை' யென்றார்.

'கைகொடு' என்ற பாடம் பல அச்சுப் பிரதிகளிற் காணப்படுவது, 'கையொடு' என்ற பாடம் திருவாளூர் திருநகல்வேலிக் கவிராய ஈசுரமூர்த்தியா பிள்ளையவர்கள் ஏட்டுச் சுவடியிலுள்ளது.

35\. கமையி னாள் : திரு முகத்தயல் கதுப்புறக் கவ்விச்
சுமையு டைக்கற்றை நிலத்திடைக் கிடந்தது மதியை
அமைய வாயிற்பெய் துமிழ்கின்ற அயில் எயிற் றரவிற்
குமையு றத்திரண் டொருசடை ஆகிய குழலாள்.

இ. ள். ('அளகபாரம்' என்று சொல்லப்படுதற் கேற்பப்) பாரத்தையுடைய மயிர்த்தொகுதி, முகத்தின் பக்கங்களில் (உள்ள) கன்னங்களை நன்றாகப்பற்றி (மிக்க நீட்சியால்) நிலத்தில் (வீழ்ந்து) படிந்ததாயும், சந்திரனை வாயின் உட்கொண்டு (திரும்ப வெளிப் படக்) கக்குகின்ற (இராகுவென்னுங் கரும்) பாம்புபோல் (இராமன் பிரிவினால் பேணப்படாமல் மயிர்களெல்லாம் சேர்ந்து ஒன்றாய்)த் திரண்டு ஒரு சடையாகியதுமான கூந்தலையுடையாளா யிருந்தாள் (சீதை).

கமை—பொறுமை கமையினாள்—சீதை பொறுமையுடையவள் கதுப்பு—கன்னம் கற்றை—மயிர்த்தொகுதி. சுத்தம்—வெண்மை. அமைய—அடங்க அயில் எயிறு அரவின்—கூர்மையான பற்களையுடைய பாம்புபோல குமையுற—(அழகு அல்லது முக்கிய நிலைமை அழிய. 'கற்றை கதுப்புறக் கவ்வி நிலத்தி டைக் கிடந்த (தும்) அறவிற்றிரணடொரு சடையாகிய (தும் ஆன) குழலாள்' எனக்கூட்டுக.

தன்னை வெட்டுவாரையும் தாங்கும் பூமியைப் பொறுமை யுடையாருக்கு உவமானமாகக் கூறுதல் மரபு. சீதை பூமிதேவியின் அம்சமாயும் பொறுமை மிகுதியுள்ளாளென்பது விளங்க அவளைக் கமையி னாள்' என்றார். முன் மிதிலைக் காட்சிப் படலத்திலும் சீதையை 'உமையுமாளொக்கும்' பாட்டில் 'கமையாள்' என்றது இங்கே நினைவு கூறத்தக்கது.

கூந்தலை 'அளகபாரம்' என்பதுபற்றிக் கூந்தலின் மயிர்த் தொகுதியை 'சுமையுடைக் கற்றை' என்றார். அக்கற்றை இருந்து கொண் டிருந்த சீதையின் உடல் நீளத்திலும் அதிக நீளமாய், நிலத்தில் வியாபித்துக் கிடந்தமை விளங்க, 'நிலத்திடைக் கிடந்த, என்றார். மீண்டும் அக்கற்றை அழகு மிகும்படி பின்னிடப் பட்டுச் சடையா காமல, பேணாமற் புறக்கணித்தமைக் காரணமாக அழுக்குப்பிடித்து அடையாய் உரோமங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து இறுகிச் சடை யானதென்பது குறிக்கக் 'குமையுறத் திரண்டொரு சடையாகிய' என்றார். அச்சடை பின்னப்பெற்றதன் றென்பது குறிக்க 'ஆக்கப் பட்ட' என்னாது 'ஆகிய' என்றதும் கவனிக்கத்தக்கது.

சீதையின் தலைக்குமேல் உள்ள மயிர்ப்பகுதி இராகு வென்னும் கரும்பாம்பின் விரிந்த வட்டமான படத்துக்கும், தலையின்கீழே பின் புறத்தே உள்ள சடையான மயிர்ப்பகுதி அப்பாம்பின் உடலுக்கும், சீதையின் முகம் அப்பாம்பு விழுங்க ஆற்று மீண்டுகக்கப்பட்டுக் கொண்டிருக்கும் முழுமதிக்கும் மிகவும் பொருத்தமாக உவமிக்கப்பட்டிருக்கின்றன. இராகு விழுங்குவது பிறைச் சந்திரனல்லாமல் முகத்துக்கு உவமானமான முழுமதி யென்பதும் இராகுவின் நிறம் கூந்தல் நிறம் போலக் கருமை யென் பதும் பாம்பும் சடையும் நீண்டவைகளாயும் தலையடுத்த பகுதி பருத் துப் பிந்திய பகுதி படிப்படியாகச் சிறுத்தவைகளாயும் இருப்பதும் கொண்டு, உவமான உவமேயப் பொருள்களின் வடிவ ஒற்றுமை வருண ஒற்றுமை மிகுதியைக் கண்டுகொள்க.

இந்த உவமான உவமேயப் பொருள்கள், ஒப்பிட்டு நோக்கப் படுந்தோறும் ஒன்றேடொன்று சிறந்து பொருந்தல் மிகுந்து விளங்கி, உவமை நயம் ஓர்ந்து உணர்ந்து உவக்கும் இயல்பினர் உள் ளத்துள் ஊன்றி நின்று உன்னுந்தோறும் உன்னுந்தோறும் உவகை ஊறி உவட்டெடுக்கச் செய்தலால், சிவஞான முனிவர் அமுதாம் பிகை பிள்ளைத் தமிழில், 'சீர்கொண்ட' என்று தொடங்கும் பாட் டில் "பேர்கொண்ட மேனிலச் சோபான மிசையேறு பேதைமார் முகம் நோக்கி நம் பேரரசு கொள்ளவரு மதிபோலும் இதுவெ னுப் பெரிதும்எக் குற்றவர்கள் கம் கார்கொண்ட பின்னற் கரும்பாந் தள் கண்டுளம் கல்லாது களிகூர்ந்து தண் கலைமதியம் வைகுபொழில் குழ்குளத்தூர்" என்றார்போலும்.

இப்பாட்டுக் கம்பரது கற்பனை வன்மையைக் காட்டும் பாட்டுக்க ளுள் ஒன்றென்பது கூறுமலே விளங்கும்.

36. ஆவி அம்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்;
தூவி அன்னம், மென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்;
தேவு தெண்கடல் அமிழ்துகொண் டனங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே ஒக்கின்ற உருவாள்.

இ. ள். சேலை, உடுக்கப்பட்டிருந்தது, ஒன்றன்றி வேறு (சேலை) ஒன்றையும் அறியாள்; குளியாத உடம்பினை யுடையாள்; மன்மதன் அமிழ்தத்தை (வருணப் பொருளாக)க் கொண்டு சித்திரித்த சித்தி ரம் புகையேறப்பட்டதை ஒத்திருக்கின்ற வடிவுடையாள் (ஆகஇருந் தாள் சீதை).

ஆவி அம் துகில்—புகை அல்லது நீராவி முதலிய ஆவிபோல மெல்லிய சேலை. புனைதல்—அணிதல். தூவி அன்னம்—சிறகுடைய அன்னம் (போன்றவள்). தோய்தல்—குளித்தல், தேவு—தெய்வத்தன்மை. தென் கடல் அமிழ்து—தெளிவான பாற்கடலில் பிறந்த அமிழ்தம். அனங்கவேள்—மன்மதன். ஓவியம்—சித்திரம்.

'இல்லாதவள்' என்பது நன்கு புலப்பட 'அறியாள்' என நயம்பட உரைத்தார்.

முதல் அடி, தரித்திருக்கும் உயிரொன்றே போலத் தரித்திருக்கும் உடையும் ஒன்றேயாயிருந்தது என்ற கருத்தும் உள்ளதாகக் கொள்ளலாம். இக்கருத்துக்கொள்ளுங்கால் 'ஆவி'க்குப் பொருள் 'உயிர்' சீதையும் அன்னமும், முறையே, மாற்றுச் சேலையும் மாற்றுத் தூவியும் இல்லாத தன்மையில் ஒற்றுமையும், நீரில் தோய்மையும் தோய்தலும் உள்ள தன்மையில் வேற்றுமையும் உடைமை இரண்டாம் அடியின் குறிப்புப் பொருளாகக்கொள்ளலாம். இறுதி அடி, இப்படலத்தின் 4-ம்பாட்டில் 'வெயிலி டைத்தந்த விளக்கென ஒளி இலாமெய்யாள்' என்றதையும் 68-ம் பாட்டில் 'மாசுண்ட மணி'யும் 'வெங்கதிர்த் தேசுண்ட திங்களும்' என்றவைகளையும் நினைவுக்குக் கொண்டுவருகின்றது.

சீதை, 'மாய மானின் பின் சென்ற என் நாயகனை இளையவன் கண்டிலன்போலும், கண்டானாயினும், இருவரும் இராவணன் கவர்ந்தமையை அறியார் போலும்; அறிந்தாராயினும், அவன் கடல் நடுவில் உள்ள இலங்கையில் என்னைக் கொண்டுவந்துவைத்திருத்தலைத் தெரியார் போலும்; தெரியாரேல், அவர்கள் என்னை மீட்பதெங்ஙனம் எனறு எண்ணி வருந்தி, வாய்திறந்த புண்ணிலே தீ எரிந்து நுழைந்தாற் போலத் துன்புற்றாள்: இராவணன் என்னைக் கவர்ந்து செல்லும்போது கண்டு எதிர்த்துப் போர்செய்து அக்கொடியவனது வாளால் வெட்டுப்பட்டுக் குற்றுயிரோடு கிடந்த சடாயு இறந்தான்போலும். அவன் இறந்த பின் என் நிலைமையைத் தெரிவிக்க மாட்டுவார் யாருளர், ஒருவருமிலர்; ஆதலால், அவர்கள் என்னை இப்பிறப்பிற் காணுதலியலாது, என்றெண்ணிப் புண்ணில் திரும்பித் திரும்பித் தீ நுழைந்தாற்போல மிகத்தும வருத்தமுற்றாள்; அவர்கள் என்னிருப்பிடத்தை அறிந்தாராயினும் மனிதரைத் தின்னும் அரக்கர் தின்றிருப்பரென்று என்னைத் தேடாது கைவிட்டார்களோ, தாயாரும் தம்பியரும் திரும்பி வந்து அயோத்திக் கழைத்துப் போயினரோ, அப்படியாயின் என்கதி யாதாம் என்றும், 'என் நாயகன்

உண்ணும்போது பரிமாறுதற்கும் விருந்தினர் வந்தபோது உபசரித்தற்கும் என்னையின்றி என் செய்வாரோ, என்றும், வஞ்சனையும் மாயமும்வல்ல அரக்கர் போர் செய்ய வந்தாரோ, அப்போரில் சூது அறியாத என் நாயகனுக்கு யாது நேர்ந்ததோ என்றும் புதியன புதியனவாகத் துன்ப எண்ணங்கள் தோன்ற, 'மற்ற நோய்களுக்கு மருந்துண்டு, யான் உற்ற நோய்க்கு மருந்தில்லை, என்று எவரும் எந்நாளும் அடையாத துன்பத்தை அடைந்து நாவறண்டு மனம் மருண்டு அறிவு சோர்ந்து ஆவி பதைபதைக்க, இப்போது பகல் இப்போது இராத்திரி என்ற வேறுபாடறியாதவளாய், இருந்த இடம் செல்லரிக்க அதைவிட்டு எழாதவளாயிருந்தாள்.

37. மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்,
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்,
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள்.

இ-ள். (தசரதன், இராமனை நோக்கி, 'நீ எனது இராச்சியச்) செல்வப் பதவியை ஏற்றுக் கொள்வாயாக' என்ற சமயத்திலும், (கைகேயி) 'இந்தச் செல்வத்தைக் கைவிட்டுக் (காட்டுக்குச) செல்வாயாக' என்ற சமயத்திலும் சித்திரத்திலே தோன்றும் செந்தாமரை மலர்போல (ப் பொலிவு மிகுதலும் குறைதலுமின்றி) இருந்த இராமன், முகத்தை நினைவு கூர்வாளானாள் (சீதை)

மெய்த்திரு வென்றது, தசரதனது செல்வத்தை நோக்க, மற்ற வேந்தர்களின் செல்வம் பொய்யதமென்னும்படி, அவன செல்வம் சிறந்ததென்பதைக் குறித்தது. அலர்தல்— தோன்றுதல் (பரிபாடல்)

இன்பம் வந்ததென்று இறையளவும் இறுமாந்து விடாமலும் துன்பம் வந்ததென்று சொற்பமும் சோர்ந்து விடாமலும் உள்ள, அரிய துறவிகள்பாலும் அரிதாகக் காணப்படுகின்ற, இராமனது அருமையினும் அருமையான மனநிலைமையை நினைந்து அப்படிப்பட்ட நாயகனைப் பிரிய நேர்ந்ததே யென்று சீதை வருந்தின சொன்பது கருத்து.

[இவ்வாறாக, இராமன் காட்டுக்குப் புறப்படும்போது,—அவனிடத்துக் காணப்பட்ட அருங்குணத்தையும்: அதன் முன்பு,—தன் மணத்துக்குப் பணயமாக வளைக்கும்படி வைத்திருந்த பெருவில்லை முறித்த பேராண்மையையும்; மணவினை நிகழும்போது தன் காலைக்

கையால் எடுத்து அம்மிமீதுவைத்த அருமைச் செய்தியையும்; இருபத்தொரு முறை பூமியைச் சூழ்ந்து சென்று அங்கங்கிருந்த அரசர் குலத்தை அழித்த பரசுராமன் 'வளைக்க வல்லையேல் வளை' யெனக் கொடுத்த வில்லைவளைத்து அவன் அகந்தை அடங்கி ஒடுங்கி வணங்கப் புரிந்த வலிமையையும்: இராமன் காட்டுக்குச் சென்றபின்பு,—]

38. ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பி, நீ
தோழன், மங்கை கொழுந்தி யெனச் சொன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்.

இ. ள். (இராமன் சக்கரவர்த்தி திருமகனுயிருந்தும், அந்த மிக்குயர்ந்த நிலைமையைக் கருதாமல், தன்னோ டொப்பிட்டால், மிக்க) ஏழையாகவுள்ள குகனைநோக்கி 'என்தம்பி உன்தம்பி, நான் உன் தோழன், சீதை உன் கொழுந்தி' என்று (உரிமை பாராட்டிச்) சொன்ன (உயர்ந்த சிநேக குணத்தையும் நினைவுகூர்ந்து மயங்கலானள் (சீதை).

ஆழநீர்க்கங்கை—ஆழமான நீரையுடைய கங்கையாறு. அம்பி—தோணி. கடாவுதல்—செலுத்துதல் எம்பி—என் தம்பி. வாழி அசை.

அரசரெல்லாரையும் வென்ற பரசுராமனைத் தன் ஆண்மையினுல் பெருமையறச் செய்தவனே, தன் கேண்மையினுல், எளிய குகனைப் பெருமையுறச் செய்தானென்றதனுல், இராமன வன்புடையார்க்கு வன்பும் அன்புடையார்க்கு அன்பும செய்தமை மிக அழகாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இராமன், குகனிடத்துத் தனக்கு அன்பு அதிகப்பட்ட முறையே இயல்பாகவும் படிபடியாகவும் அவனை உரிமைப் பாட்டில் உயர்த்துவானுய், அவனை நோக்கி 'என் தம்பி உன் தம்பி, நான் உன் தோழன்' என்று கூறி, அமமட்டில் அமையாமல், மிகக் கிட்டின உறவினனை நோக்கிக் கூறுமாறு 'என் மனைவி உன் கொழுந்தி' என்றுரைன்று இராமன் நட்புரிமை பாராட்டுந் திறத்தில் ஒப்புயர்வில்லாதவனென்பதை விளக்கிய நயம் மிகச் சிறந்தது.

"ஆழி நண்பினை உன்னி அழுங்குவாள்' என்னும் பாடத்துக்கு கடல் போலும் பெரிய நட்பை நினைதது வருந்தத் தலைப்பட்டாளென்று உரைக்க"

[மேற்கூறியவாறு சீதை வருந்திக் கொண்டிருக்கும்போது, நடு ராத்திரி ஆக, அவளைச் சூழ்ந்து காவல் செய்த அரக்கிய ரனைவரும் உறக்கமுற்றனர்: அப்போது, சீதை, திரிசடையை நோக்கி "நீ ஒருத்தியே நல்லவள். என் தோழியாவாய். எனக்கு இடப் பக்கத்துள்ள கண் முதலிய உறுப்புகள் துடிக்கின்றன. இவைகள் இவ்வாறே என் கல்யாணத்துக்குமுன்னும் துடித்தன. இதனால் எனக்கு யாது நேருமென்று நீ ஆராய்ந்து சொல்வாயாக" என்றாள். திரிசடை "இக்குறி நீ உன் நாயகனை அடையும் குறி. ஒரு பொன்னிறவண்டு உன் காதில் ஊதிப்போனது. அது உன் நாயகன் தூதுவன் வரப்போவதை உணர்த்தியதாம். பல துன்னிமித்தங்கள் தோன்றுகின்றன. இவை இராவணனும் இராக்கதரும் இறந்தொழிதலைக் குறிப்பனவாம. இப்போது யான்கண்ட கனவைக் கேட்பாயாக. இரண்டு சிங்கங்கள் ஒரு குன்றிலிருந்த பல புலிக் கூட்டங்களைத் திரட்டிக் கூட்டிக்கொண்டு இலங்கைக்கு வந்து இராக்கதர்களைக் கொன்று விட்டுத் திரும்பிச் சென்றன. இங்கு வந்து தங்கியிருந்த மயிலும் கூடச்சென்றது* ஒரு பெண், பல சுடர்த தட்டு விளக்கு ஒன்றை ஏந்தி இராவணன் மாளிகையினின்று புறப்பட்டுச் சென்று விபீடணன் மாளிகையுட் புகுந்தாள்.† அப்படிப் புகுநத சமயத்தில் நீ என்னைத் துயிலெழுப்பினை" எனச், சீதை "நீ திரும்பவும் தூங்கிக் கனவைக் குறையும் காண் என்றாள்.‡

அப்போது அங்கே அநுமான் வந்தான். கோர விகார குரூபிகளான கொடிய அரக்கிமார்கள் 'பொல்லாத தூக்கம், இராவணன் தூங்காமற் சீதையைக் காவல் செய்யும்படி இட்டிருந்த கட்டளையைக் கடக்கும்படிச் செய்தது' என்று கூறித், தூக்கத்தில் நழுவவிட்ட ஆயுதங்களை எடுத்துக்கொண்டு எழுந்தார்கள். 'இவர்கள் பெண்ணென்று பேர்படைத்துப் பெண் தன்மைக்கு மாறுக ஆயுதம் தாங்கிச் சேனைபோலத் திரண்டிருப்பதன் காரணம் யாது' என்று அநுமான் அவர்கள் இருந்த இடத்தைச் கூர்ந்து நோக்கினன். நோக்கவே, அங்கே, மேகக்கூட்டங்களினுள்ளிருந்து அலைகளைப் பிளந்துகொண்டு வெளிப்படுகின்ற மின்னேபோல, அந்தக்

---

*இது, இராமலக்குமணர்கள் வானர சேனையுடன் வந்து இராக்கதரைக் கொன்று சீதையைச் சிறைமீட்டிச் செல்வதைக் குறித்தது..

† இது பல போகங்களையும் அளிக்கும் இராச்சிய லக்குமிஇராவணனை நீங்கி விபீடணனைச் சேர்வதைச் சுட்டியது.

‡ இது, நாடக நிசழ்ச்சிபோலக் கவிசாதுரியமாகக்கூறியது.

கரிய இராக்கதப் பெண்கூட்டத் துள்ளிருந்து சிதை விளங்கக் கண்டான். கண்டவுடன் 'இப் பெண்மணி, தன் கண்ணீர்த் தடாகத்திடையே அன்னம் போலவும், என் மனக் காரிரும்பை ஈடுபடுமாறு இழுத்துக் கவரும் செங்காந்தம் போலவும் தோன்றுகின்றாள். இவளே சிதை. இராமன் கூறிய இலக்கணங்களெல்லாம் இவளிடத்தில் இருக்கின்றன. இவள் கற்பு ஒரு சிறிதும் கலங்கியதன்று. பஞ்சாக்கினி மத்தியில் நின்று ஐம்புலன்களையும் அடக்கி, உண்ணும் உணவையும் குடிக்கும் நீரையும ஒழித்து, வருந்தி நோற்பவர்களுடைய அருந்தவம், கற்புடைய மாதர் மனத்தவத்தோடு ஒப்பிடத்தக்க சிறப்புடையதாகச் சொல்லவும்படுமோ' என்று களி கூர்ந்து, இராமன் உயிரை இராவணன் ஒருவரும் அறியாமல் ஒளித்து வைத்திருக்கும் விதத்தை என்னென்பேன்! இராமன் உயிராகிய சீதை இலக்குமியே! இராமன் திருமாலே! கற்பினுக் கருங் கலமாகிய சிதைக்குத் தந்தையாகப் பெற்ற சனகனைப் புகழ்வேனே! கணவனாகப்பெற்ற இராமனைப் புகழ்வேனே! அடிமையாகப் பெற்ற என்னைப் புகழ்வேனே! யாரைப் புகழ்வேன்! உலகத்திலே சிதை பிறந்ததனால், பெண்பிறப்பும் பெண்களுக்குரிய நாணம் முதலிய நற்குணங்களும் மிக்க சிறப்பை அடைந்தன. இவள் இவ்வாறு கற்பினைக் காத்திருக்கும் காட்சியை கண்ணாரக் காணும் பாக்கியத்தை இராமன் பெற்றிலனே, என்று அநுமான் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, அந்த அசோகவனத்திலே, இராவணன் தோன்றுவானாயினன்.

காட்சிப் படலம் முடிந்தது.

---

## சர்க்கா வழிபாடு.

### இராட்டினத்தால் சுயராஜ்யம் கிடைக்குமா ?

'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையில் டாக்டர் ரவீந்திரநாத தாகூர் எழுதிய கட்டுரையின் சாராம்சம்.

சர்க்கா விஷயத்தில் நான் உபேக்ஷையாயிருப்பதற்காக, ஆசாரிய பி. ஸி. ரே. என்னைக் கண்டித்து எழுதியிருக்கிறார்; எனினும்,

என்மேல் அவருக்குள்ள பரிவினால், இந்த ஈன ஸ்திதியில் நான் தனித்து நிற்கவில்லை, சிறந்த தேசாபிமானியாகிய ஆசாரிய பிரஜேந்திரநாத ஸீல் இவ்விஷயத்தில் எனக்குத் துணை நிற்கிறார் என்பதை அவரே எடுத்துசசொல்லியிருக்கிறார். இதைக்கேட்டு என் வருத்தம் தீர்ந்துவிட்டது; எல்லா விஷயங்களிலும் நமது அபிப்பிராயம் சிலருக்குப் பிடித்ததாயும், சிலருக்குப் பிடிக்காததாயும் தான் இருக்கும் என்கிற உண்மைக்கு இதுவுமொரு திருஷ்டாந்தமாயிற்று. என்றென்றைக்கும் எல்லாப் பூச்சிகளும் ஒரே விதமாய் நூல் நூற்கும் சிலந்திப் பூச்சியின் மனப்போக்கை ஒத்துக் கடவுள் மனிதர் மனத்தைப் படைக்கவில்லை என்றும், ஜனங்களின் மனப்போக்கை பூரணவொட்டாது தடுத்து அடக்கி ஒரே நிலைக்குக் கொண்டுவர முயலுவது மனுஷ சுபாவத்துக்கு விரோதமான அடாத காரியம் என்றும் இதனால் நன்கு விளங்கும்.

கடவுளின் பராசக்தியின் குணாதிசயங்கள் பலவகைப்பட்டன என்றும், அவையனைத்தும் சிருஷ்டிகாரியத்துக்கு உபகரணங்களாயிருந்தன என்றும் நமது சாஸ்த்ரங்களில் சொல்லி யிருக்கிறது; இந்த தெய்வீக சக்தியை கடவுள் மனிதருக்கு அளித்திருப்பதால் தான் மனிதர் ஜனசமூகங்களிலே நானாவித நாகரீகங்கள் ஏற்பட்டு விளங்குகின்றன.

நவரத்ன மாலையின் அழகைப்போல, மனிதர் வாழ்க்கையில் வேற்றுமை யிடையில் ஒற்றுமை தோன்றிச் சோபிக்கவேண்டுமென்பதே தெய்வ சங்கல்பம; ஆனால் நாமோ, அடிக்கடி, நமது பொது ஜன வாழ்க்கையில், பலனை விரும்பிக் குறுகிய நோக்கம் கொண்டு எல்லாவற்றையும் பொடியாக்கி ஒன்று சேர்க்கவே, நமது மனுஷப் பிரயத்தனத்தால் முயலுகிறோம். இதனால்தான், உலக நாகரீக வாழ்க்கையில்,எத்தனையோ ஜனங்கள் பாடுபட்டு வாழ்பவர்கள், அடிமைக்கோலம் பூண்டு, சுபாவ பேதங்கள் ஒழிந்து, சூத்திர பொம்மைகளை யொத்துக்காலம் கழிப்பதை நாம் காணலாம்; அன்றியும், உலகமெங்கும், மனிதர் ஆண்மையிலே குன்றிச் சீவனற்றுத் தளர்ந்துப்போகும் வரையும், "மலையிலே வளரும் பல பச்சிலைகளையும் பறித்து உரலிலே ஒன்றுசேர்த்து மசிக்கச்செய்யும்" நாகரீக ஏற்பாடுகளை அவர் எதிர்த்துப் போராடுவதையும் நாம் காணலாகும்.

எந்தத் தேசத்திலாவது இந்தப் போர்ச் சின்னங்கள் காணப்படவில்லையென்றால், அந்நாட்டார் பயந்தோ, மனமுவந்தோ, எஜமா

னன் கொரடாவுக்கு அஞ்சியோ, குரு ஆக்கினையைச் சிரமேற்கொண்டோ, மண்மேல் தலை தூக்காது குப்புறக் கிடந்தார் என்றால், அப்பொழுது மரணதசையை அடைந்துவிட்ட அந்த தேசத்தைநினைந்து அழுது புலம்ப ஆரம்பித்துவிடலாம். நம் நாட்டிலோ, மனிதவாழ்க்கையை நிரவி சமதளப் படுத்தும் அனர்த்த காரியம் வெகு காலமாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு சாதியிலும், இன்னாருக்கு இது கடமை என்று வர்ணாசிரம தர்மப்படி ஏற்பட்ட நிபந்தனைகளை தெய்வாக்கினையாகக் கொண்டு முன்னோர் ஒழுக்கத்தைப் பின்னோர் கைப்பற்றும் கிரமம் சிறிது தவறினாலும், அது பாவத்துக்கிடமாகும் என்ற மாயமந்தரத்தால் கட்டுப்பட்டு, ஜனங்கள் வெகுநாளாக சங்கடப்படுகிறார்கள்.

இந்தியாவில் வெகு நாளாக முன் நடந்ததே பின் நிகழும் காட்சியைத் தவிர வேறொன்றுமில்லை.

ஓயாது மாறாது ஒரே விதமாய்ச் சுழலும் இந்தச் சக்கரத்தின் வேதனைக்குட்பட்டு இந்தியா அன்னை உயிர் வாழ்க்கையையே வெறுத்துவிடலாயிற்று.

அவள் வாழ்நாளில் புதுமையற்று, மங்கலமற்று ஒரு நாளைப் போலப் பல நாளும் கழியும் வேதனையைப் பொறுக்க மாட்டாமல், அவள், ஜன்ம ஜன்மத்துக்கும் நீடிக்கவல்ல கர்மத்தைத் தொலைக்க வேண்டி, வாழ்வை வெறுத்து "சிந்தையை அடக்கியே சும்மா இருப்பது" மேல் என்று கொண்டிருக்கிறாள். இப்படித்தங்கள் மனவலியை ஒடுக்கித் தளர்ச்சியடைந்தவர்களுக்கு, வாழ்க்கையில் ஒரு சந்தோஷமும் ஏற்படாது என்பது ஒன்றுமட்டுமில்லை; அவர்களின் சக்திக் குறைவினால், பிறரின் பொல்லாங்கையும் அபகாரச் சூழ்ச்சியையும், அவர்களால் எதிர்த்துத் தடுக்கவும் முடியாது. தொன்று தொட்டு நம் நாட்டார் பிறரால் தாக்குண்டும் மோசம் போயும், தாம நம்பிய குருக்களாலேயே ஏமாறப்பட்டும் கஷ்டபபடுவது கொஞ்சமல்ல,

இவ்விஷயத்தில் கடவுள் செய்கையைப் பற்றி நமது ஜனங்கள் சாதாரணமாய்க் கொண்டிருக்கும் அபிப்பிராயம் உண்மைக்கு நேர் விரோதமானது. மனித வாழ்க்கை, ஓயாது தானே சுற்றும இயந்திரக் கல்லை ஒத்திருக்க வேண்டுமென்பது தெய்வ சங்கற்பம் இல்லை; அப்படி நேரிடாதிருப்பதற்காகவே, கடவுள் அதி நுட்பமான சரு

சலப் பொருளாகிய 'மனது' என்பதொன்றை மனிதனுக்கு அளித்திருக்கிறார். பயங் காட்டியும், ஆசை காட்டியும், மாயமந்திரங்களை ஓதியும், உயர் வகுப்பினர் சிலர் மேற்றோர் மனத்தைப் பிணித்து ஒடுக்கியபின், கைக்கிளவர் நூல் நூற்பதென்றும், குயவர் பானை செய்வதென்றும், வாணியன் செக்காடுவதென்றும், செய்த ஏற்பாடு எளிதில் நிறைவேறிவிட்டது. ஆனால் இப்பொழுதோ, ஏதோ ஒரு பெரிய விஷயத்தை இந்த ஜனங்கள் தம்மனத்தால் கிரகித்து, அறிவுடன் அதில் தலையிட்டுக் கொள்ளவேண்டிய சமயம் நேரிடும்பொழுது, அவர்கள் நிலை கலங்கித் தடுமாறுகிறார்கள்.

இப்படி நமக்கு மனோபலம் குன்றியிருந்தும், இந்த நாளிலே ஆங்காங்கே ஜனங்கள் மனத்தில் நானாவித புதிய எண்ணங்களும், உணர்ச்சிகளும் ஆசைகளும துளிர்த்துக் காண்கின்றன. அந்தக் காட்சிதான் நாம் சுயராஜ்யம் பெறலாம் என்ற ஆசைக்கு ஒரே ஆதாரம்.

ஆகையால், எந்த விஷயத்தைப்பற்றியும் நமது ஜனங்கள் எல்லாரும் ஒத்துப் பாடி ஒரே மந்திரத்தை முணுமுணுக்கவில்லை என்பது விசனிக்கத்தக்கதன்று. இதை நினைத்துத்தான் சர்க்காவழிபாட்டில் என் மனம் ஈடுபடவில்லை என்று சொல்ல நான் நாணவில்லை.

பல ஜனங்களை ஒன்று சேர்த்து அவர்கள் மனத்தை ஒரேபோக்கில் வசித்துத் திருப்பமுயலுவது கடைசியில் கெடுதலாக முடியும் என்பதுதான் எனது தேர்ந்த அபிப்பிராயம். திடீரென்று ஏதோ ஒரு வைராக்கியத்தால் தூண்டப்பட்டு பல ஜனங்களும் ஒன்று சேர்ந்தெழும் கிளர்ச்சியைக் கண்டவுடன் நமக்குமதிமயங்கிவிடுகிறது; அசாத்தியமான காரியங்கள் நிமிஷத்தில கைகூட வல்லனபோலத் தோன்றுகின்றன. ஆனால் உண்மையில், இவ்வித சந்தர்ப்பங்கள், வியாபாரத்தில் கணப்பொழுதில் கோடி லாபம் கிடைக்கும்படி நேரிடும சந்தர்ப்பங்களை யொத்தன. மனுஷ சுபாவம் வைராக்கியத்தைச் சட்டென மறந்துவிடுவது; அதை நம்பி, எவ்வளவுக் கெவ்வளவு நமது ஆசை பொங்கி யெழுந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அது வீணாசையாய்ப் போய்த் தாழ்ந்து படிந்து விட நேரிடும். இது அநுபவ சித்தாந்தம்; சில நாளைக்குமுன் ஹிந்து மகமதிய ஒற்றுமை சட்டெனக் கிடைத்து விடக்கூடியதென்று நாம் கொண்ட குதூகலமும், அதன் பின் நிகழ்ச்சிகளும இதற்கு ஒரு திருஷ்டாந்தமாகும. குறுக்கு வழிகளில ஆசைகொண்ட நமநாட்டார் இராட்டினத்தால் தங்கள் குறை

கள் எல்லாம் தீர்ந்து விடுமென்று நம்பி மோசம் போகலாகாது என்பதே எனது கோரிக்கை.

இன்று நம் நாடு தரித்திர தசை அடைந்திருப்பதின் காரணங்கள் பலவகைப் பட்டன; நமது வாழ்க்கையில் வேரூன்றி யுள்ளன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படியின்றி, வெளிப்படையாகக்காணும் ஏதோ ஒரு குறையை மட்டும் நாம் நிவர்த்திப்பதால், மூதேவி நம்மை விட்டு நீங்கமாட்டாள். ஒரு மனிதன் உயிரற்ற கற்பதுமையா யிருந்தால், அவன் முகத்தில் காணப்படும் ஓர் ஊனத்தைச் சிற்றுளியால் செதுக்கித் திருத்தலாம்; அவனுக்குப் பிராண பலன் குறைந்து கன்னம் ஒட்டியிருந்தால், உள்ளுக்கு மருந்து கொடுக்க வேண்டுமே யொழிய, முகத்தின் வடிவை உளியால் திருத்தி ஒரு நலனும் பெற முடியாதே! மொகலாயர்களும், பட்டாணிகளும் நமது நாட்டைத் தாக்கினபொழுது, ஹிந்துக்களின் அரசாட்சி எங்கும் சிதறுண்டு கீழே விழுந்துவிட்டது. அந்த நாளில் இராட்டினத்தில் நூற்ற நூலுக்குக் குறைவே இல்லையே; அதனால் ஹிந்து அரசாட்சி நிலை பெறமுடியவில்லை. மொகலாய அரசாட்சி ஸ்தாபனமானபின் அவ்வரசர்கள் நம் நாட்டு வரும்படியை நம் நாட்டில்தானே செலவழித்தார்கள்; அந்த நாளில் மரம் நின்ற இடத்தில் பழம் கீழே விழுந்தது. இப்பொழுதோ, நம்மை அரசாள்பவர், ஒருவர் இருவர் இல்லை, ஆயிரக்கணக்கானவர், நமது நாட்டு சொத்தையெல்லாம் பல சமுத்திரங்களுக்கப்பால் வாரிக்கொண்டு போகும்பொழுது, நம்மால் இந்த வெள்ளப்போக்கை அணைகோலித் தடுக்க முடியாததின் காரணம், நம்மிடம் இராட்டின நூல் வேண்டிய அளவு இல்லாததுதான் என்று சொல்வது பொருந்துமா? நூற்குறைவு என்ன செய்யும்? நமது ஜீவசக்திக் குறைவைப் பற்றி, நமது ஒற்றுமைக் குறைவைப்பற்றி என்னவென்று சொல்லுவது? மகமதிய அரசர்களுக்குக் கீழ் நமக்கு சுயராஜ்யம் இல்லாவிட்டாலும், ஊணும் உடையும் நமக்கு வேண்டியதிருந்தது என்று சிலர் சொல்லக்கூடும். ஆற்றில் வெள்ளம் பெருகாதபோது, அங்கங்கே மணலைக் குவித்து அணைகோலி நமக்கு வேண்டியபடி நீரைத் திருப்பிச் சமாளித்துக் கொள்ளலாம், வெள்ளப் பெருக்கெடுத்து எல்லாவற்றையும் வாரிக்கொண்டு போகும்போது அந்த அணைகளால் என்னபிரயோசனம்? பிற நாட்டு வியாபாரத்திற்கும் நமக்கும் ஒரு சம்பந்தமும் வேண்டாமென்று நம்மால் இனிமேல் தனித்திருக்க முடியாது;

அப்படியே முடிந்தாலும் அது நம் நாட்டின் விருத்திக்குப் பெருந்தடையாகும். சித்தப்பிரமை நீங்கி, நாட்டின் செல்வ விருத்திக்காக நாம் எல்லோரும் ஒத்துழைத்து, உலக வியாபாரம் நடைபெறுவதில், நமக்குரிய பொறுப்பை நாம் வகித்தாலொழிய, நம் நாட்டுச் செல்வத்தைப் பிறர் அநுபவிப்பார்கள்; நமக்கு மிகுவது தரித்திரம்தான்.

உடல் வணங்கி நாம் கைப்பாடு பட்டால், அது நமக்கு மனோபலனைக் கொடுக்காது, கைத் தேர்ச்சியினால் மனத்தேர்ச்சி ஏற்படாது என்று சிலர்கேட்கக்கூடும் இது எல்லா வேலைக்கும் பொருந்தாது; கருத்துடன் செய்யும் காரியத்தில் மட்டும்தான் கைப் பழக்கமும் மனப்பழக்கமும்ஒன்றாகும்.நம்நாட்டில் சருவதா பேனாபிடிக்கும் குமஸ்தா வேலையினால் ஒருவருக்கும் மனக்கிளர்ச்சி யுண்டாவதில்லை என்பது உண்மை. யந்தரக் கருவிகளை யொத்து பல ஜனங்கள் சித்த விருத்தியின்றிப் பாடுபட்டு உழலவேண்டி யிருப்பதே நவநாகரீகத்தின் பெருங்குறையாகும். இந்த நிர்ப்பந்தத்திலிருந்து ஜனங்களை விடுவிப்பதே மேனாட்டார் சாஸ்திர ஆராய்ச்சியால் உலகத்துக்கேற்பட்ட பேருதவிகளில் முக்கியமானது. விஷ்ணுவின் சக்திக்கு ஒருசின்னமாக, அவர் சக்ராயுதத்தைக் கையில் ஏந்தியிருக்கிறார் என்று நமது சாஸ்திரங்களில் சொல்லவில்லையா? சக்தி அளப்பரியது. அதைப்பிரயோகப்படுத்தும்கருவிகளில முக்கியமானது சக்கரம்ஒன்று. முதல் முதல் சக்கரத்தின் உபயோகங்கள் கண்டு பிடிக்கப்பட்டவுடன் அதனால் மனித நாகரீகம் எவ்வளவோ முன்னேற்றமடைந்தது. வண்டி சக்கரத்தையும், ராட்டின சக்கரத்தையும், குயவன் சக்கரத்தையும் கொண்டு, கூடியமட்டும், ஜனங்கள் கேவலம் சித்த விருத்தியின்றி சீர்ப்பாடுபடும் சூத்திர ஸ்திதியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முயன்றார்கள். இந்த நாளில், சாஸ்திர ஆராய்ச்சியால், சக்கரத்தின் பிரயோகங்கள் கோடிக்கணக்காகப் பெருகிக்காணும் தறுவாயில, நாம் அவை யெல்லாவற்றையும் திரஸ்கரித்துவிட்டுப் பழைய இராட்டினச்சக்கரத்தையே சுற்றிப் பாடுபட்டால், நமக்கு ஒருநாளும் லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்காதென்பது திண்ணம்.

இராட்டினம் சுற்றுவதொன்றேதான் நம் கடமை என்று எவரும் சொல்லவில்லையே என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். ஆனால் வேறெந்த அத்தியாவசியமான வேலையைப்பற்றியும் எவரும் அதிகமாய்ப் பேசக்காணோம். இராட்டின பிரசாரமோ நாடெங்கும் முழங்குகிறது. கோடிக் கணக்கான ஜனங்கள், சிந்தையிலும்

செய்கையிலும் வேறுபட்டவர்கள் ராட்டினம் சுற்றுவதில் மட்டுமே எல்லாரும் கைகோர்த்து, மனமொத்து ஒற்றுமைப்படக் கூடுமா? உலக சரித்திரத்தில், எல்லா ஜனங்களும் ஒரே தெய்வத்தை ஒரே வழியில் கொண்டாடவில்லை என்ற காரணத்தால் பல யுத்தங்கள் நிகழ்ந்தன; அவற்றால் மத ஒற்றுமை ஏற்படவில்லையே. சர்க்கா தேவி வழிபாட்டால் மட்டும், உண்மையான ஒற்றுமை சட்டென ஏற்பட்டுவிடுமா? அவள் காரியம் அவ்வளவு பெருமையுள்ளதா, அல்லது அற்பமானதா? நான் குழந்தையாயிருந்தபொழுது என் வீட்டில் கோபி என்று ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் பூரிக்கு யாத்திரைபோய் ஜகந்நாத ஸ்வாமியை தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வந்தபின், அதற்கடையாளமாக, எந்தப் பழத்தை ஸ்வாமிக்கு அர்ப்பணம் செய்து தான் விட்டுவிடுவது என்று யோசித்துப் பார்த்தான். கடைசியில், அவனுக்கு ஒரு நாளும் பிடிக்காத தக்காளிப் பழத்தைத் தான் ஸ்வாமி பேரைச் சொல்லி அர்ப்பணம் செய்ய அவனுக்கு மனம் வந்தது. தெய்வத்தின் பெயரையோ, தேசத்தின் பெயரையோ சொல்லி, நமக்கு மதிப்பில்லாத பொருளை நேர்ந்து வைப்பது உண்மையான பக்திக்கு அடையாளமன்று; அதனால் நாம் பெறற்கரிய ஒரு வரத்தைப் பெறமுடியாது. உண்மையான மன ஒற்றுமையின்றி, வெளிக்குமட்டுமே, ஒரு அற்ப விஷயத்தில் மட்டும் நம்மை ஒற்றுமையுடையவர்களாய்க் காட்டும் இராட்டினக் கைங்கரியத்தால் நாம் ஒருநாளும் சுயராஜ்யம் பெற முடியாது.

இந்தியாவில, இந்தியர் எல்லாரும் மதவிஷயத்தில் ஒருமைப்படுவது முடியாது; அரசாங்க விஷயத்தில் ஒன்று சேரலாம் என்ற எண்ணம, தற்காலத்தில்தான், சிலர் மனதில்தான் உதித்திருக்கிறது; இது எல்லார் மனதிலும் வேரூன்றிப் பரவ வெகுநாள் செல்லும்; ஆனால் மற்றொரு விஷயத்தில், நமது நாட்டளவு அகன்ற பெரும் பாட்டொன்றில், நாம் எல்லாரும் ஒத்துழைக்கலாம்; அது அத்தியாவசியமுமானது; அதாவது நம் நாட்டின் செல்வ விருத்தியே. ஏழை, பணக்காரர், படித்தவர், படியாதவர் எல்லாருக்கும் பொதுவான முயற்சி இது; இவ்விஷயத்தில் போட்டியில்லாமல், சுயநலம் பாராட்டாமல், எல்லாரும் ஒத்துழைப்பதால் ஏற்படும் ஒற்றுமை, ஜனங்கள் மனத்திலும் வாழ்க்கையிலும் வேரூன்றிப் பரவித் தழைத்து நீடிக்கவல்லது. இந்த முயற்சி சாமானியமானதல்ல; பல கிளைப்பட்டது; எத்தனையோ இடையூறுகள் நேரக்கூடியது;

ஆனால் இந்த முயற்சியால் நாம் பெற நினைக்கும் சுயராஜ்யவரனும் சாமானியமானதில்லை ; பெறுமான விலை கொடுத்தாலன்றி மலிவாய்ச் சந்தையில் வாங்கக்கூடியதில்லை.

செல்வவிருத்தி ஒத்துழைப்பு சித்தி பெறுவது வெகு கஷ்டமே; எனினும் ஜனங்களின் வயற்றுப் பிழைப்பையும் நாட்டின் விளைவையும் வியாபாரத்தையும் தழுவிய அவ்விஷயம் எல்லாருக்கும் அதி முக்கியமானது. அதனால்தான் உபநிஷத்துக்களில், பிரம்மா தான் ஆதமாவென்றும் பிரமமாதான் புத்தி யென்றும், பிரம்மாதான் 'அன்னம்' என்றும் சொல்லி யிருக்கிறது. அயர்லாந்தில் ஒதத்துழைப்புப் பிரசாரம் நடந்த விதத்தையும் அதனால் ஏறபட்ட நனமைகளையும் பற்றி வாசித்தறிந்த பின், அவர்கள் பிரயத்தனத்தால் நமக்கும் நன்மையுண்டு என்றும், நம் நாட்டிலும் ஜனங்களுக்குள் ஒத்துழைப்பு மூட்டிய தீ பரவுதல்போல் வெகு சீக்கிரமாய்ப் பரவக்கூடுமென்றும் எண்ணி என் மனம் தழைக்கிறது.

இந்தக் கஷ்டங்கள் ஒன்றுமில்லாமல் இராட்டினத்தால் மட்டும் சுயராஜ்யம் கிடைக்கும் எனறுசிலர் சொல்லுகிறார்கள், எப்படி கிடைக்கக்கூடும்? அதன் வழியை விவரமாய் எவரும் எடுத்துச் சொல்லி, நான் கேட்டதில்லை. நமது பழைய நாளை வில்லம்புகளை வைத்துக் கொண்டு, இந்த நாளைத் துப்பாக்கி பிரங்கிகளை எதிர்க்கமுடியாது என்று நான் சொன்னால்; "ஏன் முடியாது?" என்றும் சிலர் கேட்பார் போலிருக்கிறது. இந்தியாகள் எலலாரும் ஒன்று சேர்ந்து காறியுமிழ்ந்தால் அந்த எச்சில் வெள்ளத்தால் இங்குள்ள வெள்ளைக்காரர் எல்லாரையும் மூழ்கடித்து விடலாம் என்ற வழக்கை நானும் கேட்டிருக்கிறேன். அது பலிக்கிற யுக்தியா? அதைப் போன்றதுதான், இராட்டினத்தால் சுயராஜ்யம் பெறலாம் என்ற யுக்தியும.

'சர்க்கா'வால், வீண்பொழுது போக்கும் ஏழைக் குடியானவர்களுக்கு ஒரு ஜீவனோபாய மார்க்கம் ஏற்படுமென்றும், அப்படி வரும் நன்மைகளை உத்தேசித்து எல்லாரும சர்க்காவை உயாத்திக்கொண்டாட வேண்டுமென்றும் ஒருவர் சொல்லுகிறார். வடித்த கஞ்சியில் போஷண பதார்த்தங்கள் உண்டென்றும், அதை வீண்போக்காதிருப்பதால் நமக்குள்ள உணவுப்பொருள் அதிகமாகும் என்பதும் மெய்யே. அதற்காக சுயராஜ்யக் கட்சியார் எல்லாரும் பொங்கல் சோறு உண்பதை ஒரு முக்கிய நிபந்தனையாகக் கொளளுவது பொருந்துமா? துரும்பைத் தூணாக்கி நமது கண்ணை நாமே மறைத்துக் கொள்ளுவதால் சுயராஜ்யம் கிடைத்து விடுமா?

இராட்டின பிரசாரத்தில் எல்லாரும் ஒன்று சேருவதே ஒத்துழைப்புக்கு சமமாகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். பெருங்கழனி பாழாய்க் கிடைக்க, ஒரு மூலையில் சிறிது பாடுபட்டுவிட்டு, வயல் முழுதும அறுப்பு அறுக்கலாம் என்று நினைப்பது பொருந்துமா? இழிச் சாதியார் அழுக்குடல்களுடன் வந்து தொட்டு கிணற்றுநீரை அசுத்தப் படுத்தக்கூடாது என்று நமக்குள் கட்டுப்பாடு இருப்பதால், அது நன்னுயிர் சாஸ்திரத்துக்கு சமமானது என்று சொல்லிவிட முடியுமா? இராட்டினம் சுற்றுவது செல்வவிருத்தி ஒத்துழைப்புக்கு சமமாகாது; இராட்டினம் நூல்தான் நூற்கும்; நம்மைச் சூழும் அந்த காரத்தினின்றும் விடுவிக்க அதற்கு சக்தி கிடையாது.

மகாத்மா காந்தியும் நானும் இவ்விஷயத்தில் ஏகோபிக்க முடியவில்லையே என்பது எனக்கு அதிவருத்தமே; ஆனால் இந்த இராட்டின வழிபாடு என் புத்திக்கும் மனச்சாட்சிக்கும் ஏற்காததாயிருக்கிறது. அவரவர் தம்மன சாட்சிக்கு ஒத்தபடியே நடக்கவேண்டும் என்ற கொள்கையுள்ள மகாத்மாவும், மற்றவர்களும், அதற்காக என்னை க்ஷமித்து விடுவார்கள்.

என் நாட்டாராகிய பொது ஜனங்களோ, இன்று கொண்ட கோபத்தை நாளை மறந்து விடுவார்கள். அப்படி நேராவிடினும், என் விஷயத்தில் அவர்கள் வசை நீடித்து நிற்பினும், இன்று எனக்கு ஆசாரிய வசீல் துணையிருப்பதுபோல, காலக்கிரமத்தில் பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாய்த் தேசத்திற்குச் சிறந்த தொண்டு செய்த உத்தமர்கள் என்னுடன் வந்து சேர்தலுமகூடும்.

# தனிப்பாடற்றிரட்டு

## (பழைய எட்டுச்சுவடி)

(416-ம பக்கத்தின் தொடர்ச்சி).

சீரங்கம், உம்தகைப்; விழி, வைகுந்தம்;
    திருப்பதி, நும்திருவதனம்; தேசததோர்கள்
ஆருங்கும்பிடும் அனந்தசயனம், அல்குல்;
    அத்தகிரி, சிதாதனம்; ஆகைடாலே,

டார் எங்கும் உமைப்பணிய முறைமை, நீர் இப்
பதிதோறும் உழன்றதனால் பலன் வேறுண்டோ?
வாரம்கொள் புகழ்ச்சடையன், அடையார் சிங்கர்,
வாந்திகழும் இருந்தைநகர் வரும்கொற்றீரே (11)

நிலத்தரசா! தமிழ் நாட்டில் மூவரசர் ஒடுங்
கியபின் நிமலா (!) வெள்ளிக்
குலத்தரசா! நினை அன்றித் தமிழ் அருமைதனை
அறிந்து கொடு பாருண்டோ?
வலத்தரசர் தென் இலங்கை வடகடல்மேல்
கோதண்டம் வாங்குங்காலைச்
சலத்தரசன் வணங்குநல்லூர்ச் சிதம்பர
நாதா! அரசர் தம்பிரானே. (12).

இன்பூத்தோர் செலுத்துகின்ற டாகைஇசையும் பிரமன்
இடத்தே தோன்றி
மன்பூத்ததமிழ் ''வளத்துவபுலவர்நாய நிதறிவு''
வாய்த்தலாலே,
பொன்பூத்த அருவிமலை அத்தனே! முத்தன் என
'ப லவாணு
றென்பூததான் ற சூழவந்தான், உயரவந்தான்
இவன் எனயாம் செப்புவோமே. (13)

''மூடம், சால் கை குலைமந்தவரைப் புழிக்கும் காலம்,
மூலை வொடுத்த மாதாவை முடிக்கும் காலம்,
மடம் கோவில் ''அடா'' நடத்தாக் காலம்,
வாத்தியாரைக் குருவை வணங்காக் காலம்,
அடங்காத பெண்டீர் சொல் கேட்கும் காலம்,
அரிவையர்க்கா ஆசைகொண்டு அழியும் காலம்,
கடன் காராக் குடும்படிக்கை சொல்லாக் காலம்,
கலிகாலம் காணும் இதைக காலம் தானே (14)

''வைச்ச பொருள்தனை எடுத்துக்கொள்ளும் காலம்,
வகை பேசி மிகப் பொருளை வாங்கும் காலம்,
இச்சை பல பேசி வயிறு வளர்க்கும் காலம்,
இயல் பழிப்புப் பேசி வசை ஏசும் காலம்,
தச்சு சருமான் கூலி கொடாத காலம்,
தடத்தனில் முள் அடைத்து வழி தடுக்கும்காலம்,
சச்சுகளை பேச்சு வைதது திரியும் காலம்,
கலிகாலம் காணும் இந்தக் காலம் தானே, (15

"உதிக்கின்றோன் எதிர் எச்சில் ஊற்றும் காலம்,
ஊமை குருடரை அடித்தே ஓட்டும் காலம்,
பதிவிரதை தன்னை நினைந்தழிக்கும் காலம்
பசித்து வந்தோர்க்கன்னமது பகவாக் காலம்,
நதிதனிலே அம்மணத்தில் குளிக்கும் காலம்.
நல்லோரைப் பழுது சொல்லி நகைக்கும் காலம்,
கதிபெறவே அரிஅரனைப் பணியாக் காலம்,
கலிகாலம் காணும் இந்தக் காலந்தானே. (16)

"இனிதான பதார்த்தமதே உண்ணும் வீட்டில்
இரண்டு நினைத்து அவர்களையே ஏசுங்காலம்,
முனி மறையோர் தமைப் பழுது சொல்லுங்காலம்,
மோட்ச ஞானமில்லாமல மீடுங்காலம்
அநியாயமாய் ஏழை உடைமைதனைப் பறிக்குங்காலம்,
அடித்துதைத்துப் பறித்துண்ணும் அநீதிக்காலம்,
கனிவான பேச்சுரைத்துத் திரியுங்காலம்,
கலிகாலம் காணும் இந்தக் காலந்தானே. (17)

"மண்ணுதனிலிருந்து நெறி சொல்லாக் காலம்,
வழக்கழிவு பேசியே வாயடிக்குங் காலம்,
அண்ணனிட மனைவிதன்னை அழிக்குங்காலம்,
ஆண்டி பரதேசிதன்னை அடிக்குங்காலம்,
உண்ணுமனையி லிரண்டு நினைந்தழிக்குங்காலம்,
உடற்பிறப்புந் தாய் குருவை ஓட்டுங்காலம்,
கண்ணிபொறி இட்டு உயிரை வதைக்குங்காலம்,
கலிகாலம் காணும் இந்தக் காலந்தானே. (18)

"செவியில் ரகசியமுரைத்துக் கடுதடுக்குங்காலம்;
செந்தமிழ்நூல் மறையவரைச் செருக்குங்காலம்,
சகியாக வுண்மனையில் சதிக்குங்காலம்,
சண்டையிட்டு அரமனையில் தள்ளுங்காலம்,
புவிமீதில் மனை ஏதென்றடிக்குங் காலம்,
புதுக்குடிவந்து தறமுறையைப் போக்குங்காலம்,
குவியாகப் பிழைபுலவோர் சொல்லுங்காலம்,
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே. (19)

"சாணுகமவளாககறால் பயிருட்டண காலம்",
சண்டையிட்டுத் தகப்பனைச் செய்சதிக்குங்காலம்
தானுகத் திருப்புதனை நடத்துங்காலம்,
துணையாய்ப் போய் வழிபறிக்கத் துணியுங்காலம்,

காணுமல் அயல்மனையில் திருடுங்காலம்,
நத்தாத மடந்தையரை நத்துங்காலம்,
காணுததைக் கண்டோமென் றுரைக்குங்காலம்,
கலிகாலங்காணுமித்தக் காலம்தானே. (20)

"பெண்டுகள்தான் புருடன் மயிர் பிடிக்குங்காலம்,
பிள்ளைகள் தாய்தனை யடித்துப் பிணக்குங்காலம்,
தொண்டுகள் ஆண்டாட்சிகளை ஏசுங்காலம்,
துரும்பரிடமொழி மேலாய்ச் செல்லுங்காலம்,
மிண்டித்துத் திரிவாரோ டிணங்குங் காலம்,
மிகைபேசி வேசியர்க்காய் வெட்டுங்காலம்,
கண்டிதமாய் வழக்கு நன்றாய்ச் சொல்லாக்காலம்,
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே (21)

"அப்புவியில் அனியாயம் பண்ணுங்காலம்,
அரசனுமே மொழிபுரட்டி அடிக்குங்காலம்,
நம்பியிருந்தோர் தமையும் கெடுக்குங்காலம்,
நன்மை செய்யாக் கன்மமிது நடக்குங்காலம்,
வம்படித்துத் திரிவாரோ டிணங்குங்காலம்,
வஞ்சனைகள் செய்துயிரைவதைக்குங்காலம்;
கம்பளியும் கரிசதுணியும் உடுக்குங்காலம்,
கலிகாலம் காணும் இந்தக் காலந்தானே. (22)

"மண்ணின் கீழ் திரவியத்தை வைக்குங் காலம்,
அவனென்றும் பொலி எருதை வதைக்குங்காலம்,
புண்ணிய மிது பாவமிது என்ற றியாக் காலம்,
பூசுரரை நிந்தைகளே புகலுங்காலம்,
பண்ணின பாவந்தன்னை அறியாக்காலம்,
பழி கொலைக்கும் அஞ்சாத பாவக்காலம்,
கண்ணப்பர் உமையாளைப் பணியாக்காலம்,
கலிகாலம் காணும் இந்தக் காலந்தானே (23)

" தூது விட்டுப் பெண்டுகளை அழைக்குங் காலம்,
சுத்தரைப் போல் மனிதருடன் தொடருங் காலம்,
ஓதுவித்த கூலிதனைக் கொடாத காலம்,
உபசாரப் பேச்சுகளே உதவுங் காலம்,
சூதுகற்ற பேருடனே இணங்குங் காலம்,
சொல் வசனம் மறந்துபோய்ச் சொல்லுங் காலம்,
"காதறுந்த அ...தமயிருக்குங் காலம்,"
கலிகாலம் காணும்]இந்தக் காலந்தானே, (24)

"விடையேறும் அரன் உமையை நினையாக்காலம்,
"வேதத்தை"யும் படையில்விழ விடுக்குங்காலம்,
நடையாகும் தடந்தன்னை அடைக்குங்காலம்,
நாவு இரண்டுபேசியே நடக்குங்காலம்,
அடைவாசத் துரைகளுமே அறியாக்காலம்,
அநியாயம் அபயமென்ன அடிக்குங்காலம்,
சண்டாளியோடுறவு செய்யுங்காலம்.
கலிகாலங்காணும் இந்தக் காலந்தானே. (25)
"இடங்கொடுத்த வீட்டிலிரண்டு நினைக்குங்காலம்,
எல்லையில்லா எல்லைகட்டி யிறக்குங்காலம்,
உடம்படியா எவரெவர்க்கும் உரையாக்காலம்,
உத்தண்டமாயடித்தே ஓட்டுங்காலம்,
படம் விரிக்கும் பாம்புதன்னை அடிக்குங்காலம்,
பல ஸ்திரீயைப் பெண்டெனவே படைக்குங்காலம்,
சண்படுத்தித் திரிவாரோடு இணங்குங்காலம்,
கலிகாலங்காணும் இந்தக் காலந்தானே." (26)

மகாகணபதி துணையுண்டு.

வெங்கடாசலமய்யன் கலியுகமாலை படித்து வளர்கின்றான்.

"ஸ்ரீராமஜெயம்."

# மாதர் பகுதி.

## பண்டிதை ராமாபாய்*

ஸ்ரீமதி M. லக்ஷ்மியம்மாள், A. Hons. (Lond.) L. T., சென்னை

(476-ம் பக்கத் தொடர்ச்சி).

*பண்டிதை ராமாபாய் ஸரஸ்வதி ஜீவிய சரித்திரம் Mrs. Paul Appasawmy, B. A., எழுதியது. விலை 0-10-0 C. L. S., பார்கடவுன், சென்னை.

இந்திய உத்தமி ஒருத்தியின் கற்பனைக்கதையை எழுதுவதாயின், பதிவிரதா சிரோமணியாய், எவ்விதத் துயரங்கள் நேர்ந்தகாலத்தும் மனங்கலங்காது பொறுத்திருக்கும் புண்ணியவதியாய் விளங்கினள் என்றும்; ஐரோப்பிய உத்தமி ஒருத்தியை வருணிப்பதாயின், தளராத ஊக்கத்தோடு சிரமசாத்தியமான காரியங்களைச்

செய்து முடித்துத் தன்னயங்கருதாப் பரோபகாரியென்னும் புகழ் படைந்தாள் என்றும், கூறுவது பொருந்தும. பண்டிதை ராமாபாய் ஸரஸ்வதியின் உண்மையான ஜீவிய சரித்திரம், இவ்விரண்டு பாவனைகளும் ஒன்று சேர்ந்தனபோலுள்ளது; கட்டுக் கதைகளைக்காட்டிலும் ஸாரமாய் உருக்கமாய் அதிசயமாயுள்ளது. இப்படிப்பட்ட வரலாற்றைத் தமிழ் மக்களுக்குப பயனுரும்படி எழுதியுதவிய ஸ்ரீமதி இ. எஸ். அப்பாசாமி யம்மாளுக்கு, நாம் நன்றிபாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

ராமாபாயின் தகப்பனார், அநந்த சாஸ்திரி, மங்களூரில், ஒரு பணக்கார பிராமண குடும்பததைச சேர்ந்தவர்: பேர்போன ஸமஸ்கிருத வித்வான்; பெரிய யாத்திரி. முதல் மனைவி இறந்துவிட்ட பிறகு, நாற்பத்து நான்காம் வயதில், நேபாளம்வரை போய்த்திரும்பி வரும் வழியில், அவர், குடும்பத்துடன் காசி யாத்திரை போய்க் கொண்டிருந்த மற்றொரு சாஸ்திரியாரைச் சந்தித்து, அவருடைய பெண் ஒன்பது வயதான லக்ஷ்மிபாயைக் கல்யாணம் செய்துகொண்டார். ஊருக்கு வந்து அனந்த சாஸ்திரி தன் குழந்தை மனைவிக்கு ஸமஸ்கிருதம சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். பெண்களும், பிரமசாரிகளாய்ப் படித்து, இருபத்தைந்து வயது வரைகூட விவாகம செய்து கொள்ளாமலிருப்பது சாஸ்த்ரோக்தமானது தான் என்பது அவர் கொள்கை. ஹிந்து ஆசார அனுஷ்டானங்கள் சிலவற்றில் தனக்கு நம்பிக்கையற்றுப் போனதும், அவற்றை விட்டுவிட்டு, அதற்காக ஊரார் உபத்திரவம் செய்ய ஆரம்பித்தவுடன், அவர் ஊருக்கப்பால் காட்டில் குடிசை கட்டிக்கொண்டு மனைவியுடன் அங்கு போய் இருந்தார். பிடிவாதமும், அஞ்சாநெஞ்சமும் கல்வி வன்மையும், ராமாபாய்க்குத் தகப்பனாரிடமிருந்து வந்த குணங்கள் என்றே தோன்றுகிறது. நாளடைவில தன் பாண்டித்தியத்தால் விரோதிகளை வாயடங்கச் செய்து, கங்கமூலம் என்ற வனப் பிரதேசத்தில், அனந்த சாஸ்திரி வீடும தோட்டமுமாய், சிஷ்யர்களும் சுற்றத்தாரும் சூழப் பெரும் குடும்பியாய் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு பெண்ணும பிள்ளையும் இருந்தார்கள். மூன்றாவது குழந்தை ராமாபாய் 1858-வது வருஷத்தில் பிறந்தாள். அந்த ஸமயத்தில் ஒரு காரியஸ்தனுடைய அயோக்கியத்தனத்தால அனந்த சாஸ்திரிக்குக் கடன் மேலிட்டு, ஆஸ்தி எல்லாம் அழிந்து போய்விட்டது. ஊரை விட்டு, அவர் மனைவிமக்களுடன் பிரயாணம் புறப்பட்டார். திருப்பதி முதல் துவாரகைவரை க்ஷேத்திரங்கள் எங்கும் சென்றலைந்து, உபர்

ரியாசங்கள் செய்து, இரவாமல் பெற்ற தானங்களைக் கொண்டு அவர் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். பெற்றோர் இருவரும் ராமாபாய்க்கு ஸம்ஸ்கிருதம் நன்றாய்ச் சொல்லி வைத்தார்கள். சில விதங்களில் ஹிந்து ஆசாரத்தைக் கைவிட்ட போதிலும், அவர்கள் தீவிர தெய்வபக்தியுடன் சிரமமான விரதங்களையெல்லாம் செய்து முடித்தார்கள். ஹிந்து மதத்தையே விட்டுக் கிருஸ்தவ மதத்தைத் தழுவிய பின்னும், ராமாபாய் மதம் மாறினாளேயொழிய, பிறவிப்பேறான பக்தி வைராக்கிய குணம் ஒருநாளும் மாறவில்லை. அனந்த சாஸ்திரிக்கு வயதாகிக் கண் குருடாய்ப்போய் விட்டது. அந்நாளில், நாடெங்கும் பஞ்சம்வந்து ஏழைகளுக்கு இரங்குவோரைக் கண்டுபிடிப்பது அரிதாய்விட்டது. சாஸ்திரியும் அவர் மனைவிமக்களும் உள்ளதையெல்லாம் விற்று, ஊரூராய் அலைந்து, பசியால் வருந்திப் பட்ட கொடுமை கொஞ்சமல்ல. ஒருதடவை எல்லாருமாய்க் காட்டுக்குப்போய் குளத்தில் விழுந்து சாவதென்று யத்தனித்தார்கள்; அப்புறம் ஒருவரையொருவர் தடுத்துக்கொண்டார்கள். முக்கியமாய்ப் பசி காரணமாகவே வியாதிப்பட்டு, அனந்த சாஸ்திரியும் அவர் மனைவியும், மூத்தமகளும் ஒருவர்பின் ஒருவராய் மாண்டார்கள். பிறகு ராமாபாயும் அவள் தமையனும் பல வருஷங்களாக, வட இந்தியா முழுவதும் ஸ்தல யாத்திரை செய்தார்கள். ஒரு தடவை, பஞ்சாபில், போர்வையில்லாமல் குளிர் பொறுக்காது ஆற்றங்கரை மணலில் குழிதோண்டி அதில் புதைந்து உட்கார்ந்திருந்தார்கள். இவ்வுலகில் பொருளில்லாதார் படும் கஷ்டங்களைத் தாமும் அநுபவித்துப் பிறரும் அநுபவிக்கப் பார்த்தார்கள்.

கடைசியில் ராமாபாய்க்கு இருபது வயதாகும் பொழுது, அவளும் அவள் தமையனும் கல்கத்தாவுக்குவந்து, சில பண்டிதர்களையும் பெரிய மனுஷர்களையும் சந்திக்க நேர்ந்தது. ராமாபாயின் அபூர்வ ஸம்ஸ்கிருத ஞானத்தைக்கண்டு அதிசயித்து, வித்வான்கள் சபைகூடி அவளைப் பரீக்ஷித்து, பண்டிதை என்றும் ஸரஸ்வதி என்றும் பட்டங்கள் கொடுத்தார்கள். அவள் புகழ் பரவி, பெண் கல்வியைப்பற்றி அவள் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தாள்.

தமையனும் வியாதியால் மடிய, ராமாபாய் முற்றிலும் அனாதையானாள். தெய்வமே துணை என்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள். பிறகு தன இருபத்திரண்டாவது வயதில், பிப்பின் பிகாரிமேதாவி என்ற வக்கீலைக் கல்யாணம் செய்துகொண்டு சில காலம் ஸந்தோஷ

மாயிருந்தாள். முதல் குழந்தை, மனோரமா என்ற பெண் பிறந்து சில மாதங்களானவுடன், அவள் கணவர் 'காலரா'வில் இறந்துபோய் விட்டார்.

இதுவரை ராமாபாய் பொறுக்கொணுத் துன்பங்களைப் பொறுத்து வாழ்ந்தாள்; இனிமேல் தனது பரோபகாரச் செய்கைகளால் சிறந்து விளங்கினாள். மற்றப் பெண்களின் கஷ்டங்களைக் கூடிய வரையும் நீக்குவதையே பெரும் கடமையாகக் கொண்டாள். ஆசாரச் சீர்திருத்தக் காரருடன் சேர்ந்து ஸ்திரீ சுதந்தரத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்து "ஆரிய மகிலாஸமாஜம்" என்ற சங்கத்தைப் பூனாவில் ஸ்தாபித்தாள். ஒரு மிஷனெரி துரைசானியிடம் தான் இங்கிலீஷ் கற்றுக்கொண்டாள். பெண் கல்விக்காகப் பரிந்து, ஹன்டர் கமிஷனுக்கெதிரில் சாக்ஷியம் சொன்னாள். இந்திய விதவைகளைப் படிப்பித்து உபாத்திமார்களாக்கி அவர்கள் மூலமாய்ப் பெண் கல்வியைப் பெருக்கவேண்டும் என்ற ஆசை தூண்ட, அதற்கு முதலில் தன்னைப் பயிற்றுக் கொள்ளும் பொருட்டுத் தன் குழந்தையுடன் இங்கிலாந்துக்குப் போனாள். 'மாதர் ஒழுக்கம்' என்று அவள் எழுதிய ஒரு புஸ்தகம் விற்ற லாபமும் இதற்கென்று கல்கத்தாவில் சேர்த்த நிதியுமாக அவளுக்குப் போதுமான பணம் இருந்தது. இங்கிலாந்தில் அவள் மிஷனெரிகளுடன் வாழ்ந்து கிருஸ்தவ மதபிரசாரத்தைக் கேட்க நேர்ந்தது. முதலில் அவளுக்கு அதில் மனம்கொள்ளவில்லை; பிறகு கேட்கக் கேட்க, அவளுக்குக் கிருஸ்தவ மதத்திலேயே நம்பிக்கை வேரூன்றி, அவள் மதம் மாறி, சாகும்வரை மத வைராக்கியத்தில் தன் கவலைகளை யெல்லாம் மறந்து, தெய்வபக்தியில் ஈடுபட்டு ஆழ்ந்த தியானம் செய்பவளாயிருந்தாள். அவள் கிருஸ்தவ மதத்தைத் தழுவியது கிருஸ்தவர்களுக்கு சந்தோஷமாயும், ஹிந்துக்களுக்குக் கோபமாயும் கிலேசமாயு மிருந்தது; முக்கியமாய், அவள் புண்பட்ட நெஞ்சுக்கு ஆறுதலாயும், அவள் எடுத்துக் கொண்ட காரியத்துக்கு உதவியாயுமிருந்தது.

நடையுடை பாவனைகளில் ராமாபாய் ஒருநாளும் வெள்ளைக்காரரைப் பின்பற்றவில்லை. காய்கறிப் பதார்த்தங்களைத் தவிர வேறொன்றும் சாப்பிடவில்லை. சாதாரண வெள்ளைப்புடவை உடுத்தியிருந்தாள்.

இங்கிலாந்திலிருந்து அவள் அமெரிகாவுக்குப் போய் இந்திய விதவைகளின் முன்னேற்றத்தைக் கோரி பிரசங்கங்கள் செய்து,

நிதி திரட்டி, ஒரு சங்கம் ஸ்தாபித்தாள். இந்தியாவுக்குத் திரும்பி வந்து "சாரதா ஸதன்" என்ற விதவைகள் கல்லூரியைப் பூனுவில் கடைசியாக ஏற்படுத்தினுள். அவள் முன்மாதிரியைக் கண்டு மாணவிகள் பலர் தாமும் கிருஸ்துவர்களானது காரணமாக ஹிந்துக் களுக்கும் ராமாபாய்க்கும் ஆகாது போனதாலும், பணக்குறைவாலும் முதலில் வெகு இக்கட்டாயிருந்தது; ஆனுல் ராமாபாய் தான் எடுத்த காரியத்தைத் தாழவிடவில்லை. உற்றநண்பர்களும் அவளுக்கு உதவி செய்தார்கள். விதவைகளின் தொகையும் கல்லூரியின் மேம்பாடும் அதிகரித்தது. பல மாணவிகள் கிருஸ்தவர்களுமானுர்கள்.

உற்றுரின்றிப் பாடுபட்டு வருந்தும் விதவைகளை, ராமாபாயும் அவளுடன் உழைத்தவரும் தேடிக் கண்டு பிடித்துக்கொண்டு வரு வது வழக்கம். கற்பழிந்த தாய்மார் சந்தியில் விட்டுப்போன குழந்தை களையும் எடுத்து ஆதரிப்பார்கள். பத்தொன்பதாவது நூற்றுண்டுக் கடைசியில் நாடெங்கும் கொடியபஞ்சம் பரவின்போது, ராமாபாய் அங்கங்கேபோய் வயிற்றுப்பிழைப்புக்காக மானத்தை விற்கத் துணி ந்த பெண்களைத்திரட்டித் தன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் பாது காத்தாள். இரண்டாமுறை அமெரிக்காவுக்குப் போய்ப் பணம் சேர் த்து வந்தாள். பூனுவுக்கருகே கெட்கானி லிருந்த காட்டுப் பிரதே சத்தை முக்திவாஸம், என்ற குடியேற்றமாக மாற்றி, ஆண், பெண், குழந்தை பெரியவர்களில் திக்கற்றவர்களைக் கொண்டுபோய்ச் சேர் த்து வேதக் கோவிலும்,பள்ளிக்கூடங்களும் ஆஸ்பத்திரியும், அச்சுக் கூடமும், தோட்டங்களும், தொழிற்சாலைகளும் அங்கு ஏற்படும்படி செய்தாள்; முக்கியமாய் சீரழிந்து போன பெண்களை அங்கே சேர் த்து, அவர்களுக்கு வேண்டியபடி சிகிச்சை செய்து, கைத்தொழி லோ, படிப்போ கற்பித்து, நல்லொழுக்கத்தையும் மதபோதனையை யும் அவர்களுக்குப் புகட்டுவதில் வெகு சிரமமெடுத்துக் கொண் டாள். இரக்கம் குடிகொண்ட மனத்தவளாயினும், ராமாபாய் இளக் கார நெஞ்சுடையவளில்லை. தப்புச் செய்தவர்களைக் கண்டனை தண் டனைகளால் திருத்துவதற்கு அவள் பின் வாங்குவதில்லை. நயமாயும் பேசத் தெரிந்தவள், எல்லா விதத்திலும் காரியக்காரி. அவள் நிய மித்த ஸ்தாபனங்கள் பரோபகாரார்த்தமாய் இன்னும் நடந்து வரு கின்றன.

ராமாபாயின் ஒரே மகள் மனுேரமாபாய் சீமையில் படித்து வந்து தன் தாய்க்கு எல்லாக் காரியங்களிலும் வலது கை போலிரு ந்து உதவி செய்தவள், கடைசியில் வியாதிப்பட்டு, தாய்க்கு முன்பு

செத்துபோய் விட்டாள். தெய்வ சித்தம் இது என்று ராமாபாய் தன் துக்கத்தை அடக்கப்பார்த்தாள். கொஞ்ச காலத்துக்குள் 1922 ஆவது வருஷத்தில் அவள் இறந்து போனாள். அமெரிக்காவிலும் ஐரோப்பிலும் இந்தியாவிலும் பலர் அச்செய்தியைக் கேட்டு அவளை மெச்சிக்கொண்டாடி விசனித்தார்கள்.

ராமாபாயின் கதைச் சுருக்கம் இது. அவள் வாழ்க்கையின் சம்பவங்களையும், அவள் மனோதிடத்தையும் பரோபகாரத்தையும் விரித்துக்கூறும் இந்நூலை எல்லாரும் வாங்கி வாசித்துப் பயன்பெறுவார்களாக.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மௌண்ட்ரோட், சென்னை.